ஸ்ரீ தமிழ்
உண்மை நின்றிட வேண்டும்

# வையத் தலைமை கொள்!

**ஆசிரியர் – பதிப்பாளர் :**
இல. பத்மப்ரியா

**பொறுப்பாசிரியர் :**
வெ. ஜெயராமன்

**துணை ஆசிரியர்கள் :**
நா. பாஸ்கரன்
சி. பாண்டிக்குமார்

**வடிவமைப்பு :**
ஸ்ரீஸ்வயம்

**சட்ட ஆலோசகர்கள் :**
இல. ஸ்ரீராம்
த. பாஸ்கர்

**அலுவலக முகவரி:**
ஸ்ரீ தமிழ்
77/6, 10வது அவென்யூ,
அசோக்நகர்,
சென்னை –600 083

70102 81932

http://www.shreetv.tv
facebook.com/shreetv
x.com/Shreetv media
youtube com/ShreeTV
shreemedia.news@gmail.com

Press and Registration of Books Act-ன்படி எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை.

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு ஸ்ரீ தமிழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகளின் கருத்துகள் படைப்பாளர்களின் சொந்தக் கருத்துகளே!

**தனி பிரதி: ரூ 30/–**
**ஆண்டு சந்தா: ரூ 600/–**

வெனிசுவேலா அதிபரைக் கடத்தி கைது செய்தது அமெரிக்கா. அமெரிக்க உளவு நிறுவனத்தினர் வெனிசுவேலா பாதுகாப்புப் படையில் ஊடுருவி, அந்நாட்டினர் உதவியுடன் வெனிசுவேலா அதிபரைக் கடத்திக் கைது செய்தனர். அமெரிக்காவை போதை மயமாக்கும் வெனிசுவேலாவைக் கட்டுப்படுத்தவே நடவடிக்கை எடுத்திருப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் சொன்னாலும், வெனிசுவேலா எண்ணெய் அமெரிக்காவிற்கே என்றார் அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ரூபியோ. மேலும் அவர் கூறுகையில், உலகின் மேற்கு பாகத்தில் சீனாவையும், ரஷ்யாவையும் கால் பதிக்க அனுமதிக்க முடியாது என்றார். எந்த மேலை நாடும், சுயமாக செயல்படக்கூடாது, அமெரிக்க அடிமையாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதே இதன் பொருள். அமெரிக்காவின், எதிரி நாடுகளான சீனாவும், ரஷ்யாவும் அமெரிக்காவின் அருகில் காலூன்றினால் ஆபத்து என்று கருதுகிறது அமெரிக்கா!


இந்தப் பரபரப்பு அடங்குவதற்கு முன், கொலம்பியா, கிரீன்லேண்ட் போன்ற நாடுகளை ஆக்கிரமிக்கும் திட்டம் இருப்பதாக அமெரிக்கா சமிக்ஞை கொடுத்து வருகிறது. கிரீன் லேண்ட் ஆக்கிரமிப்பு கூடாது என்று ஐரோப்பிய நாடுகள் குரல் கொடுத்துள்ளன. அமெரிக்க அதிபர் டிரம்ப் தான் பல போர்களை நிறுத்தியுள்ளேன் என்று மார்தட்டிக் கொள்கிறார் ஆனால் ரஷ்ய-உக்ரேன் போர் தொடர்கிறது, இஸ்ரேல்-ஹமாஸ் சண்டையும் ஓய்ந்த பாடில்லை, தாய்லாந்து-கம்போடியா போர் என்று எல்லா பக்கமும் போர்கள்! இதற்கிடையில் அமெரிக்காவின் கூட்டாளிகளான சௌதி அரேபியாவிற்கும், ஐக்கிய அமீரகத்திற்கும் இடையே போர் மூண்டுள்ளது. அமெரிக்கா முயன்றும் எந்தப் போரையும் நிறுத்தமுடியவில்லை.

உலக சுகாதார மையம் போன்ற 66 சர்வதேச அமைப்புகளிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளது. அமெரிக்காவின் ஆதிக்கத்தை மறைமுகமாக செலுத்தும் நிறுவனங்களிலிருந்து அமெரிக்கா வெளியேறும் நிலை என்பது சாதாரண விஷயமில்லை. சுருக்கமாகச் சொன்னால் அமெரிக்கா நண்பர்களையும் இழந்து வருகிறது, அதன் அதிகாரத்தையும் இழந்து வருகிறது!

அமெரிக்காவின் இடத்தைப் பிடிக்க சீனாவால் முடியாது. கம்யூனிச சித்தாந்தத்தை உலகம் ஏற்காது! இரஷ்யாவையும் உலகம் ஏற்காது ! இந்த இடத்தைப் பிடிக்கும் தகுதி உள்ள ஒரே நாடு நம் இந்தியா ! தொடர்ந்து பல ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சியில் முதலிடம், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஆயுத ஏற்றுமதி, உலகெங்கும் பேரிடர் நிவாரணத்தில் முதன்மை, ஸ்திரமான ஜனநாயகம் என்று வல்லரசு நாட்டிற்கான கூறுகள் அனைத்தையும் விரிவாக்கி வருகிறது இந்தியா. இதை உணர்ந்த எதிரி நாடுகளும், இந்திய எதிர்ப்பாளர்களும், இந்தியாவிற்கு எதிரான கருத்தாக்கத்தை உலகம் முழுவதும் ஏற்படுத்தி வருகின்றனர். இந்தச் சதிச் செயலுக்கு நம் நாட்டிலுள்ள புல்லுருவிகள் துணை போகின்றனர்.

இந்த இடர்களை களைந்து பாரதம் உலகின் குருவாக உருவெடுக்கும். வையத் தலைமை கொள் என்ற பாரதியின் தீர்க்க தரிசனத்தை விரைவில் உலகம் காணும்!!

# முருகன் மலை முஸ்லீம்களுக்கு... அரசின் அராஜகத்தைத் தடுத்த நீதிமன்ற தீர்ப்பு



பால கௌதமன்

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பது பழமொழி. மிருகங்களை விட இழி பிறவியாக இருந்தால் எத்தனை சூடு பட்டாலும் அதைப்பற்றி கவலைப்படாமல் இருக்கும் ஜந்துக்களை என்ன சொல்லலாம். 1996ம் ஆண்டு திருப்பரங்குன்றம் மலை மீது தீபம் ஏற்ற நீதியரசர் கனகராஜ் உத்தரவிட்டார். அந்த தீர்ப்பைத் தொடர்ந்து செயல்படுத்தாமல் இருந்தது தமிழ்நாடு ஹிந்து அறநிலையத்துறை. 2025ம் ஆண்டு கார்த்திகை திருநாளன்று திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்ற வேண்டும் என்று கோவில் நிர்வாகத்திடம் விண்ணப்பித்தனர் ஹிந்துக்கள். தீபம் ஏற்ற முடியாது என்று நவம்பர் மாதம் மறுப்பு கடிதம் வழங்கியது கோவில் நிர்வாகம். கோவில் நிர்வாகம் மறுக்கவே, ஹிந்துக்கள் நீதிமன்றத்தை நாடினர். டிசம்பர் 1 2025 அன்று திருப்பரங்குன்றம் மலை மீது தீபம் ஏற்ற வேண்டும் என்று

நீதியரசர் ஜி.ஆர். ஸ்வாமிநாதன் அவர்கள் உத்தரவிட்டார். கார்த்திகை திருநாளான டிசம்பர் 3 2025 அன்று கோவில் நிர்வாகம் தீபம் ஏற்ற மறுத்தது, ஹிந்துக்கள் கோவில் நிர்வாகத்தின் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கைத் தொடர்ந்தனர். நிர்வாகத்தால் முடியவில்லையென்றால் மனுதாரர் காவல்துறை உதவியுடன் தீபம் ஏற்றலாம் என நீதிபதி உத்தரவிட்டார். இந்த உத்தரவை செயல்படுத்த முடியாது என்று காவல்துறை நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்டது. தமிழக காவல்துறையால் பாதுகாப்பு அளிக்க முடியவில்லையென்றால் மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை உதவியுடன் மனுதாரர்கள் தீபம் ஏற்ற நீதிபதி உத்தரவிட்டார்.



நீதிபதி உத்தரவிட்டவுடன் 144 தடையுத்தரவை பிறப்பித்தார் மாவட்ட ஆட்சித்தலைவர். ஹிந்துக்கள் தீபம் ஏற்றுவதை தடுத்தது காவல்துறை. ஹிந்துக்கள் மீண்டும் நீதிமன்றத்தை நாடினர். மதுரை காவல்துறை ஆணையர் பாதுகாப்புடன் ஹிந்துக்கள் தீபம் ஏற்ற வேண்டும் என்றும் 144 தடையுத்தரவு ரத்து செய்யப்படும் என்று நீதியரசர் ஸ்வாமிநாதன் உத்தரவு பிறப்பித்தார். இந்த உத்தரவையும் மதிக்காமல் இனிகோ திவ்யன் என்ற காவல்துறை அதிகாரி தீபம் ஏற்ற சென்ற பக்தர்களை கைது செய்தார். இந்நிலையில், தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் ஒரு மேல் முறையீடு செய்தது. மேல் முறையீட்டு மனுவில் பல தவறுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டி அவற்றை திருத்தி மனு தாக்கல் செய்ய உச்சநீ திமன்ற ரெஜிஸ்டரி தெரிவித்தது. தமிழக அரசோ எந்த நடவடிக்கையும் எடுக்காமல் உச்சநீதிமன்றத்தை நாடியுள்ளோம் என்று ஜி.ஆர். ஸ்வாமிநாதன் அவர்கள் விசாரித்து வந்த வழக்கிற்குத் தடை கோரியது. உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யும் அதே சமயத்தில் நீதியரசர் ஜெயசந்திரன், நீதியரசர் ராமகிருஷ்ணன் அடங்கிய அமர்வின் முன் தீபம் ஏற்றுவது தொடர்பாகவும், நீதிமன்ற அவமதிப்பை ரத்து செய்ய வேண்டியும் வழக்கு தாக்கல் செய்தது தமிழக அரசு. நீதிமன்ற போராட்டம் நிலுவையில் இருக்க நீதிபதிகளை மிரட்ட திரு ஜி.ஆர். ஸ்வாமிநாதன் அவர்கள் மீது பாராளுமன்ற பணி நீக்க நடவடிக்கையை மேற்கொள்ள லோக்சபா சபாநாயகரிடம் விண்ணப்பித்தது. நீதியரசர் ஜி.ஆர். ஸ்வாமிநாதன் அவர்கள் குறித்து பல அவதூறுகளை அள்ளி வீசியதுடன் நீதிமன்றங்களை அவமதிக்கும் விதமாக பிரச்சாரங்களை மேற்கொண்டது திமுக.

மலையில் இருப்பது சர்வே கல் என்று திமுகவின் எம்பி கனிமொழி தெரிவித்தார். ஹிந்து அறநிலையத்துறையின் சார்பில் வாதாடிய வழக்கறிஞர் ஜோதி அங்கிருக்கும் தீபத்தூண்

> **144 தடையுத்தரவை நீதிமன்றம் ரத்து செய்த பின்னும் தீபம் ஏற்ற அனுமதிக்காமல் தடுத்தது என்று குற்றங்களை தெளிவாக பட்டியலிட்டார்.**



சமணர்களுடையது என்றார். கோவிலின் தீபத்தூணை கோவிலின் வழக்கறிஞரே கோவிலுடையது அல்ல என்று வாதிட்டது இந்து அறநிலையத்துறையின் ஹிந்து விரோதப் போக்கை வெளிப்படுத்தியது.

சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரும் என்பதால் தீபம் ஏற்ற அனுமதிக்க முடியாது என்று வாதிட்டது தமிழக அரசு. நீதியரசர் ஸ்வாமிநாதன் அவர்கள் முஸ்லீம்களைக் கேட்காமல் தீர்ப்பளித்தார் என்று சொல்லி வக்ஃப் வாரியமும் வழக்கில் சேர்ந்து கொண்டது. தீபத்தூணுக்கு உரிமை கொண்டாடியது. ஹிந்துக்கள் தரப்பில் வாதாடிய வழக்கறிஞர்கள் 1923ம் ஆண்டு நீதிமன்ற தீர்ப்பிலிருந்து தொடங்கி, இலக்கிய, கல்வெட்டு, தலபுராண ஆதாரங்களை முன் வைத்து வாதாடினார்கள்.

அனைத்து தரப்பினரின் வாதங்களைக் கேட்ட நீதியரசர்கள் ஜனவரி 6 2026ம் தேதியன்று தீர்ப்பு வழங்கினர். திருப்பரங்குன்றம் மலை மீதுள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தனர். சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்பது சிறுபிள்ளைத்தனமான வாதம். ஆண்டிற்கு ஒருமுறை ஏற்றப்படும் தீபத்திற்கு ஒரு வல்லமை வாய்ந்த அரசால் பாதுகாப்பு அளிக்க முடியாது என்பது நகைப்பிற்குரியது. சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வேண்டுமென்றால் அது அரசின் துணைக் கொண்டு தான் ஏற்படும். அரசியல் லாபத்திற்காக சட்டம் ஒழுங்கு பிரச்சினையைக் காரணம் காட்டுவது, இந்த அரசு எந்தளவு கீழ்தரமாக இறங்கியுள்ளது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இப்படி ஒரு கீழான செயலை எந்த அரசும் செய்யாமல் இருக்க பிரார்த்திக்கிறேன் என்று நீதிபதி தமிழக அரசின் விஷமத்தனத்தை தோலுரித்தார். அத்துடன் நின்றுவிடாமல் மதங்களுக்கிடையே மோதல்களை ஏற்படுத்தும் செயலை மாநில அரசு செய்வதாக குற்றம் சாட்டியுள்ளார். மேலும், உள்நோக்கத்துடன் நீதிபதியின் உத்தரவை தமிழக அரசு செயல்படுத்தவில்லை என்பதை உறுதிபட தெரிவித்துள்ளார்கள்.

கோவிலுக்குச் சொந்தமான இடத்தில் விளக்கேற்றுவது தொடர்பான வழக்கில் வக்ஃப் வாரியத்திற்கு என்ன வேலை? என்று கேள்விகளை எழுப்பி தமிழக அரசின் மேல் முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்தார்கள். திரு ஜி.ஆர் ஸ்வாமிநாதன் மேற்கொண்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு விசாரணைக்குத் தடை இல்லை என்றும் நீதிபதிகள் உத்தரவில் குறிப்பிட்டுள்ளனர். இந்த தீர்ப்பு தமிழக அரசு மதகலவரத்தைத் தூண்டும் அரசு. ஹிந்து கோவில்களையும், கோவில் சொத்துக்களையும் ஹிந்துகளிடமிருந்து பறிக்கும் அரசு. நாட்டின் சட்டதிட்டங்களையும், அரசியலமைப்பு சட்டத்தையும் அவமதிக்கும் அரசு என்பதை உறுதி செய்துள்ளது.

இந்த தீர்ப்பு வந்தவுடன் இரண்டு நீதிபதிகளும் சட்டத்திற்கு புறம்பானா தீர்ப்பை வழங்கியுள்ளனர் என்று கொக்கரித்தார் சட்ட அமைச்சர் ரகுபதி. இந்த இரண்டு நீதிபதிகளையும் பணி நீக்கம் செய்ய கனிமொழி தலைமையில் எப்போது பாராளுமன்றம் செல்வார்கள் திமுக எம்பிக்கள்? இந்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றம் செல்ல இருப்பதாக சட்ட அமைச்சர் ரகுபதி கூறியுள்ளார். பிணத்தை சுடுகாட்டில் மட்டும் தான் எரிக்க முடியும் எல்லா இடங்களிலும் எரிக்க முடியாது. அதைப் போல் கார்த்திகை தீபத்தை கண்ட இடங்களில் ஏற்ற முடியாது என்று கார்த்திகை தீபத்தை பிணத்துடன் ஒப்பிட்டு ஹிந்துக்கள் மனதை புண்படுத்தினார் அமைச்சர் ரகுபதி. பிணத்தை சுடுகாட்டில் மட்டும் தான் எரிக்க வேண்டும் அல்லது புதைக்க வேண்டும் என்றால் கருணாநிதியின் பிணத்தை இடுகாட்டில் புதைத்திருக்கலாமே? ஏன் மெரினாவில் புதைக்க வேண்டும் என்று நள்ளிரவில் உயர்நீதிமன்ற கதவைத் தட்டி உத்தரவை பெற்றீர்கள்? இந்நிலையில், திரு ஜி.ஆர் ஸ்வாமிநாதன் அவர்கள் முன் விசாரணையில் இருந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஜனவரி 9 2026ம் தேதியன்று விசாரணைக்கு வந்தது. நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ப்ரவீண்குமார், மதுரை மாநகர காவல்துறை கண்காணிப்பாளர் திரு லோகநாதன், மாநகர துணை ஆணையர் இனிகோ திவ்யன், திருப்பரங்குன்றம் சுப்ரமண்ய ஸ்வாமி கோவில் நிர்வாக அதிகாரி திரு யக்ஞநாராயணன் ஆகியோர் நேரில் ஆஜராகினர். நீதிமன்ற தீர்ப்பை ஏன் நீங்கள் அவமதித்தீர்கள் என்ற கேள்விக்கு அதிகாரிகள் பதிலளிக்கவும் இல்லை. பிரமாண பத்திரம் தாக்கல்



**சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வேண்டுமென்றால் அது அரசின் துணைக் கொண்டு தான் ஏற்படும். அரசியல் லாபத்திற்காக சட்டம் ஒழுங்கு பிரச்சினையைக் காரணம் காட்டுகிறது**

செய்யவும் இல்லை. அமைச்சர் சேகர் பாபு உத்தரவின் பேரில் நீதிமன்ற அவமதிப்பு செய்தீர்களா என்ற கேள்விக்கு நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்ட அதிகாரிகள் பதிலளிக்கவில்லை. நீதிமன்ற அவமதிப்பாளர்கள் விரிவான பதிலளிக்க மீண்டும் அவகாசம் கேட்டனர். அரசு வழக்கறிஞருக்கு உடல்நலம் சரியில்லை என்று வீட்டுபாடம் எழுதாத மாணவன் ஆசிரியரிடம் சொல்வது போல் அரசு வழக்கறிஞர்கள் காரணம் சொன்னார்கள். இதைக் கேட்ட நீதிபதி உங்களுக்கு 4 வாரங்கள் அவகாசம் கொடுத்துள்ளேனே, இனி கால அவகாசத்தை நீட்டிக்க முடியாது என்று உறுதிபடச் சொன்னார். இந்த அதிகாரிகள் செய்த நீதிமன்ற அவமதிப்பிற்கு வருத்தம் கூட தெரிவிக்காமல் இருப்பது அடாவடித்தனத்தின் உச்சம். எனவே, பிப்ரவரி 2ம் தேதி இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வரும்நாளில் இந்த அதிகாரிகள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றார்.

மூன்று விதமான நீதிமன்ற அவமதிப்பு குற்றத்தைச் செய்துள்ளனர் இந்த அதிகாரிகள். டிசம்பர் 1 மலையின் மீது தீபம் ஏற்ற வேண்டும் என்ற உத்தரவை அமல்படுத்தாதது, பாதுகாப்புடன் பக்தர்கள் தீபம் ஏற்ற பிறப்பித்த உத்தரவைத் தடுக்கும் விதமாக 144 தடையுத்தரவை பிறப்பித்தது, 144 தடையுத்தரவை நீதிமன்றம் ரத்து செய்த பின்னும் தீபம் ஏற்ற அனுமதிக்காமல் தடுத்தது என்று குற்றங்களை தெளிவாகப் பட்டியலிட்டார்.

சுப்ரமண்ய ஸ்வாமி கோவிலுக்கு சொந்தமான மலை முகட்டில் இருக்கும் கல்லத்தி மரத்தில் முஸ்லீம்கள் பிறை கொடி ஏற்றினர். இதற்கு அனுமதி அளித்தீர்களா என்று ஆலய நிர்வாக அதிகாரியிடம் நீதிபதி ஜி.ஆர் ஸ்வாமிநாதன் அவர்கள் கேள்வி எழுப்பினார். அனுமதி கொடுக்கவில்லை என்றார் கோவில் நிர்வாக அதிகாரி. அப்படியென்றால் இது சட்ட விரோத நுழைவு அல்லவா (Criminal trespass) என்று நீதிபதி கேட்க, நாங்கள் தர்கா நிர்வாகத்தின் மீது காவல்துறையிடம் புகார் அளித்து நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறோம் என்றார் கோவில் நிர்வாக அதிகாரி. இந்த உத்தரவாதத்தைக் குறித்துக் கொள்ளுங்கள் என்று அரசு வழக்கறிஞரிடம் நீதிபதி கோடிட்டுக் காட்டினார். கோவில் தீபத்தூண் கோவிலுக்கு இல்லையென்று வாதாடும் இந்து அறநிலையத்துறை, கோவில் மரத்தில் பிறைக் கொடியை அனுமதிக்கிறது. நீதிபதி இதை




குறிப்பிடாமல் இருந்திருந்தால் கோவில் நிர்வாகம் முஸ்லீம் ஆக்ரமிப்பை அனுமதித்திருக்கும்! முருகன் மலையை முஸ்லீம்களுக்கு கொடுக்கும் திமுக அரசின் சதிக்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.!

திருப்பரங்குன்றம் மலையுச்சியில் தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்று நீதிபதி கனகராஜ் அவர்கள் 1996லிலும், ஜி.ஆர். ஸ்வாமிநாதன் 2025லும், நீதியரசர்கள் திரு ஜெயசந்திரன் மற்றும் திரு இராமகிருஷ்ணன் அவர்கள் 2026லும் உத்தரவிட்டுள்ளனர். இந்த தீர்ப்புகள் எதையும் ஏற்க மாட்டோம் எங்களுடையதே இறுதி தீர்ப்பு என்று நீதிமன்ற தீர்ப்புகளை தொடர்ந்து அவமதித்து வருகிறது திமுக அரசு. இந்தப் போக்கு ஜனநாயகத்திற்கு ஆபத்தானது.

நீதியரசர்கள் ஜெயச்சந்திரன் மற்றும் இராமகிருஷ்ணன் அவர்கள் மத மோதலை உருவாக்கவே திரு.ஜி.ஆர். ஸ்வாமிநாதன் அவர்களின் தீர்ப்பை இந்த அரசு அமல்படுத்தவில்லை என்று கூறியிருப்பதன் வாயிலாக மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மத மோதலை உருவாக்கும் சதி செயலை செய்துள்ளார்கள் என்பது உறுதியாகிறது. எனவே, நீதிமன்ற அவமதிப்பிற்கும் அப்பால் சமூக ஒற்றுமை, மத நல்லிணக்கம் போன்றவற்றைக் கெடுப்பதுடன் கலவரத்தைத் தூண்டும் பிரிவுகளின் கீழ் இந்த அதிகாரிகளின் மீது வழக்கு தொடரப்பட வேண்டும். மதகலவரத்தைத் தூண்டும் அரசு நீதிமன்றம் குற்றம் சாட்டியதற்குப் பின் திமுக அரசு பதவியில் இருப்பது சட்டவிரோதமல்லவா? சமூக வலைத்தள பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு கலவரம் ஏற்படக்கூடும் என்று நடவடிக்கை எடுக்கும் காவல்துறை கலவரத்தைத் தூண்டும் அரசு என்று நீதிமன்றமே குற்றம் சாட்டிய பின் உள்துறை அமைச்சராக இருக்கும் முதல்வர் ஸ்டாலின் மீது வழக்கு பதிவு செய்யாதது ஏன்? அமைச்சருக்கு ஒரு நியாயம், நாட்டு மக்களுக்கு ஒரு நியாயமா?

ராமகிருஷ்ணன்

# சுசீந்தரம் தேரோட்டம் - சேகர்பாபு, மனோ தங்கராஜ் விரட்டியடிப்பு



குமரி மாவட்டத்தின் பிரதான கோவில்களில் ஒன்று சுசீந்தரம் ஸ்தாணுமால்ய பெருமாள் கோவில். ஆண்டுதோறும் மார்கழி மாதத்தில் தேரோட்டம் நடைபெறும். இந்த ஆண்டு ஜனவரி 02 2026 அன்று நடந்த தேர்த் திருவிழாவை தொடங்கி வைக்க அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. தேர் வடம் பிடிக்கும் முகூர்த்த நேரத்தைத் தாண்டி தாமதமாக வந்தார் சேகர்பாபு. அமைச்சர் சேகர்பாபுவுடன் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மனோ தங்கராஜ், முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். அமைச்சர் சேகர்பாபு தாமதமாக வந்ததால் கொதிப்படைந்த பக்தர்கள் கேள்வி கேட்கத் தொடங்கினர். இதனால் ஆத்திரமடைந்த சேகர்பாபு, சோத்தைத் திங்கறயா, பீயை திங்கறயா என்று தரக்குறைவாக பக்தர்களைப் பார்த்து கேள்வி எழுப்பினார். இதனால் ஆத்திரமடைந்த பக்தர்கள் பாரத் மாதா கீ ஜெய், திருப்பரங்குன்றம் முருகனுக்கு அரோகரா, வீர சாவர்க்கர் வாழ்க என்று கோஷம் எழுப்பினர். இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத திமுகவினர் பாரத மாதா மயிர புடுங்கினா என்று அருவருக்கத்தக்க வகையில் பேசினார்கள். இதனைக் கண்டித்து பக்தர்கள் அமைச்சர் சேகர் பாபுவையும், அவர்களுடன் வந்தவர்களையும் தேரோட்டத்தை விட்டு வெளியேறுமாறு கோஷமிட்டதால் வேறு வழியின்றி சேகர் பாபுவும், திமுகவினரும் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

சுசீந்திரத்திலிருந்து தப்பியோடிய சேகர்பாபு திருநெல்வேலிக்குச் சென்று தேர் திருவிழாவை ஹிந்துத்துவ அமைப்பினர் அரசியலாக்குகிறார்கள் இதை அனுமதிக்க முடியாது என்று பேட்டி அளித்த நேரத்தில், பக்கத்து மாவட்டமான தென்காசி சங்கரன் கோவிலில் உதய நிதி வாழ்க என்று சொல்லி தங்க தேர் இழுத்தனர் திமுகவினர். இந்த சுசீந்தரம் தோரோட்ட சம்பவம் குறித்து பத்திரிக்கையாளர் சந்திப்பில் பேசிய கிறிஸ்தவ அமைச்சரான மனோ தங்கராஜ், கோவில் திருவிழாவில் சாவர்க்கர் வாழ்க என்று சொல்வது மாபெரும் குற்றம் என்று முழங்கினார். பீய தின்னு, மயிர புடுங்கு என்ற சொற்களை விடவா சாவர்க்கர் வாழ்க என்ற கோஷம் தவறானது?

சனாதனத்தை ஒழிப்பேன் என்று சொன்ன உதயநிதி பெயரைச் சொல்லி தங்க தேர் இழுப்பது நியாயமாம்! ஆனால் சனாதனத்தைக் காப்பேன் என்று சூளுரைத்து தன் வாழ்க்கையைத் தியாகம் செய்த சாவர்க்கர் பேரைச் சொல்வது குற்றமாம்.!

குமரி மாவட்டத்தில் சாவர்க்கரை கொண்டாடுவதற்கு வலுவான காரணம் உண்டு. ஆங்கில கிறிஸ்தவர்களுக்கு எதிரான போராட்டத்தில் வந்தே மாதரத்திற்கு அடுத்தபடியாக முழங்கப்பட்ட தாரக மந்திரம் ஜெய்ஹிந்த். இந்த மந்திரச் சொல்லை நமக்குத் தந்தவர் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த மாவீரன் செண்பகராமன் பிள்ளை. எம் டன் என்ற ஜெர்மானிய கப்பலை வைத்து சென்னை துறைமுகத்தை தாக்கிவிட்டு தப்பிச் சென்றார் செண்பகராமன் பிள்ளை என்ற வரலாறு சிலருக்குத் தெரியும். ஆனால், அந்த கப்பலை வைத்து அவர் தாக்க திட்டமிட்டது அந்தமான் கொடும் சிறையை.

வீர சாவர்க்கரை விடுவிக்க வேண்டும் என்பதற்காக சீனாவில் இருந்து எம் டன் கப்பலை வழி நடத்தி வந்தார் செண்பகராமன் பிள்ளை. வானிலை சரியில்லாத காரணத்தினால் கப்பலை திசைமாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வீர சாவர்க்கர் சிறையிலிருந்து வெளியே வந்தால் தான் பாரதப் புரட்சி வெற்றி பெறும் என்பதற்காக வெள்ளையனை மிரள வைத்த சாகசத்தை செய்தவர் குமரி மைந்தன் செண்பகராமன் பிள்ளை. செண்பகராமன் பிள்ளையின் ஆணையின் படி அவரது அஸ்தியில் ஒரு பகுதி திருவனந்தபுரம் கரமனை ஆற்றில் கரைக்கப்பட்டது. மற்றொரு பகுதி நாஞ்சில் நாட்டு வயல்களில் தூவப்பட்டது.

சாவர்க்கருக்காக சர்வாதிகாரத்தையே ஆட்டம் காணச் செய்த செண்பகராமன் பிள்ளையின் அஸ்தி கலந்த நாஞ்சில் நாட்டு மண்ணின் மைந்தர்கள் ஆங்கில அடிவருடிகளுக்கு அடிபணிவார்களா?

# வாழத்தான் விடவில்லை.. நிம்மதியாக போகத்தான் விடுவார்களா; திட்டமிட்ட மயான ஆக்ரமிப்புகள்



ராஜேஷ்

தமிழகம் முழுவதும் ஹிந்து மயானங்களை வேற்று மதத்தினர் ஆக்ரமிப்பது என்பது தொடர்கதையாக ஆகிவருகிறது.

ஈரோடு மாவட்டம், தாளவாடி அருகே பாளையம், பனகஹள்ளி என்ற இரு மலைகிராமங்கள் உள்ளன. இங்கு வசிக்கும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களில் பெரும்பான்மையினர் மலைவாழ் மக்கள் தான். அவர்கள் 1800 ஆம் ஆண்டு முதல் மயானமாக உபயோகப்படுத்தி வந்த சொத்தை தான் தற்போது வக்ஃப் சொந்தம் கொண்டாடுகிறது.

பாளையம், பனகஹள்ளி என்ற இரு கிராமங்களுக்கு இடையில் 9.5 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்தை ஹிந்துக்கள் மயானமாக உபயோகித்து வந்துள்ளனர். கடந்த டிசம்பர் மாத தொடக்கத்தில் இருந்தே மயானம் அமைந்துள்ள இடத்தை வக்ஃப் வாரியத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வேலைகளை அதிகாரிகள் செய்து வந்துள்ளனர். அப்போது மக்கள் கேட்டதற்கு இது அரசு இடம் தான் என்று கூறி அனுப்பி வைத்துள்ளனர். டிசம்பர் 11 2025 அன்று போலீஸ் பாதுகாப்புடன் மயானம் முழுவதையும் சுற்றி இரும்பு வேலி போட்டு அடைத்து உள்ளனர்.

**சமீபத்தில் அந்த நிலம் குறித்த ஆவணங்களைப் பார்த்த போது 21 நவம்பர் 2025 வரை அரசு நிலம் என்றிருந்தது, இப்போது வெகுசிலநாட்களுக்கு முன் பார்க்கும் அது முகமதியர் சுடுகாடு என்று மாற்றப்பட்டுள்ளதைக் கண்டு ஹிந்துக்கள் அதிர்ந்துள்ளனர்.**

மயானத்துக்கு வேலி போட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து டிசம்பர் 12ஆம் தேதி ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் இரு கிராம மக்களும் இணைந்து மனு ஒன்றைக் கொடுத்துள்ளனர். ஆனால் கோரிக்கையின் மீது நடவடிக்கை எடுக்காததைத் தொடர்ந்து அந்தப் பகுதியை சேர்ந்த பசவராஜு என்பவர் மயானம் மற்றும் பொதுப்பாதையை பயன்படுத்தவதற்கு அனுமதியளிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளார். மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர் கடந்த 300 ஆண்டுகளாக ஹிந்துக்கள் மயானமாக பயன்படுத்தி வந்ததை எந்வொரு ஆவணமும் இல்லாமல் வக்ஃப் சொந்தம் கொண்டாடுவதாகத் தெரிவித்தார். இதை பதிவு செய்த நீதிபதி பரத் சக்கரவர்த்தி ஈரோடு மாவட்ட கலெக்டர், வக்ஃப் வாரிய கண்காணிப்பாளர் ஆகியோர் பதிலளிக்க வேண்டும் என்று கூறி ஜனவரி 22ம் தேதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார். இந்த இடைப்பட்ட காலத்தில் துரதிருஷ்டவசமாக யாரேனும் இறந்தால் தாளவாடி தாலுக்கா தாசில்தாரிடம் தெரியப்படுத்த வேண்டும் என்றும், இறந்தவர்களுக்கு அவர்கள் முறையில் இறுதிக்காரியம் செய்ய தாசில்தார் ஏற்பாடு செய்யும்படியும் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் அந்த வேலியை சிலர் அறுத்து விட்டதாகச் சொல்லி எந்த ஆதாரத்தையும் காட்டாமல் கிராமத்தைச் சேர்ந்த 7 பேரை கைது செய்தது காவல்துறை. இதில் கொடுமை என்னவென்றால், இதுவரை பயங்கரவாதிகளை கூட இப்படி தமிழக போலீஸ் கைது செய்திருப்பார்களோ என்னவோ. கிராம மக்களின் வீடுகளின் ஓட்டைப் பிரித்து இறங்கி அராஜகத்தில் ஈடுபட்டனர். இந்த செயல் வெளியில் தெரிந்து விடும் என்பதால் சிசிடிவி காமிராக்களை எல்லாம் உடைத்து விட்டுச் சென்றதாக தெரிவிக்கின்றனர் அவ்வூர் மக்கள். பெண்கள் மட்டுமே இருந்த வீட்டில் இரவு நேரத்தில் பெண் காவலர்கள் துணையின்றி ஆண் காவலர்கள் நடந்து கொண்ட விதம் அதிகார துஷ்பிரயோகத்தின் உச்சம் என ஊர்மக்கள் செ ான்னதோடு அடுத்த நாளே கருப்புக் கொடி ஏந்தி பெரிய போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மலைவாழ் மக்களுக்கு யார் ஆதரவாக வரப்போகிறார்கள் என்ற தைரியத்தில் அதிகாரிகள், காவல்துறையினர் செயல்பட்டார்களா? என தெரியவில்லை. போராடிய அந்த அப்பாவி மக்களுக்கு ஹிந்து முன்னணி, விஹெச்பி அமைப்புகள் தான் உறுதுணையாக நின்றன. புதுக்கோட்டை வேங்கைவயல் குடிநீர்த்தொட்டி மலம் கலந்த விவகாரத்திலேயே குரல் கொடுக்காத ஒடுக்கப்பட்டவர்களின் ஒரே குரல் என தம்பட்டம் அடிக்கும் திருமாவளவன் போன்றவர்களுக்கு இந்த மக்களின் போராட்டங்கள் எல்லாம் காதிலே விழுமா

என்ன?

தமிழகத்தின் பல இடங்களில் இப்படி ஹிந்துக்களின் மயானங்களை ஆக்ரமித்து வரும் இஸ்லாமியர்களுக்கு அதிகாரிகளும், தமிழக அரசும் துணை போகிறது.. ஜனவரி 22 ல் இந்த அப்பாவி மக்களுக்கு நீதிமன்றம் மூலம் நியாயம் கிடைக்கிறதா என்று பார்ப்போம். நீதிமன்றமே உத்தரவிட்டாலும் அதை செயல்படுத்த மாட்டோம் என வம்படியாக இருக்கும் அரசிடம் என்ன எதிர்பார்க்க முடியும் ?

இதே போன்று தான் காஞ்சிபுரம் மாவட்டம் மடிப்பாக்கம் மூவரசம்பட்டு ஹிந்துக்களும் தங்கள் மயானத்தை மீட்க கடந்த 2003ம் ஆண்டிலிருந்து போராடிவருகிறார்கள். 2003ம் ஆண்டு நாங்கள் மசூதி கட்ட மாட்டோம் என்று வாக்குறுதி கொடுத்தவர்கள், 2007ல் அவர்களுக்கு சாதகமான அதிகாரி வந்த போது முஸ்லீம்கள் தடையை மீறி மசூதி கட்டத் தொடங்கினர். ஹிந்துக்கள் மீண்டும் போராடவே, பஞ்சாயத்து மசூதிக்கு அனுமதி மறுத்தது. இதையும் மீறி அடிப்படைவாத முஸ்லீம் அமைப்புகளான தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகம்., SDPI போன்றவை பிரச்சினையை ஏற்படுத்தியது. அதன் பின் இந்த மசூதி நிலம் அரசுக்கு சொந்தமானது என்ற வழக்கில் வேண்டுமென்றே ஆஜராகமல் முஸ்லீம்களுக்கு ஆதரவாக செயல்பட்டனர் அரசு வக்கீல், கிராம அதிகாரி மற்றும் தாசில்தார். இப்படி ஹிந்துக்களின் மயானத்தின் அரிச்சந்திரா கல் அருகிலேயே மசூதியைக் கட்டி, உடலை அடக்கம் செய்ய தாரதப்படையுடன் வரும் போதெல்லாம் பிரச்சினை செய்தனர் முஸ்லீம்கள். ஹிந்துக்கள் தொடர்ந்து போராடி அந்த மசூதியை மேலும் கட்டவிடாமல் தடுத்து வைத்திருந்தனர். முன்புறம் ஒரு ஷெட் போட்டு மறைக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில், ஷெட்க்கு பின்னால் மீண்டும் யாருக்கும் தெரியாமல், சட்டவிரோதமாக மசூதியை கட்டி வந்துள்ளனர் முஸ்லீம்கள். ஒரு தளம் கட்டி முடித்தபின் கட்டடம் வெளியே தெரிய ஆரம்பிக்கும் நிலையில் தான் ஹிந்துக்களுக்கு தெரியவந்துள்ளது மீண்டும் சட்டவிரோத செயலை முஸ்லீமகள் தொடங்கியுள்ளனர் என்பது. இதையடுத்து



31.12.2025ம் தேதியன்று ஹிந்து அமைப்புகள் ஹிந்துக்களுடன் இணைந்து மசூதி கட்டுவதைத் தடுத்து நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது ஹிந்துக்கள் தரப்பில், இந்தக் கட்டிடம் இப்போது சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளது நீங்கள் இடிக்கப் போகிறீர்களா? நாங்களே இடிக்கவா என்று கேள்வி எழுப்பியுள்ளனர். உடனே, போலீஸார் சட்டத்தை நீங்களே கையிலெடுப்பீர்களா என்று கேட்டுள்ளனர்.

நம் கேள்வி என்னவென்றால், அனுமதியில்லாமல் மசூதி கட்டியது சட்டத்தை கையில் எடுக்கும் செயல் இல்லையா? சட்டவிரோதமான ஒரு செயலைத் தடுத்து நிறுத்தாமல் அதற்கு துணை போவது போல் நீங்கள் செல்கிறீர்களே அப்ப நாங்களே எங்களுக்கான தீர்வை பார்த்துக் கொள்கிறோம் என்று சொன்னவுடன் சட்டவிரோதம் என்று கூறுவது இந்த அரசின் இரட்டை மனநிலையை படம் பிடித்து காட்டுகிறது.

அடுத்ததாக, கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி மத்தூர் கிராமத்தில் பட்ரஹள்ளி என்ற பகுதியில் ஹிந்துக்கள் மயான பூமியாக உபயோகப்படுத்தி வந்த இடத்தில் சில ஆண்டுகளுக்கு முன் ஆக்ரமித்து மசூதியைக் கட்டி அதன்பின் ஹிந்துக்கள் அந்த மயானத்தை உபயோக படுத்த விடாமல் தடுத்து வந்துள்ளனர். அத்தோடு நில்லாமல், அந்த இடத்தில், கடைகள் கட்டி வணிக வளாகமாக்க அடித்தளம் போட்டுள்ளனர் இதையறிந்த இந்துக்கள் ஆவணங்களைக் காட்டி இது அரசாங்க நிலம் எப்படி கட்டலாம் என்ற கேள்வியை எழுப்பித் தடுத்துள்ளனர்.

இந்த நிலையில் சமீபத்தில் அந்த நிலம் குறித்த ஆவணங்களைப் பார்த்த போது 21 நவம்பர் 2025 வரை அரசு நிலம் என்றிருந்தது, இப்போது வெகுசிலநாட்களுக்கு முன் பார்க்கும் அது முகமதியர் சுடுகாடு என்று மாற்றப்பட்டுள்ளதைக் கண்டு ஹிந்துக்கள் அதிர்ந்துள்ளனர். அத்துடன் மட்டுமில்லாமல் இப்போது அதை வளைத்து காம்பவுண்ட் கட்டும் வேலையைத் தொடங்கியுள்ளனர். மீண்டும் ஹிந்துக்கள் இப்போது போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

இதுப் போன்று தமிழகத்தில் பெருமளவில் மயானங்களை ஆக்ரமித்து ஹிந்துக்கள் இறந்தால் புதைக்கக் கூட வழியில்லாத நிலையை உருவாக்கி வருகிறார்கள். அரசு இயந்திரமும் இவர்களுக்குத் துணை போவதென்பது தொடர்கதையாகி விட்டது. வக்ஃப் சொத்து என்ற பெயரில் இருப்பிடத்தையும், ஆலயங்களையும் கபளீகரம் செய்யும் இஸ்லாமிய அடிப்படைவாதிகள் நிம்மதியாக செத்த பின்னும் செல்லும் மயானத்தைக்கூட விட்டு வைப்பதில்லை. வாழத்தான் விடுவதில்லை! நிம்மதியாக போகத்தான் விடுவார்களா!

# கருத்துப் போராட்டத்தை கலவரமாக்கிய திமுக

ஹரீஷ்குமார்

திராவிட முன்னேற்ற கழகம் என்றால் வாரிசு அரசியல், ஊழல், பொய் பிரச்சாரம், போலி விளம்பரம், ஸ்டிக்கர் ஒட்டுவது என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க, இதை எதிர்த்து யாராவது கருத்து தெரிவித்தாலோ, சமூக ஊடகங்களில் பதிவிட்டாலோ அவர்களின் மீது காவல் துறையை ஏவி வழக்குத் தொடர்வது, அராஜகப் போக்கை கையாள்வது என்பதைத் தொடர் கதையாகியுள்ளது தி.மு.க.

நியூஸ் 18 தமிழ்நாடு தொலைக்காட்சியின் மக்கள் சபை விவாத நிகழ்ச்சி எழும்பூரிலுள்ள தினத்தந்தி நிர்வாகத்துக்குச் சொந்தமான ஸ்டூடியோவில் **09.01.2025** அன்று நடைபெற்றது. அதில், திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த தங்க.தமிழ்செல்வன், நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த இடும்பாவனம் கார்த்திக், தமிழக வெற்றி கழகத்தைச் சேர்ந்த நாஞ்சில் சம்பத், பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த S.G.சூர்யா மேலும் பத்திரிக்கையாளர் என்று தன்னை கூறிக்கொள்ளும் செந்தில் வேல் மற்றும் நெறியாளர் பால சக்திவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில், திமுகவின் கொத்தடிமையான அரசியல் விமர்சகரும், ஊடகவியலாளருமான செந்தில் வேல் எனும் சீப்பு செந்தில் விவாதத்தில் பேசும்போது, பாஜகவைச் சேர்ந்தவர்கள் திமுகவினரின் பாணியிலேயே கேலி, கிண்டல் செய்துள்ளனர். அதில் யாரோ ஒருவர் ஒருமையில் பேசியதாக கோபப்பட்ட செந்தில்வேல், அந்த அவையிலேயே கெட்ட வார்த்தையில் பேசியிருக்கிறார். மேலும், 100 பேரை நான் இறக்கிக் காட்டட்டுமா? என ஆவேசமாக கூறிய அவர், விவாதத்தைத் தொடர முடியாதென கூறி அவையைவிட்டு வெளியேறியுள்ளார். நிகழ்ச்சி தொடர்ந்து நடந்தது.

விவாத நிகழ்ச்சியில் இருந்து வெளியேறிய செந்தில் வேல், அமைச்சர் சேகர் பாபுவின் அடியாட்கள் 100க்கும் மேற்பட்டவர்களை திரட்டி நிகழ்ச்சி முடியும் வரை ஸ்டூடியோ வாசலில் காத்திருந்தார். அங்கு கூடிய திமுகவின் அடியாட்கள் மதுபோதையில் இருந்ததாகவும், கையில் கட்டைகள், பாட்டில்கள் வைத்திருந்தாக கூறப்படுகிறது. அவரே இது குறித்து ஒரு வீடியோவும் வெளியிட்டுள்ளார். அதில், உள்ளே பேசிய பாஜககாரர்கள் வெளியே வரட்டும், தைரியமிருந்தால் எங்களை இங்கு சந்திக்கட்டும். அவர்களுக்கு பாடம் கற்று தருவோம். இனியும் இதே போல் எங்காவது பாஜககாரர்கள் நடந்து கொண்டால் விளைவு வேறு மாதிரி இருக்கும் என்று மிரட்டும் தொணியில் பேசியுள்ளார்.


வெளியில் நின்றிருந்த கும்பல் திட்டமிட்டபடி வெளியில் வந்த பாஜகவினரையும், பாஜகவின் இளைஞரணி தலைவர் S.G.சூர்யாவையும் தாக்கியது. இதில் பலர் காயமடைந்தனர். இதற்கு, காவல்துறையினரும் உடந்தையாக இருந்திருக்கின்றனர். 'நாங்கள் 10 நிமிடங்கள் மின் இணைப்பைத் துண்டிக்கிறோம், நீங்கள் கிளம்புங்கள், நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்' என்று திமுக குண்டர்கள் போலீசாரிம் கூறிவிட்டுத் தான் இந்த தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றார் தாக்குதலுக்குள்ளான S.G.சூர்யா. விவாத மேடைகளிலும் சரி, பொதுக்கூட்டங்களிலும் சரி கருத்துக்களை நேருக்கு நேர் எதிர்கொள்ளத் திராணியில்லாத திமுகவின் கூலிப்படைகள் (ரூ200 - உடன் பிறப்புகள்) எதிர் கருத்து கொண்டவர்கள் மீது வன்முறை தாக்குதலில் ஈடுபடுவது முதல்முறையல்ல. திமுகவினர் ஆரம்பக்காலத்திலிருந்தே இதை வாடிக்கையாக கொண்டுள்ளனர். கக்கன், காமராஜர், ஜெயகாந்தன், சோ ஆகியோர்களின் கூட்டங்களில் காளை மாட்டை விடுவதும், பாம்பை விடுவதும், அழுகிய முட்டைகளை வீசுவதும் வழக்கமான ஒன்று தான். இவர்களுக்கு எதிரான கருத்தை வெளியிட்டார்கள் என்பதற்காக அவர்கள் குடும்ப பத்திரிக்கையை எரித்தவர்கள் தான் பாசிச திமுகவினர்! இந்த ரவுடியிசத்தை இப்போது மீண்டும் நிகழ்த்தியுள்ளனர்.

பெரும்பாலான தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகளில் வேண்டுமென்றே பாஜகவினர் வரும் போது அவமானப்படுத்துவதும், விவாதத்தில் நடுவராக இருக்க வேண்டிய நடுவரும் எதிரணியின் கருத்தாக பேசுவதும், ஹிந்து அமைப்புகள் சார்பில் பேச வருபவர்களை பேச விடாமல் செய்வதும் தொடர் கதை. அதற்கென்றே பல ஊடகவியலாளர்களை விலைக்கு வாங்கி கொத்தடிமைகளாக வைத்திருக்கின்றனர் திமுகவினர். எதிர்கட்சியினரைப் பணிய வைக்க வன்முறையை ஆயுதமாக்கும் தி.மு.க வினரை ஊடகங்கள் புறக்கணிக்கவில்லை என்றால், பா.ஜ.க அவைகளை புறக்கணிப்பதுடன், அவ்விவாதங்களை தோலுரிக்கும் வகையில் வீதி நாடகங்கள், நகைச்சுவை நாடகங்களை வெளியிட்டு, விலை போகும் ஊடகத்தினரை வெளிச்சம் போட்டுக் காட்டினால், ஊடக விவாதம் என்ற செட்டப் நாடகம் முடிவுக்கு வரும் அல்லது திருந்தும்! கேமரா மோகத்தைக் களைந்து திடமான முடிவை எடுப்பார்களா பா.ஜ.க தலைவர்கள்?

# புலம்பெயர் தொழிலாளர்கள் மீதான கொடூரத் தாக்குதல் - போதையா வெறுப்பா?

தமிழ்நேசன்

தமிழகத்தில் கடந்த டிசம்பர் 26 அன்று திருத்தணியில் காவல்நிலையத்துக்கு ஒரு அநாமதேய அழைப்பு வந்தது. அதில் சொன்னது ஒரு ஆள் வடக்கன் போல இருக்கிறார். குற்றுயிராகத் திருத்தணி ரயில்நிலையத்தில் கிடக்கிறார். போலீசார் போய் பல வெட்டுக்காயங்களுடன் இருந்த அவரைக் கண்டு மருத்துவமனையில் சேர்த்தனர். முதலுதவி அளித்து திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார் சுராஜ் என்ற அந்த 20 வயது நபர். திருத்தணி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்ட போது சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்தனர். அதே நேரம் நான்கு புள்ளிங்கோ போட்ட ரீல்ஸ் புலப்பட்டது. அதில் பாதிக்கப்பட்டவரின் கழுத்தில் கத்தி வைத்து நான்கு பேரும் அவரை மிரட்டுவதும் அதை படம் பிடித்து ரீல்ஸ் போட்டிருப்பதும் தெரியவந்தது. இவர்கள் நெமிலியில் இருந்து திருத்தணி நோக்கி வந்தவர்கள் என்றும் அவர்கள் பாதிக்கப்பட்ட சுராஜின் கழுத்தில் கத்தி வைத்து மிரட்டி ஆளில்லாத இடத்துக்கு அழைத்துச் சென்று அங்கே அவரைக் கொலைவெறியோடு வெட்டிக் காயப்படுத்தியிருப்பதும் தெரியவந்தது. போராடியவரைத் திட்டிக்கொண்டே வெட்டியிருக்கிறார்கள். இதைச் செய்ததன் நோக்கம் சமூக வலைத்தளங்களில் வீடியோவைப் போட்டுப் பிரபலமாக்குவது.



இதுபற்றிக் கருத்துக் கூறிய பாஜக மாநிலத் தலைவர் நைனார் நாகேந்திரன் இது அச்சம் தரும் சம்பவம் என்றும், இளம் சிறார்கள் இப்படி வன்முறையில் ஈடுபடுவது வேதனையான விஷயம் என்றும் கூறினார். மேலும் வன்முறையை பெருமைப்படுத்தும் காட்சி ஊடகங்கள், சமூக ஊடகங்கள் இதற்குக் காரணம் என்றும், மக்களின் அன்றாடப் பிரச்சனைகளான சட்டம் ஒழுங்கைக் கூட பராமரிக்காத அரசு என்று அவர் முதல்வரைக் கண்டித்தார். திரு அண்ணாமலை கூறுகையில் சட்டம் ஒழுங்கில் சீர்கேடுகள் மண்டிக்கிடப்பதாகவும், மக்கள் அச்சத்தில் வாழ்கிறார்கள் என்றும் காட்டாட்சி நடக்கிறது என்றும் காட்டமாக விமர்சித்தார்.

இந்த நான்கு பேரில் மூவர் சிறைக்கு அனுப்பப்பட்ட நிலையில் நான்காவது ஆள் ஜாமீனில் விடுவிக்கப்பட்டது மக்களிடையே அச்சத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. காங்கிரஸ் எம்.பி. கார்த்தி சிதம்பரம் மக்கள் பத்திரமாக உணர ஆகவேண்டியதைக் காவல்துறை செய்யவேண்டும் என்று மூப்பனார் பாணியில் பேசியிருக்கிறார். காவல்துறை தன் துணிவைக் காட்ட வேண்டிய தருணம் இது என்றும், குற்றவரலாறு உள்ளவர்களைக் கட்டுப்படுத்த சோதனைகள், கைது என்று நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியம் என்றும் கார்த்தி கூறினார்.இது ஒரு ஒற்றைச்சம்பவம் இதை வைத்துக்கொண்டு சட்டம் ஒழுங்கை எடை போடக்கூடாது என்று திமுகவின் டிகேஎஸ் இளங்கோவன் கூறினார். ஆனால் பாதிக்கப்பட்ட சுராஜ் தான் 7 ஆண்டுகளாக தமிழகத்தில் தங்கி வேலை செய்வதாகவும் தனக்கு இதுவரை இப்படி யாரும் செய்ததில்லை என்றும் கூறியிருக்கிறார். பொதுமக்களிடம் பத்திரிகையாளர்கள் பேசிய போது ரயிலில் பயணிக்க அச்சமாக இருப்பதாகவும் உயிருக்கு உத்தரவாதமில்லாத நிலையில் எப்படிப் போகமுடியும் என்றும் கேள்வி எழுப்பினர்.ஆனால் மனோஜ் என்ற புலம்பெயர் தொழிலாளர் கூறுகையில் “அச்சமாகத்தான் இருக்கிறது. நாங்கள் ரேபிடோவில் பைக் பதிவு செய்து போகிறோம். ஆனால் வறுமையில் குடும்பத்தை விட்டு இங்கே வேலைக்கு வந்துள்ள நிலையில் தினமும் பைக்கில் போவது கட்டுப்படியாகாது. கடவுள் மீது பாரத்தைப் போட்டு ரயிலில் தான் போகவேண்டும்'' என்றார்.

காவல்துறை அந்த வீடியோவை நீக்கச் சொல்லி X தளத்துக்கு நோட்டீஸ் விட்டுள்ளது. மேலும் இந்த சம்பவத்தை அடுத்து முனைப்பாக சட்டம் ஒழுங்கைக் கண்காணிப்பதாகவும் சிக்கல்கள் ஏதும் வராது என்றும் காவல்துறை சொல்கிறது. பாதிக்கப்பட்ட சுராஜை சிகிச்சை அளித்து சொந்த ஊருக்கு அனுப்பிவிட்டதாகவும் சொல்கின்றனர். உடம்பில் பல இடங்களில் வெட்டுக்காயங்கள் பட்ட நிலையில்



இத்தனை விரைவில் எப்படி ஊருக்குப் போவது சாத்தியம் என்று புரியவில்லை. மோசமான காயங்கள் ஏற்பட்ட நிலையிலும் கூட அவர் சொந்த ஊருக்கு வேகமாக திரும்பியிருக்கிறார் என்றால் தமிழக அரசின் மீதான நம்பிக்கையின்மை காரணமா? அல்லது தமிழக அரசு அவரை வேகாம பேக் செய்து அனுப்பி விட்டதா? என்ற கேள்வியையும் பொதுமக்கள் எழுப்பி வருகின்றனர்.

இது நடந்த தடம் மறைவதற்குள் கோவையில் சூரஜ் என்ற 22 வயது புலம்பெயர் தொழிலாளர் கொல்லப்பட்டுள்ளார். கரும்புக்கடை பகுதியைச் சேர்ந்த பஜித் கான் என்ற ஆட்டோ ஓட்டுநரும் பிரகாஷ் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் நடந்த டிசம்பர் 29 அன்று இரவு 10.30 மணிக்கு பஜித்கான் ஆட்டோவைத் தாறுமாறாக ஓட்டிக்கொண்டு வந்து சூரஜின் மேல் இடித்துவிட்டார்என்றும் ஏன் இடித்தீர்கள் என்று கேட்ட சூரஜை பஜித்கானும் அவரது நண்பர் பிரகாஷும் சேர்ந்து கொண்டு மன்னிப்புக் கேள் என்று மிரட்டியதாகவும், மன்னிப்புக் கேட்க மறுத்த சூரஜை மூக்கிலும் வாயிலும் குத்தி ரத்தக்காயத்துடன் ரோட்டில் போட்டுவிட்டு இருவரும் தப்பிவிட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. ரகேத் என்ற சூரஜின் நண்பர் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து தப்பி ஓடி சூரஜின் குடும்பத்தினரிடம் தகவல் சொல்லியிருக்கிறார். அதற்குள் வழிப்போக்கர் யாரோ சூரஜை KMCH மருத்துவமனையில் சேர்த்துவிட அங்கே சிகிச்சை பலனின்றி சூரஜ் இறந்து போனார்.

**பான்பராக் வாயான், பானிபூரிவாலா, டாய்லெட் கட்டறவன் என்றெல்லாம் தொடர்ச்சியாக வட இந்திய மக்களை இழிவாக பேசி அவர்கள் மீதான ஒரு வெறுப்பு பிரச்சாரத்தை திமுக அமைச்சர்களே முன்னெடுத்துள்ளனர்.**

இரண்டு சம்பவங்களுமே பாதிக்கப்பட்டவர்களின் புலம் சார்ந்து நடைபெறவில்லை என்றும் தனிப்பட்ட வாக்குவாதம் காரணமாக நடந்தது என்றும் காவல்துறை தெரிவிக்கிறது.

பான்பராக் வாயான், பானிபூரிவாலா, டாய்லெட் கட்டறவன் என்றெல்லாம் தொடர்ச்சியாக வட இந்திய மக்களை இழிவாக பேசி அவர்கள் மீதான ஒரு வெறுப்பு பிரச்சாரத்தை திமுக அமைச்சர்களே முன்னெடுத்துள்ளனர். இப்படிப்பட்ட தாக்குதல்கள் நடக்க இவையும் ஒரு காரணம். அதாவது சுருக்கமாக சொல்லப் போனால் திராவிட மாடல் அரசு முன்னெடுக்கும் பிரிவினைவாத பிரச்சாரத்தின் விளைவு

பரபரப்புக்காக வீடியோ எடுக்கப்போகிறேன் வெட்டு வாங்கிக்கொள் என்றால் வெட்டுப்பட வேண்டுமா? தற்காப்புக்கு வாக்குவாதம் கூடச் செய்யக்கூடாது என்றால் என்ன விதமான மனநிலை? கோவை சம்பவமும் அப்படித்தான். ஆட்டோவைத் தாறுமாறாக ஓட்டி மோதினால் ஏன் மோதுகிறாய் என்று கேட்டது குற்றம் மன்னிப்புக் கேள் என்பது என்ன நிலைப்பாடு? மன்னிப்புக் கேட்காவிட்டால் கொல்லுவேன் என்றால் இது என்ன தடியெடுத்தவன் தண்டல்காரன் என்ற நிலையா தமிழகத்தில்? சட்டமும் ஒழுங்கும் எங்கே? தனிப்பட்ட வாக்குவாதம் காரணமாகத் தாக்குதல் கொலை என்றால் என்ன நடந்தாலும் ஏன் என்று கேட்கக்கூடாதா? கேட்டால் தாக்குவார்கள் கொல்லுவார்கள் என்றால் இது என்ன விதமான நிலைமை?

பொதுமக்கள் பலரும், போதைப் பொருள் பயன்படுத்துவதும் குடிப்பழக்கமுமே இப்படி நடப்பதற்குக் காரணம் என்று சொல்கின்றனர். வெளியே செல்லவே அச்சமாக உள்ளது. காவல்துறையினரையே மதிக்காமல் போதையில் திரிகிறார்கள் சிறார் முதல் வயதானவர் வரை. சாமானியர்களை என்ன செய்வார்களோ என்று அச்சம் பரவலாக மக்களிடையே உள்ளது. தென் அமெரிக்க நாடுகள் சிலவற்றில் போதைப் பொருட்கள் சர்வசாதாரணமாக நடமாடும். அங்கெல்லாம் சுற்றுலா செல்பவர்களிடம் காவல்துறையே கொஞ்சமாகப் பணம் கையில் வைத்துக்கொள்ளுங்கள், இது போன்ற போதை ஆசாமிகள் கேட்டால் கொடுத்துவிடுங்கள். இல்லை என்றால் போதை வேகத்தில் கொன்றுவிடுவார்கள் என்று அறிவுறுத்துவதுண்டு. அதுபோன்ற நிலைக்குச் செல்கிறதா தமிழகம் என்று சர்வதேசப் பயண அனுபவம் கொண்டவர்கள் வருத்தம் தெரிவிக்கிறார்கள்.

இந்நிலை இப்படியே தொடர்ந்தால் சாமானியன் நிலை அநாதை தான். அநாதைக்கு வேறாரும் இல்லை, தெய்வமே துணை. தெய்வம் நமக்குத் துணை பாப்பா ஒரு தீங்கு வரமாட்டாது பாப்பா என்ற கவி வாக்குக்கு ஏற்ப தெய்வத்தை நம்பி இருப்பதே கதி.

# தமிழக வக்ஃப் வாரியம் செயல்படத் தடை - நீதிமன்றம் உத்தரவு

வீர வேலுநாச்சியார்

இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினரான நவாஸ்கனியைத் தலைவராகக் கொண்டு தமிழக வக்ஃப் வாரியத்தை தமிழக அரசு அமைத்து, அதற்கான ஆணையை 28/11/2025 அன்று வெளியிட்டது. இந்த ஆணையம் புதிய வக்ஃப் சட்டத்தின் அடிப்படையில் செல்லாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் திரு. ஷௌகத் அலி முகம்மது அவர்கள் வழக்குத் தொடுத்தார். தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட புதிய வக்ஃப் வாரியம் சட்ட விரோதமானதே என்பதற்கான முக்கிய காரணங்களாக, புதிய வக்ஃப் சட்டத்தில் குறிப்பிட்டதுபோல் வழக்கறிஞர் பேரவை (Bar Council) பிரதிநிதிகள் நியமனம் செய்யப்படாததும், இரு முஸ்லிமல்லாத உறுப்பினர்கள் நியமிக்கப்படாததும் சுட்டிக்காட்டப்பட்டன.

இந்த வழக்கு 08/01/2025 (புதன்கிழமை) விசாரணைக்கு வந்தது. விரிவான வாதங்களை கேட்ட பின்னர், புதிய திருத்தப்பட்ட வக்ஃப் சட்டத்தின் பிரிவு 14-ன் படி தமிழ்நாடு வக்ஃப் வாரியம் முறையாக அமைக்கப்படாத காரணத்தால், புதிய திருத்தப்பட்ட வக்ஃப் சட்டத்தின் அடிப்படையில் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தை மறுசீரமைத்த அரசாணைக்கு மதிப்பிற்குரிய முதல் அமர்வு தடை விதித்ததுடன், தமிழ்நாடு வக்ஃப் வாரியம் தொடர்ந்து செயல்படுவதையும் தடை செய்தது. எனவே, புதிய திருத்தப்பட்ட வக்ஃப் சட்டத்திற்கு முரணாக (ultra vires) வாரியம் அமைக்கப்பட்டுள்ளதால், தமிழ்நாடு வக்ஃப் வாரியம் இதுவரை எடுத்துள்ள அனைத்து நடவடிக்கைகளும் செல்லாதவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.



நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்ட புதிய வக்ஃப் வாரியத்தின் தலைவராக இருக்கும் திரு.நவாஸ் கனி அவர்களே, இதற்கு முந்தய காலகட்டத்திலும் வக்ஃப் வாரியத்தலைவராக இருந்தார். அப்போது முத்தாவல்லி நியமனத்தில் முறைகேடு, பாரம்பரிய இஸ்லாமிய முறைகளை மாற்றுவது, நிதி மோசடி, பயங்கரவாத, பிரிவினைவாத ஆதரவுப் பேச்சாளர்களை மசூதி பயான்களில் பேசுவதற்கு ஆதரவளிப்பது, பல நீதிமன்ற அவமதிப்பு வழக்குகள் என்று அடுக்கடுக்கான புகார்கள் இருந்தன. இவரைப் பதவியிலிருந்து மாற்றவும் கோரிக்கை எழுந்தது. அனைத்தையும் மீறி, இவரையே மீண்டும் வக்ஃப் வாரியத் தலைவராக அறிவித்தது தமிழக தி.மு.க அரசு. திருப்பரங்குன்றப் பிரச்சினை பெரிதாகக் காரணமானவர் நவாஸ்கனி என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், நாகர் கோவில் கோட்டாறு பள்ளிவாசல் மோதினார், பள்ளிவாசல் பின்புறம் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். நான்கு மாதமாக அவருக்கு சம்பளம் கொடுக்கவில்லை என்றும், வக்ஃபு முறைகேடுகளுக்கு துணை போக வற்புறுத்தப் பட்டதாகவும் அவர் கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது. பரம்பரை முத்தாவல்லி நியமனத்திலும் முறைகேடுகள் நடந்ததாக வழக்குகள் நிலுவையில் உள்ளன.

மதக் கலவரங்களைத் தூண்டவும், வக்ஃப் சொத்தை கபளீகரம் செய்யவும், அடிப்படைவாத, பிரிவினைவாத சித்தாந்தங்களை திணிக்கவும், பாரம்பரிய மசூதி வழிபாட்டு முறைகளை மாற்ற உதவுவதும், மசூதிகளை அடிப்படைவாத முஸ்லீம்கள் கைப்பற்ற உதவுவதும், ஹிந்து/ பொதுச் சொத்தை வக்ஃப் என்ற பெயரில் ஆக்கிரமிப்பதும் என்று குற்றச் செயல்கள் பல செய்த நவாஸ்கனியை மீண்டும் தலைவராக திமுக அரசு நியமித்ததே மதக் கலவரங்களைத் தூண்டி இஸ்லாமியர்களை வாக்கு வங்கிகளாக தக்க வைக்க தி.மு.க எடுத்த முயற்சியே என்று நோக்கர்கள் கருதுகிறார்கள். அரசியல் லாபத்திற்கும், முறைகேடாக பணம் சம்பாதிக்க சட்டத்தை மதிக்காமல் வக்ஃப் வாரியத்தை அவசர அவசரமாக அறிவித்ததின் நோக்கம் என்ன? என்று முஸ்லீம்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# அரசியல் உலா

**- கரிகாலன்**

வழக்கமானகாலை உலா முடிந்து விடியலுக்காகக் காத்திருக்கும் வேளையில் தான் எங்கள் அரசியல் உலா ஆரம்பமாகும். சூடு பறக்கும் காஃபியுடன் அரட்டைக் கச்சேரி சூடு பிடிக்கும். மற்றும் அப்படித்தான் இருள் சூழ்ந்த வேளையில் என்னை நோக்கி ஒரு புன்னகை. “நல்ல விஷயம் எல்லாம் நடக்குதே!'' நண்பர் ஒருவர் கேட்டார். பொறுப்புத் துறப்பு நினைவுக்கு வந்தாலும் கர்வத்தைத் தவிர்க்க முடியவில்லை. பதிலாகப் புன்னகைத்தேன்.



அரசியல் சாணக்கியரின் தமிழக வருகை பலன் மட்டுமல்ல பலருக்கான பதிலையும் தந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டேன். அமித் ஷா தமிழகம் வந்ததும், எடப்பாடி பழனிச்சாமி தில்லி சென்று வந்ததும், பாமக தலைவர் அன்புமணி உள்ளே வந்ததும், பிடிவாதமாகப் பேசிய சில தலைவர்கள் தங்கள் நிலைப்பாட்டில் இறங்கி வந்ததும் கண் கூடு.

“என்ன ஓய், உங்களுக்குப் பிடிக்காட்டி, ஆட்டத்தைக் கலைச்சு விட்டுருவேள் போலருக்கே!'' பாமக உள் விவகாரத்தை மனதில் வைத்துக் கேள்வி தொடுத்தார் ஒரு நண்பர். “ராமதாஸ் கூட இதே கூட்டணிக்குள்ள வருவார், அது வரைக்கும் அவசரப்படாதீங்க. தவிர, எந்தக் கட்சியையும் அழிக்கிற உடைக்கிற எண்ணம் பாஜகவுக்கு இல்ல. இப்ப கூட பாருங்க, பலமான அதிமுகவுக்கு அதிக முயற்சி எடுக்கறது பாஜக தானே!'' கேட்டேன் நான்.

“சரி, டிடிவி விஷயத்துக்கு வாரும்!'' என்று வேறு பக்கமாக இழுத்தார் இன்னொரு நண்பர். “அவர் பேச்சிலும் தெளிவு இருக்கு, அதிமுக தரப்பிலும் அவருக்கு ஏற்பு இருக்கு. அறிவிப்புதான் காத்திருக்கு!'' விளக்கம் அளித்தேன்.

“நீர் என்னதான் சொன்னாலும் ஆளுங்கட்சித் தரப்பை அசைக்க முடியாது போலிருக்கே. அரசு ஊழியர்களுக்கு புது ஓய்வூதியத் திட்டம், மாணவர்களுக்கு மடிக்கணினி அப்படின்னு அசத்துறாளே!'' மாமா நியாயமான கேள்வியை முன் வைத்தார்.

முதலாவது அரசு ஊழியர்களை ஏமாற்ற கிண்டப்பட்ட அல்வா, வெற்று வாக்குறுதி. அது வாக்காக மாறுவதற்கு உத்தரவாதம் இல்லை. மடிக்கணினி பள்ளியளவில் தந்திருக்க வேண்டும் நான்கு வருட காலமாக தராமல் ஏமாற்றி இழுத்தடித்து இப்பொழுது கல்லூரி மாணவர்களுக்கு மட்டுமே கொடுத்திருப்பது வாக்குகளை பெற்றுத்தரும் என்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை.

“ஆனாலும் அந்த கூட்டணி பலமா இருக்கே!'' ஆச்சரியப்பட்டார் ஒரு நண்பர். “யார் சொன்னா? இப்பவும் அதுக்கு நித்ய கண்டம் பூர்ண ஆயுசு! காங்கிரஸ் கடைசி வரைக்கும் ஒட்டுமா ஒட்டாதான்னு தெரியாத மாதிரியே குழப்பிக்கிட்டு இருக்கு!'' புரிகிற மாதிரி பதில் தந்தார் மற்றொருவர். இவர் ஸ்ரீ டிவியில் திருச்சி வேலுச்சாமியின் பேட்டியைப் பார்த்திருக்கக் கூடும்.

“ஆமா, ஆமா காங்கிரஸ் மட்டுமா! விசிகவும் குழம்பி இருக்காங்க, தெளிவான நிலைப்பாடு இல்ல. அடிக்கடி மாத்திப் பேசுறாங்க'' இந்த நண்பர் ஜனம் தொலைக்காட்சி கருத்துக் கணிப்பைப் பார்த்து இருப்பார் என்று நினைக்கிறேன்.

“யாரோ புதுசா ஒருத்தங்க கூட்டணியில வர்றாங்கலாமே! எடப்பாடியார் சொல்லிருக்கார், யாரா இருக்கும்?'' ஒருவரது கேள்வியில் ஒட்டுமொத்தக் கவனமும் குவிந்தது. “தெரிஞ்சுக்க எனக்கும் ஆர்வமா தான் இருக்கு. ஆனா ஒன்னு புரிஞ்சுக்கோங்க, அடுத்து அமையறது தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி தான்!'' மீண்டும் உறுதிப்படச் சொன்னேன் நான்.

**இந்த மாதம் தமிழக அரசியல் உலா திரையுலகை நோக்கித் திரும்பி இருக்கிறது. தொடக்க கால திராவிட அரசியலுக்கு திரையுலகே பிரதான அஸ்திரமாக, ஆட்சிக் கட்டிலுக்கு அஸ்திவாரமாக இருந்தது. இன்று ஆட்சிக் கட்டில் ஆடத் தொடங்கியதும் திரையுலகத் தொட்டிலை ஆட்டத் தொடங்கி விட்டார்கள்.**

“அது சரி, பராசக்திக்கு பாராட்டுப் பத்திரம் வாசிச்சிருக்காரே கமலஹாசன்!?'' பேச்சு திசை மாறியது. “பாவம் அந்த ஜோசப்!'', உச் கொட்டினார் இரண்டாமவர். “என்னடா இது கலைத்துறைக்கு வந்த சோதனை!'' அங்கலாய்த்தார் மற்றொருவர்.

திராவிடப் பாரம்பரியத்தில் உதயமான மாபெரும் நடிகர் ஒருவர் சில ஆண்டுகளுக்கு முன்பே நடிப்பைத் துறந்து உதவி முதலமைச்சர் ஆகிவிட்டது திராவிட இயக்கங்களுக்கு மிகப்பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தியது. தன் கட்சி நடத்தப்பட்டாலும் பரவாயில்லை, தான் சார்ந்த அந்தத் துறை நஷ்டப்படக் கூடாது என்று சிந்தித்து அவர் இன்றளவும் வேறு வழிகளில் தயாரிப்பாளராகத் தொடர்கிறார்.



ஆனால் திரைத் துறையில் இன்றும் பிரபலமாக இருக்கும் வேறொரு நடிகர் இவர்களது ஆட்சிக்கு மிகப்பெரிய சவாலை ஏற்படுத்தி இருக்கிறார். கடைசிப் படம் இதுவே என அறிவித்து விட்ட அந்த நடிகர், திரை நாயகர் நிலையிலிருந்து உயர்ந்து ஜன நாயகர் ஆக உருவெடுப்பதைக் கண்டு திமுக அஞ்சுகிறது.

திரைத்துறைக்கு இருக்கும் வசீகரமும், இன்னமும் அதன் மீது மக்களுக்கு இருக்கும் மோகமும் மதி மயக்கமும் தங்களுக்கு சாதகமாக இருக்கும் என்ற குருட்டு நம்பிக்கையில் திமுக தனது பழைய உருட்டுகளை புதிய பிரச்சார படமாகத் தயாரித்திருக்கிறது. அப்படி சமீபத்தில் வந்தது தான் பராசக்தி.

“அன்னைக்கு நடந்தது ஹிந்தி எதிர்ப்பு போராட்டமே இல்ல, ஆங்கில ஆதரவு போராட்டம்னு ஒருத்தன் கிழிக்கிறான். படத்துல எது எதையோ காட்டுறாங்களே, மாறன் புள்ளை ஹிந்தி படிச்ச காட்சி இருக்கான்னு ஒருத்தன் கேட்கறான்!''

“தீ பரவட்டும்னு ஒரு வசனம் வெச்சாலும் வெச்சாங்க. யூடியூப்ல ரொம்பவே பரவுது. கடைசி நேரத்துல ஒரு படத்தைக் காட்டி ஆட்சியைத் தக்க வைக்கலாம்னு நினைச்சாங்க, ஆனா படத்துக்கு நேர்ந்த கதி தான் திமுகவுக்குன்னு இப்போ புரிஞ்சு போச்சு!'' இது என் அருகில் அமர்ந்திருந்தவர் உதிர்த்த முத்து.

சமீபத்தில் கோவையில் தமிழக பாஜக ஏற்பாடு செய்திருந்த மேடையில் தமிழக அரசியல் களம் குறித்து பேசிய பாண்டே ஜனநாயகன் பட வெளியீட்டு விவகாரத்தையும் அவருக்கு உரித்தான பாணியில் குறிப்பிட்டார்.

CBFC மத்திய தணிக்கைத் துறை நடவடிக்கைகளில் அரசியல் தலையீடு இருப்பதாக நான் நினைக்கவில்லை. இயல்பாகவே சொல்லப்பட்ட சில திருத்தங்களால், அதை ஏற்க மறுக்கும் படக்குழுவினரின் அழுத்தங்களால் தான் பட வெளியீட்டில் தாமதம். அந்த நேர அரசியல் பொருத்தங்களால் சில வதந்திகளும் உலா வருகின்றன.

உண்மையில் ஜனநாயகனைப் பார்த்து பணநாயகம் தான் பயப்படுகிறது.

**ஜனநாயகன் தாமதமும் ஒரு விதத்தில் நல்லது. ஒருவேளை ஒரே நேரத்தில் இரு படங்களும் வெளியாகி இருந்தால், ஜனநாயகன் பார்க்க வந்து இடம் கிடைக்காத கூட்டம் வேறு வழியின்றி பராசக்தியை நோக்கிப் பாய்ந்திருக்கும். அதுவே கூட பராசக்தியின் வெற்றி என்று அவர்கள் மார் தட்டிக் கொள்ள ஒரு காரணமாக அமைந்திருக்கும். இன்று படம் பார்ப்பதற்கு ஆள் இன்றி அரங்குங்கள் காற்று வாங்கிக் கொண்டிருக்கின்றன.**

# தில்லை நடராஜனையும்... திருவரங்கநாதனையும்...

ப்ரியா வெங்கட்

நம் எல்லோருக்கும் படியளக்கும் பெருமானையே பட்டினி போடுவது தமிழக திராவிட மாடல் அரசில் தான் நடக்கும்!

கோவில் சொத்துக்களை ஆட்டய போடுவது, ஆபரணங்கள் திருட்டு, சிலைகள் திருட்டு என்று கபளீகரம் செய்து கொண்டு இருந்தவர்கள் இப்போது ஸ்வாமியின் நைவேத்தியத்தையும் திருடி இருக்கிறார்கள்!

ஸ்ரீரங்கம் ரங்கநாத ஸ்வாமி திருக்கோவிலில் மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி விழாவின் 2ம் பகுதியான ராப்பத்து உற்சவம் நடைபெற்று கொண்டு இருக்கிறது. இதில் தினமும் மதியம் நம்பெருமாள் மூலஸ்தானத்திலிருந்து புறப்பாடாகி ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளி சேவை சாதிப்பார். அதன்பின் 3:30 மணிக்கு திரையிடப்பட்டு, இந்த உற்சவத்தின் போது மட்டுமே செய்யப்படும் செல்வர் அப்பம் மற்றும் வழக்கமான சர்க்கரைப் பொங்கல், பெருமாள் தோசை, சம்பார தோசை, வெண்பொங்கல் ஆகியவை பெருமாளுக்கு நைவேத்தியம் செய்யப்படுவது வழக்கம். இதில் அப்பம் செய்வதற்கான பொருட்களை பிரச ாத ஸ்டால் ஒப்பந்ததாரர் அன்றைய தினம் காலையிலேயே கொடுத்துவிடுவார். அதை வைத்து மடப்பள்ளியில் தயார் செய்வார்கள். இப்படி ஜனவரி 4ம் தேதி 2025 அன்றும் ஸ்டால் ஒப்பந்ததாரர் பொருட்களைக் கொடுக்க மடப்பள்ளியில் மற்ற நைவேத்தியங்களுடன் செல்வர் அப்பம் செய்து வைக்கப்பட்டிருந்தது. அதன் பின் 3:30 மணிக்கு நைவேத்தியம் செய்ய செல்வர் அப்பத்தை தேடிய போது அங்கு கொண்டு வரப்படவில்லை. மீண்டும் மடப்பள்ளிக்கு சென்று பார்த்தால் அங்கும் இல்லை. 3 கூடை செல்வர் அப்பம் எங்கு சென்றது என்ன ஆனது என்று தெரியாமல் பட்டர்கள் திகைத்தனர்.

இதனால் நைவேத்தியம் செய்ய முடியாமல் பட்டினியுடன் பெருமாள் காத்திருக்க, அடுத்தடுத்து நிகழ்த்த வேண்டிய சேவைகளும் செய்ய முடியாமல் நின்று போனது. இது குறித்து செயல் அலுவர்கள் விசாரிக்க பிரசாத ஸ்டாலைச் சேர்ந்தவர்கள் மடப்பள்ளியில் இருந்து எடுத்துச் சென்று 50ரூபாய்க்கு விற்றது தெரிய வந்தது. இதைவிட கொடுமை ஏன் இப்படி செய்தீர்கள் என்று கேட்டதற்கு, நாங்கள் தெரியாமல் எடுத்துச் சென்று விட்டோம். வேண்டுமானால் பொருட்கள் தந்து விடுகிறோம் மீண்டும் செய்து கொள்ளுங்கள் என்று கூலாக கூறியது தான்.

அதன் பின் வேறு வழியாமல் மீண்டும் செல்வர் அப்பம் செய்து இரவு 8:30மணிக்கு மேல் நைவேத்தியம் செய்யப்பட்டுள்ளது. இப்படியாக 5 மணி நேரம் பெருமாள் காக்க வைக்கப்பட்டுள்ளார்.ஸ்ரீரங்கம் கோவிலில் இந்த ஒரு முறைகேடு மட்டுமல்ல இது போன்ற பல அபச்சாரங்கள் நடப்பது என்பது வாடிக்கையாகி உள்ளது. ஸ்ரீரங்கத்தில் பெருமாளுக்கு நைவேத்திய நேரம் என்பதெல்லாம் கோவில் நிர்வாகம் முடிவு செய்யும் நேரம் தான். அதாவது, நம்மிடம் நம் முதலாளி வேலை நிறைய இருக்கு அதனால் காலையிலேயே காலை உணவு மற்றும் மதிய உணவு இரண்டையும் சேர்த்து சாப்பிட்டு விடுங்கள் என்று சொன்னால் எப்படி இருக்கும், அது தான் இன்று ஸ்ரீரங்கத்தில் பெருமாளுக்கு நடந்தேறி வருகிறது. இதற்கு காரணமாக அவர்கள் சொல்வது தரிசனத்திற்கு டிக்கெட் போட்டு இருக்கிறார்களாம். அதனால் பக்தர்கள் கூட்டத்தைப் பொறுத்து தான் பெருமாளுக்கு



நைவேத்திய நேரம் என்று செட் செய்துள்ளார்கள்.

கோவிலை நிர்வகிக்கவும், கோவில் சம்பிரதாயங்கள் மாறாமல் காக்கப்படுவதற்குமே தான் நாங்கள் இருக்கிறோம் என்னும் அறநிலையத்துறையால் இவைகளை சரி செய்ய முடியவில்லை என்றால் எதற்காக அவை கோவிலில் இருக்க வேண்டும்?

ஸ்ரீரங்கம் பெருமாள் கோவிலில் பெருமாளைப் பட்டினி போட்டு வேடிக்கை பார்த்தார்கள் என்றால், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியார் கோவிலிலோ பிரசாதம் மற்றும் அபிஷேகம் செய்வதற்கென்று இருக்கும் கிணற்றில் நாய் விழுந்து இறந்த நிலையில் சுத்தி சடங்கு எதுவும் செய்யாமல் பிரசாதம் போன்றவை தயாரிக்கப்படுகிறது. நாய் எப்படி மடப்பள்ளி வரை சென்றது? எப்படி அனுமதித்தார்கள் என்ற கேள்விக்கும் விடையில்லை. இறைவனை வைத்து காசு பார்க்கும் அரசிற்கு, இறைவனுக்குப் படைக்க வேண்டிய அமுதை ஆசாரத்துடனும், பக்தியுடனும் தயார் செய்ய பட வேண்டும் என்ற அக்கறை சிறிதளவு கூட இல்லை. இது அராஜகத்தின் உச்சம் இல்லையா?

போலி டிக்கெட் அச்சடிப்புக்கு பெயர் போனவர்கள் கோவில் திருவிழா கட்டண டிக்கெட்டுகளை விட்டு வைப்பார்களா என்ன? திருச்செந்தூர், திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம் என்று அனைத்து பெரிய கோவில் திருவிழாக்களிலும் போலி டிக்கெட் அடித்து மாட்டிக் கொண்டுள்ளனர்.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவிலில் செய்யப்பட்ட உற்சவ மூர்த்தி சிலையில் ஒரு பொட்டு தங்கம் இல்லை என்று இப்போது ஐஐடி ஆய்வு செய்து அறிக்கை கொடுத்து இருக்கிறது. ஆனால் இதற்காக பக்தர்களிடம் இருந்து நன்கொடையாக வசூலிக்கப்பட்ட 312 சவரன் தங்கம் என்ன ஆனது? 312 சவரன் தங்கத்தை ரசீது எதுவும் பெறாமல் பெறப்பட்டுள்ளது என்ற குற்றசாட்டும் எழுந்துள்ளது. இதில் சம்பந்தப்பட்ட அறநிலையத் துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டனர். அதன் பின் இந்த வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் இப்போது அதில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த லட்சணத்தில் தொடர்ச்சியாக பல கோவில்களை அடாவடியாக கையில் எடுத்து வருகிறது அறநிலையத்துறை. கிராமக் கோவில்களையும் விட்டு வைப்பதில்லை.! இப்படி தொடர்ச்சியாக பல அநியாங்கள் நடக்கிறதே என்று எப்போதாவது ஹிந்து மக்கள் கொதிப்படைந்து குரல் கொடுத்தால், அதை சமன் செய்ய சேகர்பாபு ஆன்மீக புரட்சி ஆட்சி, எங்கள் ஆட்சியில் தான் அதிகளவில் கும்பாபிஷேகம் நடந்தது என்று எதையாவது அடித்து விட்டு ஹிந்துகளை சாந்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவார்.

**நாய் எப்படி மடப்பள்ளி வரை சென்றது? எப்படி அனுமதித்தார்கள் என்ற கேள்விக்கும் விடையில்லை. இறைவனை வைத்து காசு பார்க்கும் அரசிற்கு, இறைவனுக்குப் படைக்க வேண்டிய அமுதை ஆசாரத்துடனும், பக்தியுடனும் தயார் செய்ய பட வேண்டும் என்ற அக்கறை சிறிதளவு கூட இல்லை.**



நீர்நிலை ஆக்ரமிப்பு, அரசு நிலம் ஆக்ரமிப்பு என்று எதையாவது ஒரு காரணம் காட்டி அரசே கோவிலை இடிப்பது ஒரு பக்கம் நடைபெறுகிறது இன்னொரு பக்கம் ஒரு விதமான மனநோய் உருவாகி இருக்கிறது. அந்த மனநோய் பாதித்தவர்களுக்கு ஹிந்து கோவில்கள் மட்டும் தான் கண்ணுக்குத் தெரியும்! அவர்கள் ஹிந்து கோவில்களை மட்டும் அசிங்கப்படுத்துவார்கள், சிலைகளை உடைப்பார்கள்! அவமதிப்பார்கள்!

03.01.2026ம் தேதியன்று சிதம்பரம் கோவில் சிவகாமி அம்மன் சன்னதி கர்ப்பகிரகத்திற்குள் கருப்புச்சட்டை அணிந்த ஒரு நபர் ஸ்வாமிக்கு அபிஷேகம் செய்ய வைத்திருந்த பாலை தன் மீது எடுத்து ஊற்றிக் கொண்டு, கடவுள் இல்லை என்று கூச்சலிட்டு அடாவடி செய்துள்ளார். இதைத் தடுக்க முனைந்த தீட்சிதர்களை பலகையைக் கொண்டு தலையில் தாக்கியுள்ளார். இந்த நபரை கைது செய்த காவல்துறை இவருக்கு மனநிலை சரியில்லை என்ற சான்றிதழை வழங்கி அவரை வெளியில் விட்டுள்ளது.

தொடர்ந்து தமிழகத்தில் கோவில்கள் குறி வைக்கப்படுவதைக் காணும் போது, தில்லை நடராசனையும், திருவரங்க நாதனையும் பீரங்கி வாயில் வைத்து பிளக்கும் நாள் என்னாளோ அந்நாளே பொன்நாள் என்ற கருணாநிதியின் வார்த்தைகளை இன்றைய திமுகவினர் நிறைவேற்றி வருகிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது.

# பபாசியின் கருத்து சுதந்திர இரட்டை வேடம் - திராவிடம் மாற்றுக்கருத்தை வெறுக்கிறது

அருண்பிரபு

எழுத்தாளர் மா.வெங்கடேசன் எழுதிய திராவிட இயக்க வரலாற்றுப் புரட்டுகள் என்ற புத்தகம் தற்போது வெளியாகியிருக்கிறது. தாமரை மீடியா வெளியிட்ட இந்தப் புத்தகம் பற்றிய விளம்பரத்தை 2026 புத்தகக் கண்காட்சியின் வாசலில் வளைவில் போட்டிருந்தார்கள். பல ரூ200 யூடியூபர்கள், ஐயகோ திராவிடத்தை அவமதித்துவிட்டார்கள் என்று தொடங்கி இந்தப் பதாகை அகற்றப்படவேண்டும் என்று கூவினர். திராவிடர் கழகத்தின் உடைசல்களில் ஒன்றான தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் ஒரே ஒரு பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் இதை அகற்றாவிட்டால் போராட்டம் நடத்துவோம் என்றார்.

இலட்சக்கணக்கில் ஆட்கள் திரண்டு வருவார்கள், போராட்டம் சென்னையை ஸ்தம்பிக்க வைக்கும் என்று பபாசி அஞ்சியதா தெரியவில்லை. மறுநாள் முதல்வர் ஸ்டாலின் புத்தகக் கண்காட்சிக்கு வருகிறார் என்ற தகவலின் அடிப்படையில் இந்த விளம்பரத்தின் மீது ஏதோ சில ஸ்டிக்கர்கள் ஒட்டி, அதற்குக் கீழே வேறு பெரிய விளம்பரப் பலகை வைத்து இயல்பாக இருப்பது போலச் செய்து விட்டார்கள். திராவிடத்துக்கு எதிரான புத்தகம் என்றால் விற்கக்கூடாதா அதற்கு விளம்பரம் கூடாதா? இது திராவிட சர்வாதிகாரமா? கருத்துக்கு எதிர்க்கருத்து வைக்க இயலவில்லை என்றால் பேசாமல் போகவேண்டியது தானே? பிடிக்காத புத்தகம் என்றால் படிக்காதீர்கள் என்று ஒரு சமூகத்தை வன்மத்தோடு இழிவுபடுத்திய பெருமாள் முருகன் விவகாரத்தில் பேசியவர்கள் தானே திராவிடர்கள்? இவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் விளம்பரத்தை மறைப்பதும் புத்தக விற்பனையை எதிர்ப்பதும் செய்வார்களா?




அதே நேரத்தில், தற்போது பதவியில் இருக்கும் நீதிபதியை அவமதித்து எழுதிய புத்தகத்தை பபாஸி, புத்தக் கண்காட்சியில் வெளியிட தயாராக தான் இருந்தது. ஆனால் அதற்குள் வழக்கு என்று ஒன்று வந்ததனால் பபாஸியும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சேர்ந்து சந்திக்க வேண்டும் என்ற பயத்தில் கீழை காற்று பதிப்பகத்திடம் இந்த புத்தகம் கண்காட்சியில் விற்க கூடாது என்றது. உடனே, கருத்து சுதந்திரம் பறிக்கப்படுகிறது என்று குதித்தார்கள்.

இந்த கருத்து சுதந்திர புலிகள் ஏன் இப்போது மா.வெங்கடேசன் புத்தகத்தை எதிர்க்க வேண்டும்.? ஒரு சின்ன விளம்பரம் வந்தவுடன் எதற்கு பயப்பட வேண்டும்?

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று திமுகவைச் சேர்ந்த முன்னாள் முதல்வர் திரு. அண்ணாத்துரை பேசியது கருத்துக்குக் கிடையாதோ? வேறெதற்கோ? கருத்து சுதந்திரக் காவலர் என்று கருணாநிதியைத் திமுகவினரே புகழ்வார்கள். நம் கேள்வி. அந்த கருத்து சுதந்திரக் காவலர் கற்றுக்கொடுத்தது மாற்றுக்கருத்து என்றால் ஒவ்வாமையும் வெறுப்பும் என்று தானா?

பலரும் பபாசி நடுநிலையான அமைப்பு, ஆகவே மாற்றுக்கருத்தை மறைக்கவோ நீக்கவோ செய்யாது என்றார்கள். ஆனால் அதையெல்லாம் பொய்யாக்கி ரூ 200 வாங்காவிட்டாலும் உபிகளுக்குச் சளைத்தவர்களா நாங்கள் என்று திராவிடத்துக்குக் கொடிபிடித்துள்ளது பபாசி. இவர்களிடம் போய்க் கருத்து சுதந்திரம் என்றால் யாருங்க அது கருத்த சுந்தரம் என்று கேட்டாலும் ஆச்சரியமில்லை. சரி... முதல்வராவது விவரத்தை அறிந்து மாற்றுக்கருத்தை மறைக்க வேண்டாம் என்று சொல்லுவார் என்று பார்த்தால் இப்படி ஒரு விஷயம் நடந்ததே தெரியாதது போல அவர் தொடக்க விழாவுக்கு வந்து போயிருக்கிறார்.

இனிவரும் அரசாவது கருத்துக்களை அனுமதிக்கும் அரசாக அமைய பாரதத் தாயின் திருவடிகளில் வணங்குவோம். வந்தே மாதரம்.

**குறிப்பு:** திராவிட இயக்க வரலாற்றுப் புரட்டுகள் புத்தகம் மிகச் சிறப்பாக உண்மைகளைத் தரவுகளோடு வெளிக்கொண்டு வந்து புதிய பார்வையைத் தந்திருக்கிறது. அதைக் கண்டிப்பாக இயன்றவர்கள் அனைவரும் வாங்கிப்படிப்பது நல்லது.

ஒரே ஒரு முகச்சுளிப்பு அதன் விலை. ரூ200 என்று வைத்திருக்கிறார்கள். ஏதோ உதைக்கிறது. ரூ190 அல்லது ரூ210 என்று வைத்தால் உபிகள் அல்லாதோர் முகமலர்ச்சியோடு வாங்கி மகிழ ஏதுவாக இருக்கும்.

**நாம் யாரை அதிகம் நேசிக்கிறோமோ அவர்களை காலம் சீக்கிரம் அழைத்துக்கொள்கிறது - நடிகர் ரஜினிகாந்த்**

தலைவா ! கொஞ்சம் திராவிடத்தை நேசிக்கக் கூடாதா? உங்கள் ஒரு துளி வியர்வைக்கு ஒரு பவுன் தங்கம் கொடுத்த தமிழகத்திற்காக....

**மு.க.ஸ்டாலின் ஆட்சி நன்றாக இருக்கிறது - மருத்துவர் ராமதாஸ்**

இந்த வார்த்தைகளை எல்லாம் கேக்கும்போது, மக்களுக்கு அம்னீசியா இருக்கவேண்டுமா ? அல்லது அரசியல் கட்சித் தலைவர்களுக்கா ?

**பக்தர்கள் போற்றும் ஆட்சி இது - முதல்வர் ஸ்டாலின்**

அவரு ரோமாபுரி, மெக்காபுரி, அறிவாலயபுரி பக்தர்களை சொல்றாரு போல

**ஜல்லிகட்டில் ஸ்டாலின், உதயநிதி பங்கேற்பு**

ஜல்லிகட்டு தடைக்கும் கை தட்டினாங்க ஜல்லிகட்டுக்கும் கைதட்றாங்க.. என்ன தான் பிறவியோ




- நா.பாஸ்கரன்

**புதிதாக சினிமாவில் இருக்கும் ஒருவரை தூண்டிவிட்டு அரசியல் செய்ய நினைக்கிறார்கள் - கி. வீரமணி**

தூண்டிவிட இத்தனைவருட அனுபவம் உள்ள நாங்க இருக்கும்போது, புதிதாக ஒருவரை எப்படி அனுமதிக்கலாம் னு கோவத்துல கொந்தலச்சிருக்காரு..

**மரியா கொரினா மச்சோடாவிடமிருந்து நோபல் பரிசை பெற்று கொள்ள தயார் - டிரம்ப்**

பினாமி சொத்து தான் கேள்விபட்டிருக்கிறோம். பினாமி பரிசு புதுசா இருக்கே..

**சுசீந்தரம் தேரோட்டத்தில பக்தர்களை பீய திங்குறியா என்று சேகர் பாபு கேட்டாரே?**

அது தான் அவரு சாப்பாடுனு பொன் இராதா கிருஷ்ணன் வெச்சு செஞ்சுட்டாருல்ல..

**உங்களை எல்லாம் Phd படிக்க வைத்து ஆளாக்கி இருக்கேன், நீங்க தவெகவில் இணைந்து மீண்டும் பால்வாடியில் சேர ஆசைப்படுகிறீர்கள் - திருமாவளவன்**

அஸ்திவாரம் சரி இல்லைனா, மீண்டும் Basement இடிச்சிட்டு போடத்தான் செய்வாங்க.... ஆனா மறுபடியும் Weak Basement போட்டா. இந்த நாடும் நாட்டு மக்களும் நாசமாய் போகட்டும்ங்குற வசனம்தான் Mind ல வருது...

# தன்னை நம்பிய அரசு ஊழியர்களுக்கு வஞ்சனை இதுவே திராவிட மாடல் ஆட்சியின் சாதனை!

— நாணா




2003 ஏப்ரல் முதல் தேதிக்குப் பின் தமிழக அரசுப் பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தப்படும் என 2021 ஆம் ஆண்டு சட்டப் பேரவைக்கான தேர்தல் அறிக்கையில் தி.மு.க. வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால் நாளை அறிவித்து விடுவோம், இந்தா அறிவித்து விட்டோம், இதோ, இப்போதே என்று ஏமாற்றி வந்ததே தவிர எதையும் செய்யவில்லை.

இந்த நிலையில் தான், தேர்தலுக்கு முன்பு திமுக தங்களிடம் ஒப்புக் கொண்ட, பழைய ஓய்வூதியத் திட்டம், காலிப் பணியிடங்களை நிரப்புதல், 'சமவேலைக்கு சமஊதியம்' உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ உள்ளிட்ட அமைப்புகள் பல்வேறு கட்ட போராட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்தன. இதில் ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் கைது, சிறை, அச்சுறுத்தல் என அனைத்தையும் தைரியமாக சந்தித்தனர்.

எங்கே தங்களுக்கு வேண்டிய அரசு ஊழியர்களே தங்களுக்கு எதிராக மாறிவிடக் கூடும் என்ற அச்சம் காரணமாக வழக்கமான திராவிட மாடல் ஏமாற்று வித்தையில் இறங்கியது மாநில அரசு. கடந்த ஆண்டு பிரதமர் மோடியின் தலைமையில் மத்திய அமைச்சரவை கூடி, மத்திய அரசு அறிவித்த புதிய ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை அப்படியே நகல் எடுத்து அது தன்னுடைய திட்டம் போல அறிவித்தது மாநில அரசு.

மத்திய அரசின் புதிய ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த அனைத்தும் 2026ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்துள்ள உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தில் அப்படியே இருந்தன. திராவிட மாடல் அரசுக்கு ஸ்டிக்கர் ஒட்ட சொல்லிக் கொடுக்க வேண்டுமா என்ன?

இந்த நிலையில், அரசின் ஓய்வூதியத் திட்டத்தை ஆராயாமலே, தாங்கள் எப்போதுமே அரசு ஊழியர், ஆசிரியர் பக்கம் என்று சொல்லி வந்த ஜாக்டோ-ஜியோ திடீரென்று அரசின் அறிவிப்பை ஏற்று போராட்டத்தை வாபஸ் பெற்றது அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு மிகுந்த அதிர்ச்சியை கொடுத்தது.

பழைய ஓய்வூதியத் திட்டத்தில் ஊழியர்களின் பங்களிப்பு என்று எதுவுமே இல்லாத போது TAPS எனப்படும் இந்தத் திட்டத்தை ஊழியர்கள் சம்பளத்தில் 10 சதவிகிதம் ஓய்வூதியதற்காக பிடித்தம் செய்யப்படும் என்பது பெரிய அதிர்ச்சி. முழுமையாக அரசே ஓய்வூதியம் வழங்கி வந்த நிலையில் இப்போது தங்களிடம் பணம் பெற்று, அதையே வட்டியுடன் அரசு திருப்பித் தருகிறது என்பதை பெரும்பாலான ஊழியர்கள் உடனடியாக கண்டுபிடித்து விட்டனர். அரசு பிடித்தம் செய்து வட்டியுடன் தர இருக்கும் பணத்தை விட மாதம் மாதம் SIP இல் முதலீடு செய்து வந்தால் கூட 25, 30 ஆண்டுகளில் அரசு தரும் ஓய்வூதியத்தை விட அதிகம் கையில் கிடைக்கும், மாத வருமானமும் இருக்கும் என்பது நிதி நிறுவன செயல்பாடுகள் அறிந்தவர்களின் கூற்று. இதற்கு அவர்கள் கூறும் உதாரணம் ஒவ்வொன்றும் மிகவும்

**ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சியின்போது அ.தி.மு.க. அரசு சிபிஎஸ் என்றொரு ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்தது. இந்தத் திட்டத்திற்கு எதிராக அரசு ஊழியர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு நின்று எதிர்த்தனர்.**




சரியாகவே உள்ளதால் அரசு ஊழியர்கள் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகினர். அதுமட்டுமல்லாமல், எத்தனை ஆண்டுகள் பணியாற்றினால் முழு ஓய்வூதியம், அரசின் பங்கு என்பது எவ்வளவு, அது ஏன் தெளிவாக வரையறை செய்து குறிப்பிடப்படவில்லை என்பவை பதில் வராத கேள்வியாக உள்ளன.

ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சியின்போது அ.தி.மு.க. அரசு சிபிஎஸ் என்றொரு ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்தது. இந்தத் திட்டத்திற்கு எதிராக அரசு ஊழியர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு நின்று எதிர்த்தனர். சி.பி.எஸ். ஒழிப்பு இயக்கம் ஒன்றைத் துவக்கினர். ஆமை தன் உறுப்புகளை ஓட்டுக்குள் உள்ளே இழுத்துக் கொண்டு கிடப்பதுபோல காட்சியளித்தது தமிழ்நாடு அரசு! சி.பி.எஸ். திட்டம் ஊழியர் பணி ஓய்வு பெறும் போது - “நாம் செலுத்திய 10 சதவீதம் அரசு செலுத்திய 10 சதவீதம் இதற்கு வட்டி 8 சதவீதம் எல்லாம் சேர்த்து ஏறத்தாழ ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் ஓய்வு பெறும்போது கையில் வாங்கிக் கொண்டு போகலாம்!” இந்த நிலை இப்போது ஸ்டாலின் அறிவித்துள்ள உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத்திட்டத்தில் இல்லை! ஒட்டுமொத்த அரசு ஊழியர்களும் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டிலுள்ள அங்கன்வாடி ஊழியர்கள் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் வாழ்வாதாரக் கோரிக்கைகளை வலியுறுத்தி, கடந்த நான்கரை ஆண்டுகளாக பல்வேறு கட்டப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தூய்மைப் பணியாளர்கள் கடந்த ஆறு மாதங்களாக தனியார் வசம் ஒப்படைப்பு, சம்பளக் குறைப்பு போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக போராடி வருகின்றனர். செவிலியர்கள் போராட்டம் கடந்த நான்கரை ஆண்டுகளாக தொடர்ந்துக் கொண்டே இருக்கிறது. அரசுப் போக்குவரத்து துறை ஊழியர்கள், மின்சாரத்துறை ஊழியர்கள், தமிழ்நாடு அரசு மருத்துவத்துறை டாக்டர்கள் என அரசுத்துறையின் பல்வேறு பிரிவினர் ஏமாற்றத்துக்கு உள்ளாகி தொடர்ந்து போராடி வருகின்றனர்.




பொழுது மறைந்து, பொழுது விடிந்தால் விடியல் ஆட்சியின் அலங்கோலங்கள் அரங்கேறத் துவங்கிவிடுவது கடந்த மூன்று ஆண்டுகால வாடிக்கை. போராடும் அரசு ஊழியர் மீது அடக்குமுறையை ஏவுதல், தாய்மார்கள், வயதானவர்கள், மாற்றுத் திறனாளிகளை தரதரவென்று இழுத்துச் செல்லுதல்,

**சிலரை சில காலம் ஏமாற்றலாம், பலரை பலகாலம் ஏமாற்றலாம், ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது என்பதை 2026 சட்டமன்றத் தேர்தல் திமுகவுக்கு உச்சந்தலையில் அடித்துச் சொல்லும் என்பது உறுதி**

போராட்டக் காரர்களை கைது செய்து மண்டபத்தில் வைத்தால் மண்டபத்தின் கழிப்பறை சாவியை எடுத்து வைத்துக் கொண்டு இயற்கை அழைப்புகளை கூட அவர்கள் கழிக்க முடியாத வகையில் உபாதைகளை உருவாக்குதல் என்று மனிதத்தன்மையில்லாமல் நடந்துக் கொள்ளும் திராவிட மாடல் அரசின் ஏவல்துறையின் கொடுமைகளை வார்த்தைகளால் வருணிக்க இயலாது.

நம்பிக்கை கொடுத்து, ஓட்டுகளைப் பெற்று, தான் ஆட்சியில் அமரக் காரணமானவர்களையே வஞ்சித்து விட்ட நிலையில், எல்லா வகைகளிலும் தோற்று விட்ட, இந்த அடாவடி அரசு தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் அனைத்துத் துறை அரசு ஊழியர்களிடம் மேலோங்கி வருவதைப் பார்க்க முடிகிறது.

சிலரை சில காலம் ஏமாற்றலாம், பலரை பலகாலம் ஏமாற்றலாம், ஆனால் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது என்பதை 2026 சட்டமன்றத் தேர்தல் திமுகவுக்கு உச்சந்தலையில் அடித்துச் சொல்லும் என்பது உறுதி.




# இராமர் படம் இருந்தால் மதநல்லிணக்கம் கெடும்!! பாதிரியாரின் உச்சகட்ட வெறுப்பு

**- சிவ சேனா தலைவர் அ.மாதவன் அறிக்கை**

***மன்னார்த் தமிழ்ச் சைவ மக்களின் முகத்தில் செருப்பால் அடிக்கும் கத்தோலிக்க கிறிஸ்தவ சபை!***

இலங்கை மன்னார் நுழைவாயிலில், மன்னார் சுற்றுலாத்துறை சார்பாக நிறுவப்பட்ட விளம்பரப் பலகையில் இராமர் பாலம் தொடர்பான அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டது. இதில் இராமர், லக்ஷமணர், ஆஞ்சனேயர் படங்கள் இடம்பெற்றிருக்கிறது. இந்தப் பெயர் பலகையை அகற்றும்படி, கிறிஸ்தவர்கள் நகரசபைக்கு அழுத்தம் கொடுத்தனர். கிறிஸ்தவர்களின் கோரிக்கையை ஏற்று விளம்பரப் பலகை அகற்றப்படவில்லை என குறிப்பிட்டு, மன்னார் மறைக்கோட்ட முதல்வர் கிறிஸ்துநாயகம், மன்னார் நகரசபை தவிசாளருக்கு டிசம்பர் 30, 2025 அன்று கடிதம் எழுதியுள்ளார். விளம்பரப் பலகையில் இடம்பெற்ற ஹிந்து தெய்வங்களின் படங்கள் மத நல்லிணக்கத்தை பாதிப்பதாகவும், மத ஒற்றுமையை சீர்குலைப்பதாகவும், குழப்பத்தைத் தோற்றுவிப்பதாகவும் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இராமர் பாலம் என்ற பெயர் பலகையை அகற்ற வேண்டும் என்ற கிறிஸ்தவர்களின் கோரிக்கை, மன்னாரின் பாரம்பரியத்தை அழிக்கும் கிறிஸ்தவ சதி என்று சிவ சேனா தலைவர் திரு. அ. மாதவன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில், இராமர் படம் அமைந்த விளம்பரத் தட்டியை இலங்கை அரசு மன்னாரின் நுழைவாயிலில் வைக்கக் கூடாது என்கிறார்கள். திருக்கேதீச்சரக் கோயில் நுழைவாயிலில் கத்தோலிக்க உலூர்தம்மாள் தேவாலயத்தைக் கட்டுகிறார்கள், திருக்கேதீச்சரம் கோயில் நுழைவாயிலில் வரவேற்பு வளைவை கட்டினால் உடைக்கிறார்கள் , நந்திக் கொடியை காலால் மிதிக்கிறார்கள்.


இராமர் பாலம் பற்றிய அறிவித்தல் பலகையில் இந்துக் கடவுளரின் படங்களை அனுமதியாதீர்!

மன்னார் மறைக்கோட்ட முதல்வர் காட்டம்


மன்னார் சிவபூமி. இராமரின் பூமி. இராமரின் இலங்கைக்கான நுழைவாயில். சீதையை மீட்டு இராமேச்சரத்துக்கான புறப்பாட்டு முனையம். மன்னார் மாவட்டமெங்கும் இராமரைப் பேசும் முனையங்கள். பாலைவனத்தில் எழுதிய பட்டோலைகளைப் படிப்பவருக்கு, பசுஞ்சோலையில் எழுதிய காப்பியங்களின் கருப்பொருள் தெரியாமல் இருப்பது வியப்பல்ல. இலியத்தையும் ஒடிசியையும் மனப்பாடம் செய்த வெள்ளாடையருக்கு இராமர் மன்னாருக்கு வந்ததைக் கூறும் சங்க இலக்கியங்களோ தமிழ் காப்பியங்களோ சிலப்பதிகாரமோ மணிமேகலையோ கம்ப இராமாயணமோ வில்லிபாரதமோ தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவை சாத்தானின் காப்பியங்கள் அல்லவா கத்தோலிக்கருக்கு. இலியத்தோடும் ஒடிசியோடும் பழைய ஏற்பாட்டோடும் புதிய ஏற்பாட்டோடும் பின்னிப் பிணைந்த நிலங்கள் முன்னீர்க் கடலுக்கு அப்பால் மேற்கே பாலைவனத்திலும் அப்பாலும் அல்லவா? வந்தேறி இலக்கியங்களில் வாழ்வியலைக் காண்பவர்களுக்கு இராமாயணம் கசக்கும். சாத்தானின் காப்பியமாகக் கண்ணுள் எண்ணெயாய் எரியும்.

குறிஞ்சிக்கு முருகனையும், முல்லைக்கு இராமரையும், மருதத்துக்கு இந்திரனையும், நெய்தலுக்கு வருணனையும்0, பாலைக்குக் கொற்றவையையும் வழிபாட்டு வாழ்வியலாகக் கொண்ட தமிழர், இராமரின் படத்தை வைக்காமல் வேறு யாரின் படத்தை வைப்போம்? முருகனையும் இராமரையும் இந்திரனையும் வருணனையும் கொற்றவையையும் சாத்தான்கள் என இழித்தும் பழித்தும் 450 ஆண்டுகளாகப் பேசுகின்ற பரங்கிக் கத்தோலிக்கருக்கு இராமரின் படம் கண்ணுக்குள் எண்ணெய்யாகி எரிவது வியப்பல்ல. இராமர் சாத்தான், இராமரின் படத்தை அரசு வைக்கக் கூடாது என வத்திக்கான் ஆயரின் சார்பாளர், 3000 ஆண்டுகளுக்கும் கூடிய வரலாற்று நாயகர்களான மன்னார்த் தமிழ்ச் சைவர்களின் முகத்தில் செருப்பால் அடித்திருக்கிறார்.

# ஜனநாயக(ன்) அரசியல்

நைனிகா

தமிழகத்தில் ஒரு திரைப்படம் வெளியாவதற்கு முன்பே அரசியல் களத்தில் பெரிய புயலை கிளப்பியது ஜனநாயகன் படமாகத்தான் இருக்குமா என்றால் இல்லை இதற்கு முன்னர் பல படங்கள் இந்த மாதிரி பல சர்ச்சைகளுடன் வெளிவந்து உள்ளன. அதிலும் குறிப்பாக விஜயின் திரைப்படங்களுக்கும் சர்ச்சைக்கும் பஞ்சமில்லை. விஜய் ஏன் இதனை செய்கிறார் என்று சற்று உற்று நோக்கினால் இதன் பின்புலத்தில் உள்ள வணிக நோக்கம் மற்றும் அரசியல்களத்தில் தன்னை வலுபடுத்திக் கொள்ள இந்த திரைப்படங்களை பயன்படுத்தி கொள்கிறார் என்பது புரியும்.




மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை தழுவி எடுக்கப்பட்டதாகக் சொல்லப்படும் இந்தப் படம், கலைத் துறையைத் தாண்டி அரசியல் மற்றும் சட்ட ரீதியான விவாதப் பொருளாக மாறியுள்ளது. கருத்து சுகந்திரம் ஒரு படைப்பாளியின் உரிமை என்றாலும், “கருத்து சுதந்திரம்” என்ற போர்வையில் உண்மைக்குப் புறம்பான விஷயங்களை உள்நோக்கத்துடன் திணிப்பது விமர்சனத்திற்கு உள்ளாகிறது. குறிப்பாக, வரலாற்றுத் தரவுகளைத் தற்கால அரசியலோடு ஒப்பிட்டுத் திரித்துக் கூறுவது நல்ல படைப்பிற்கு அழகல்ல அது சமுதாயத்திற்கு பெரும் கேடு ஏற்படுத்தும்.

இந்தப் படத்தை தணிக்கை செய்த, தணிக்கை வாரியம் (CBFC) ஒரு சில காட்சிகளை வெட்டியும் வசனங்களை நீக்கியும் U/A சான்றிதழ் வழங்கியது. இருப்பினும் படம் பார்த்த தணிக்கைக் குழுவில் ஒருவர் படத்தின் காட்சியின் மீது புகார் கூறியதால் மீண்டும் மறுசீராய்வுக் குழுவிற்கு (Revising Committee) அனுப்பப்பட்டது. இதனால் படம் வெளியாவது தாமதம் ஆனது.

‘இதனை எதிர்த்து ஜன நாயகன்’ படத் தயாரிப்பாளர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகினர். சாதாரணமாக நீதிமன்ற வழக்குகள் நீண்ட காலம் எடுக்கும் நிலையில், இந்த வழக்கில் மிக விரைவாக தீர்ப்பு வந்தது எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது. வழக்கை விசாரித்த நீதிபதி பி.டி. ஆஷா, ஒரு தனி நபர் புகாரால் படத்தின் சான்றிதழை நிறுத்துவது முறையல்ல எனக் கூறி, உடனடியாக U/A சான்றிதழ் வழங்க உத்தரவிட்டார். தணிக்கைக் குழு இந்தத் தீர்ப்பை எதிர்த்து மீண்டும் மேல்முறையீடு செய்திருக்கிறது. இப்போது இதை வைத்து மத்திய அரசின் மீது பழி போட்டு திமுக, காங்கிரஸ் கட்சிகள் அரசியல் ஆதாயம் தேடத் தொடங்கியுள்ளன. இதில் முதல்வர் ஸ்டாலின் பேசியது தான் டாப். பாஜக அரசின் புதிய ஆயுதமாக சென்சார் போர்டும் மாறியுள்ளது என்று கூறியுள்ளார்.

தணிக்கைக் குழுவால் அங்கீகாரம் செய்யப்பட்ட பல படங்கள் தமிழகத்தில் திரையிட முடியாமல் போனது. தணிக்கை குழு சான்று அளித்த பின்னும் விஸ்வரூபம் படத்தை முஸ்லீம்களுக்குத் திரையிட்டு காட்டிய பிறகு தான் திரையரங்குகளில் திரையிட அனுமதிப்போம் என்று முஸ்லீம்கள் போராட்டம் நடத்திய போது ஸ்டாலின் இது கருத்து சு தந்திரத்திற்கு எதிரானது என்று ஏன் வாதிடவில்லை? இதே நிலை தான் விஜய்ன் துப்பாக்கி படத்திற்கும் ஏற்பட்டது.

காஷ்மீரி பைல்ஸ், கேரளா லவ் ஸ்டோரி போன்றவை நடந்த சம்பவங்களின் அடிப்படையில் எடுக்கப்பட்ட படம் தானே? அதை ஏன் தமிழகத்தில் ஓட விடவில்லை.

தணிக்கை குழுவின் தணிக்கையில் பல காட்சிகள் நீக்கப்பட்டு சான்றிதழ் பெற்ற பிறகும் கிடுகு படம் ஏன் திரையரங்குகளில் திரையிடப்படவில்லை.? கேரளாவில் சூப்பர் ஹிட்டான படம் டிரான்ஸ். அந்த படம் மொழியாக்கம் செய்யப்பட்டு தமிழில் வந்த போது, தமிழக திரையரங்குகளில் ஏன் திரையிட முடியவில்லை?

சூப்பர் ஹிட் படம் காந்தாராவை அதிக நாட்கள் தமிழக திரையரங்குகளில் ஓட விடாமல் பார்த்து கொள்ளப்பட்டதே.

இது குறித்து எல்லாம் குரல் கொடுக்காதவர்கள் இன்று தேர்தல் காலத்தை மனதில் கொண்டு அரசியலாக்கி அந்த பழியை மத்திய அரசின் மீது சுமத்துகிறார்கள். திரைப்படங்கள் அரசியலுக்காகவும், கருத்தாக்கத்திற்காகவும் எடுக்கும் நிலை மாறாத வரை இதுப் போன்ற சர்ச்சைகள் தொடரத்தான் செய்யும்!

# ஹிந்துக்கள் இருக்குமிடத்தில் கோயில் இருக்க வேண்டா!

ராயன்

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா என்ற முதுமொழிக்கு ஏற்ப ஹிந்துக்கள் தாங்கள் வசிக்கும் இடங்களில் கோயில் கட்டி, திருவிழா நடத்தி ஊர்மக்களுக்கும், உலகத்தோர் அனைவருக்கும் நன்மை வேண்டி பிரார்த்தனை செய்வதே வழக்கம். கோயில் இருந்தால் சமுதாய ஒருங்கிணைப்பு ஏற்பட்டு சாதியமும், ஏழை பணக்காரன் என்ற பாகுபாடும் ஒழிந்து சமதர்மம் உண்டாகி விடும் என்ற அச்சத்தால் திராவிட மாடல் ஒரு புது ஸ்ட்ராடஜியை செயல்படுத்தி வருகின்றனர்.



கோயில் வழிபாட்டில் சாதிய மோதலை ஏற்படுத்தி, அதையே காரணம் காட்டி அக்கோயிலுக்கு பூஜையே நடந்தேறா வண்ணம் பூட்டு போடுவது. ஹிந்துக்களின் வழிபாட்டுக்கு பல இன்னல்களை ஏற்படுத்தும் நிலையில் நீதிமன்ற படியேறி உத்தரவு வாங்கி வந்தாலும் அதை செயல்படுத்தாமல் ஹிந்துக்களுக்கு அநீதி இழைப்பதை வாடிக்கையாக்கியுள்ளது. அடுத்த திட்டமாக ஹிந்துக்கள் பன்னெடுங்காலமாக வழிபட்டு வரும் கோவில்களை ஆக்ரமிப்பு எனக் கூறி இடிப்பதை ஒரு தலையாய பணியாக செய்து வருகின்றனர். இதுவரை நூற்றுக்கணக்கான கோயிலை இடித்து "மொகலாய" சாதனை புரிந்துள்ளது திமுக அரசு.

திருப்பூர் மாவட்டம் அவிநாசியை அடுத்து ஈட்டிவீரம்பாளையம் ஊராட்சிக்கு உட்பட்ட ராக்கியாபட்டி பகுதியில் 2.8 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் குமரன் குன்று என்ற பெயரில் முருகர், விநாயகர், சிவலிங்கம், நந்தி உள்ளிட்ட சன்னதிகள் கொண்ட செல்வ முத்து குமாரசாமி திருக்கோயில் பல ஆண்டுகளாக அங்கு இருந்து வருகிறது.

அங்கு திடீரென கோயில் இடிக்கப்பட்டதற்கான காரணம் குறித்து ஹிந்து முன்னணி மாநில செயலாளர் திரு. கிஷோர் குமார் ஸ்ரீ டிவிக்கு அனுப்பிய வீடியோவில் சில முக்கியமான தகவல்களை பகிர்ந்து கொண்டார். கடந்த சில ஆண்டுகளாக பராமரிப்பின்றி இருந்த கோயிலை பக்தர்கள் பெரும் முயற்சி எடுத்து தங்கள் பணத்தில் கோயிலை புனரமைப்பு பணி செய்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிலர் கோயில் இருந்த பகுதியில் தங்களுக்கு பட்டா கேட்டு போராட்டம் நடத்தியதையடுத்து, பல கட்ட பேச்சு வார்த்தைக்குப் பின் பட்டா கேட்டவர்களுக்கு வேறு இடத்தில் ஒதுக்குவதாக மாவட்ட கலெக்டர் தெரிவித்தார். இந்நிலையில் தாசில்தார் கடந்த அக்டோபர் 10ம் தேதி நோட்டீஸ் அனுப்பியுள்ளார். அரசு நில ஆக்கிரமிப்பை அகற்றப்பட வேண்டும் என அனுப்பிய நிலையில் ஊர் கோயில் கமிட்டியினர் நீதிமன்றத்தை நாடினர். நீதிமன்றம் கோயிலை இப்போதைக்கு ஒன்றும் செய்யக் கூடாது என்றதோடு கமிட்டியினர் மேல்முறையீடாக மாவட்ட ஆட்சியரை அணுகவும் உத்தரவிட்டது.

மக்களும் கலெக்டருக்கு மேல்முறையீடு மனு ஒன்றையும் கொடுத்துள்ளனர். இந்நிலையில், எந்தவித முன்னறிவிப்பின்றி ஜனவரி 7ம் தேதி அதிகாலை 2 மணிக்கு 300 போலீசார் ஜேசிபியை வைத்து கோயிலை தரைமட்டாக்கினர். இதை தடுக்க வந்த மக்களை குண்டு கட்டாக தூக்கி வண்டியில் ஏற்றி கைது செய்தனர்.

இது குறித்து கேள்விப்பட்ட ஹிந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்ரமணியம் அங்கு செல்ல முற்பட்ட போது காவல்துறை தடுத்தது. உடல்நிலை சரியில்லை என்று சொன்ன நிலையிலும் காவல்துறை அவரிடம் அராஜகப்போக்குடன் நடந்த கொண்ட நிலையில் அவர் கீழே விழுந்து காயம் ஏற்பட்டது. அவருடன் போராடிய ஊர்மக்கள், ஹிந்து முன்னணி நிர்வாகிகள் என அனைவரையும் கைது செய்தனர்.

ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமானால் 15 நாட்கள் முன்பு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமே என தாசில்தாரிடம் கேட்ட போது, அதெல்லாம் கொடுக்க முடியாது என்றார். நீதிமன்ற உத்தரவை மேற்கோள்காட்டி கேட்டதற்கு அந்த அவமதிப்பை எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன் என திமிராக பேசியதாக திரு.கிஷோர் குமார் தெரிவித்தார்.

திருப்பரங்குன்றத்தில் நீதிமன்ற தீர்ப்பை எந்நிலையிலும் செயல்படுத்த மாட்டோம் என திமிருடன் செயல்பட்ட அதிகாரிகளுக்கு அரசு துணையாக இருந்தது போல தங்களையும் ஆதரிக்கும் என்ற எண்ணத்தில் தாசில்தார் செயல்பட்டிருப்பதாகவே தெரிகிறது.

ஹிந்துக்கள் விஷயத்தில் நீதிமன்றத்தை இனி எப்போதும் மதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டுடன் அரசு செயல்படுவதாகவே தெரிகிறது.

அப்படியென்றால் இனி ஹிந்துக்களுக்கு வேறு வழிதான் என்ன இருக்கிறது....

# இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு சவால் விடும் இஸ்லாமிய பெண்

கடையநல்லூரைச் சேர்ந்த முஸ்லீம் இளம்பெண் வஹீதா பேகம். இவர் சமூக வலைதளங்களில் நடனமாடி, பாட்டு பாடி வீடியோ வெளியிடுவதால் பிரபலமானார். இவர் வெளிட்ட வீடியோக்களில் பர்தா இல்லாமலோ, உடல்பாகங்களை வெளிபடுத்தியோ வீடியோ வெளியிட்டதில்லை. பர்தா அணிந்த பெண் எப்படி வீடியோ வெளியிடலாம் என்ற அடிப்படைவாத முஸ்லீம்கள் கொந்தளித்தனர். வஹீதா பேகம்-ன் தாயாரை மிரட்டி, இந்த பெண்னை சமூக வலைதளத்திலிருந்து விலக அழுத்தம் கொடுத்து வருகின்றனர். இந்த மிரட்டல்களுக்கு அஞ்சாமல் மிரட்டியவர்களின் பிடரியைப் பிடித்து கடையநல்லூர் மானத்தை வாங்குபவர்கள் யார் என்று கேள்வி கணைகளைத் தொடுத்து வீடியோ வெளியிட்டுள்ளார் வஹீதா பேகம்.

மைனர் பெண்கள் மதரஸாவிலும், வீடுகளிலும், சாலைகளிலும் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட கொடுமையை சுட்டிக் காட்டியுள்ளார். பிறர் மனைவியரை கபளீகரம் செய்ய கணவனை வெளிநாட்டுக்கு அனுப்புவது, சிறுவர்களுக்கு போதை வஸ்துக்களை விநியோகிப்பது, மனைவியை கொத்தடிமை போல் நடத்துவது, பெண்களை போகப் பொருளாக கருதுவது, பெண்களுக்கான சொத்துரிமையை கொடுக்காமல் அவர்களை துன்பப்படுத்துவது என்று நீள்கிறது வஹீதா பேகத்தின் குற்றசாட்டு பட்டியல். எத்தனை காலம் தான் பெண்களை கொடுமைப்படுத்துவீர்கள் என்ற உள்ளக் குமறலுடன் நீ உன் வேலையை பாரு, நான் என் வேலையை பார்க்கிறேன் என்று வீடியோவை முடிக்கிறார் வஹீதா பேகம். மதம் என்ற பெயரில் பெண்களை அடிமைப்படுத்தும் அடிப்படைவாத செயல்களை கோடிட்டு காட்டிய வஹீதா பேகம் அவர்களின் துணிச்சல் பாராட்டுக்குரியது.

திருநெல்வேலி மேலபாளையத்தில் மும்தாஜ் என்ற பெண்ணை ஒழுக்கம் கெட்டவள் எனக் கூறி கல்லால் அடித்துக் கொன்றார்கள். அதே மேலபாளையத்தில் ஹாரூன்நிஷா என்ற பெண்ணை ஒழுக்கம் கெட்டவள் எனச் சொல்லி கத்தியால் அறுத்துக் கொன்றார்கள். இந்த காட்டுமிராண்டி செயல்களால் அச்சமுற்று அடிப்படைவாதிகளுக்கு அஞ்சி முஸ்லீம்களும் ஹிந்துக்களும் காவல்துறையினரும் வாழ்ந்து வருகிறார்கள். இந்நிலையில், இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் Moral policing-ஐ வஹீதா பேகம் துணிச்சலுடன் எதிர்கொண்டு இருப்பது நல்ல மாற்றத்திற்கான தொடக்கம்.

ஆனால், தற்சமயம் அந்த பெண் இந்த வீடியோவை சமூக வலைதளங்களிலிருந்து நீக்கியுள்ளார். இதை வைத்து பார்க்கும் போது அவர் மிரட்டப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் வலுக்கிறது. எனவே, இந்த பெண்ணிற்கும், அவரது குடும்பத்திற்கும் காவல்துறை பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

# நபிகள் குறித்த வீடியோ வெளியிட்ட கிறிஸ்தவர் -பகிர்ந்த ஹிந்து கைது

தென்காசி மாவட்டம் செங்கோட்டையைச் சேர்ந்தவர் விவேக் ஆனந்தன். அவர் ஒரு கிறிஸ்தவர் வெளியிட்ட வீடியோவை பேஸ்புக்கில் பகிர்ந்தார். அந்த வீடியோவில் பேசிய கிறிஸ்தவர் குரான், ஹதீஸ் போன்ற இஸ்லாமிய நூல்களை மேற்கோள் காட்டி முகமது நபியை பெண் பித்தர் என்று பேசி இருந்தார். இந்த வீடியோவை பகிர்ந்த குற்றத்திற்காக ஜனவரி 9 2026 அன்று கைது செய்து தென்காசி கிளைச் சிறையில் அடைத்தது தமிழக காவல்துறை. விவேக் ஆனந்தனை கைது செய்த காவல்துறையினர் இந்த வீடியோவை வெளியிட்ட கிறிஸ்தவரை இன்று வரை கைது செய்யவில்லை. அந்த கிறிஸ்தவர் அளித்த ஆதாரங்களின் உண்மை தன்மையை சரிபார்க்க கூட காவல்துறை முனையவில்லை. சனாதனத்தை ஒழிப்பேன் என்று சொன்ன உதயநிதி துணை முதல்வராக இருக்கலாம். ஆனால் சான்றுகளுடன் வெளியிடப்பட்ட முகமது நபி குறித்த வீடியோவை பகிர்ந்த அப்பாவி ஹிந்து சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். ஹிந்துக்களை குறித்து அவதூறு பேசினாலும், அழிப்போம் என்று பகிரங்கமாக அறிவித்தாலும் குற்றமில்லை. ஆனால் இஸ்லாத்தில் உள்ள கசடுகளை மேற்கோள் காட்டிய வீடியோவை பகிர்ந்தால் குற்றவாளி!

**செய்தி: பராசக்திப் படத்தை தடை செய்ய வேண்டும் தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் கோரிக்கை**

**சிந்தனை**

பொய்யான பல தகவல்கள் இடம் பெற்றிருப்பது உண்மை! காங்கிரஸ் தலைவர்களை தவறாக சித்தரித்துள்ளார்கள். இதைக் கண்டிக்காத ராகுல் ஜனநாயகன் பட சென்சார் உத்தரவை கண்டித்திருக்கிறார். தொண்டர்களை மீண்டும் கைகழுவிய ராகுல்

**செய்தி:**

**லண்டனில் படிக்கும் UAE மாணவர்களுக்கு உதவித்தொகையை ரத்து செய்தது UAE**

**சிந்தனை**

அடிப்படைவாத இஸ்லாத்தால் அமீர்களுக்கு ஆபத்து என்பதை உணர்ந்து எடுத்த நடவடிக்கை இது! சர்வதேச இஸ்லாம் உலகிற்கு ஆபத்து என்பதை முஸ்லீம் நாடு ஒப்புக்கொண்டுள்ளது. இதை அடியொற்றி உலகநாடுகள் குறிப்பாக இந்தியா செயல்படுமா?

**செய்தி:**

**குன்றத்தூர் முருகன் கோயிலில் கிறிஸ்தவப் பெண்கள் மதமாற்ற நோட்டீஸ் விநியோகம் - பக்தர்கள் எதிர்ப்பு**

**சிந்தனை**

குடியிருப்பு பகுதிகள் பொது இடங்கள் என்று மத பிரச்சாரத்துடன் ஹிந்துக்களை இழிவுபடுத்தும் செயல்களில் ஈடுபடும் கிறிஸ்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காததால் கோவில்களையும் ஆக்ரமிக்கின்றனர். ஈஷா மையம், காளையர் கோவில், மதுரை மீனாட்சி கோவில் என்று தொடரும் அராஜகம்

செய்
சிந்த

**செய்தி:**

**பல்லாவரம் கன்டோன்மென்**
**திற்கு அனுமதியா?**

**சிந்தனை**

மத்திய அரசின் கட்டுப்பாட்டி
நிர்வகிக்கப்படும் அரங்கில்
கொடுப்பது சட்டவிரோதமாகு
அறியாமையில் இருக்க வேண்
இருக்க வேண்டும். எப்படி
வேண்டும்!

**செய்தி:**

**திருவல்லிக்கேணி**
**வளைவு கட்ட முஸ்**

**சிந்தனை**

முஸ்லீம்கள் எண்
பண்பாட்டிற்கும்,
முடிவு. ஹிந்துக்
முஸ்லீம்கள் தடுத்
முஸ்லீம்களுக்கு
வேடிக்கைப் பார்

# ...திகள்
# ...னைகள்

செய்தி:

**ஸ்டான் சாமிக்கு ஒரு நியாயம், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஒரு நியாயமா? - நீதிமன்றம் கேள்வி**

**சிந்தனை**

தேசியத்தைக் காத்த நீதிமன்ற தீர்ப்பு! வெள்ளையன் வரியை எதிர்த்து உயிர் நீத்த மறவர்களுக்கு நினைவுச் சின்னம் கூடாதாம், அவர்களைக் கொன்ற ஆங்கிலேய அடிமை யூசுப்கான் என்ற மருத நாயகத்தை கொண்டாடும் திராவிடம்!

...ட் ஹாலில் மதமாற்ற பிரச்சாரத்

...வுள்ள, அதுவும் பாதுகாப்புத் துறையால் ... மதமாற்ற பிரச்சாரத்திற்கு அனுமதி ...ம். இந்த அரங்கை நிர்வகிப்பவர்கள் ...னடும் அல்லது மதவெறி பிடித்தவராக ... இருந்தாலும் அவர்களைத் தண்டிக்க

செய்தி

**போதையில் இளைஞர்கள் செல்லாமல் பெற்றோர்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும் - ஸ்டாலின் அறிவுரை**

**சிந்தனை**

பொறுப்பைத் தட்டி கழித்துள்ளது அரசு. போதைக் குற்றங்களை மறைத்தும், மறுத்தும் மறைமுக உதவி. போதை குற்றங்களில் பெருவாரியாக சிக்குபவர்களும் திமுககாரர்களே! தான் செய்த தவறுக்கு ஊர் பரிகாரம் தேட வேண்டுமாம்!

...யில் எல்லையம்மன் கோயில் ...லீம்கள் எதிர்ப்பு

...ணிக்கை உயர்ந்தால் பாரம்பரிய ... பழக்க வழக்கங்களுக்கும் ...களின் கட்டுமானப் பணியை ...ததுடன் இடித்தது சட்டவிரோதம். ... யதேச்சதிகாரத்தை வழங்கி ...க்கும் தமிழக அரசு!

செய்தி

**வேலைக்குச் சென்றால் உயிருக்கு உத்திரவாதம் இல்லை - கதறும் அரசு பேருந்து ஓட்டுநர்கள்**

**சிந்தனை**

ஊழல் மற்றும் நிர்வாகத்திறனின்மையின் விளைவாக அடிப்படை பராமரிப்பு பணிகளைச் செய்யும் திறனின்றி தவிக்கும் போக்குவரத்துத்துறை. இவர்கள் கொள்ளையடிக்க அப்பாவி மக்களின் உயிரை பணயம் வைக்கிறார்கள். அரக்கத்தனத்தின் உச்சம்!

# அமெரிக்காவைப் போல் இந்தியா நடந்து கொள்ளலாமா?

என்.சி. பிபிந்த்ரா

2026 ஜனவரி தொடக்கத்தில், தசாப்தத்தின் மிகச்சிறந்த இராணுவத் தலையீடுகளில் ஒன்றை உலகம் கண்டது. அமெரிக்கப் படைகள் வெனிசுலாவின் தலைநகர் மீது தாக்குதல் நடத்தி, அதிபர் நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியைக் கைது செய்து, போதைப்பொருள் கடத்தல் மற்றும் "போதைப்பொருள்-பயங்கரவாதம்" (narco&terrorism) தொடர்பான ஃபெடரல் குற்றச்சாட்டுகளை சுமத்தி அமெரிக்காவிற்கு அழைத்துச் சென்றன.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்த நடவடிக்கையை மேற்கு உலகில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரு நடவடிக்கையாக நியாயப்படுத்தினார். இந்த நியாயப்படுத்துதல், சட்ட உரிமை, புவிசார் அரசியல் விதிமுறைகள், இறையாண்மை குறித்த உலகளாவிய கருத்துக்களில் ஆழமான பிளவை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் இந்த திருப்புமுனையான தருணம், 1989-ல் மானுவல் நோரிகாவைக் கைது செய்ய பனாமாவில் நடத்தப்பட்ட படையெடுப்பை நினைவூட்டுகிறது. இது லத்தீன் அமெரிக்காவிற்கு அப்பாற்பட்ட பிராந்தியங்களிலும் மூலோபாயக் கேள்விகளை எழுப்பத் தூண்டியுள்ளது. இதில் முக்கியமாக: பயங்கரவாதத்திற்கு ஆதரவளிப்பதாகவோ அல்லது பகைமையுடன் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவோ குற்றம் சாட்டப்பட்ட அண்டை நாடுகளுக்கு எதிராக மற்ற நாடுகள் இதே போன்ற தாக்குதல் நடத்துவதை சட்டப்பூர்வமாகக் கருத முடியுமா? என்ற விவாதம் தெற்காசியாவில் இந்தியாவின் இரு வரலாற்று எதிரிகளான பாகிஸ்தான் மற்றும் வங்காளதேசத்தை நோக்கித் திரும்பியுள்ளது.

வெனிசுலாவின் தலைநகரான கராகஸில் நடந்த அமெரிக்க நடவடிக்கையைப் பற்றி யாருக்கு என்ன கருத்து இருந்தாலும், அது ஒரு சர்ச்சைக்குரிய முன்னுதாரணத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மை. அமெரிக்க விமானப்படை, சிறப்புப் படைப் பிரிவுகள் மற்றும் கடற்படை வீரர்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தாக்குதலில், மதுரோ மற்றும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டு நியூயார்க்கிற்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இதற்கு, அமெரிக்கா அவர்கள் நாட்டில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்காக என்று நியாயப்படுத்தினாலும், இந்த நடவடிக்கையினால் வெனிசுலாவின் இறையாண்மையை மீறியதற்காகவும் ஐநா சாசனத்தை மீறியதற்காகவும் சர்வதேச அளவில் பரவலாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் செயலை ஆதரிப்பவர்கள், அமெரிக்காவின் இந்த செயல் ஒரு கடும் அச்சுறுத்தலை எதிர்கொண்டதின் விளைவு, உலகளாவிய ரீதியில் பரவியிருந்த போதைப்பொருள் நெட்வொர்க்குகளை சிதைத்துள்ளது என்று கூறிவருகிறார்கள். விமர்சகர்களோ, இத்தகைய செயல்கள் சர்வதேச சட்டத்தின் மாண்பை சீர்குலைப்பதாகவும், பலம் பொருந்திய பெரிய நாடுகள், சிறிய நாடுகளின் தலைவர்களை ஒருதலைபட்சமாகக் கைது செய்வதற்கான ஆபத்தான முன்னுதாரணங்களை கட்டமைத்துள்ளதாக கூறுகின்றனர். இந்த கண்ணோட்டத்தில் பார்க்கும் போது, இந்தியா இப்போது புவிசார் அரசியலில் முக்கியமான பரிசீலனையை மேற்கொள்ள வேண்டி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பாகிஸ்தான் அல்லது வங்கதேசத்துடனான நீண்டகால பாதுகாப்புத் தகராறுகள் தொடர்பாக இந்தியா அவர்களை எதிர்கொண்டால், வெனிசுலா முன்னுதாரணத்தினால் இந்தியாவின் மீது பழி சுமத்தாமல் இருப்பார்களா?

பாகிஸ்தானுடனான இந்தியாவின் உறவில் நம்பிக்கையற்ற தன்மை நிலவி வருகிறது. இந்தியப் பகுதியில், குறிப்பாக ஜம்மு-காஷ்மீரில் இயங்கும் பயங்கரவாதக் குழுக்களுக்கு பாகிஸ்தான் புகலிடம், தளவாடங்கள் வழங்குதல் மற்றும் நிதி போன்றவற்றை வழங்கு வருவது குறித்த ஆதாரங்களை இந்தியா பலமுறை வழங்கியுள்ளது.பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ (ISI)-யுடன் தொடர்புடைய இந்த பயங்கரவாத குழுக்கள், பல ஆண்டுகள் பெரியளவில் திட்டமிட்டு பல பெரிய தாக்குதல்களை நடத்தி அதில் டஜன் கணக்கான பொதுமக்களையும், பாதுகாப்புப் படையினரையும் கொன்று குவித்துள்ளன இந்தியாவின் மூலோபாயக் கண்ணோட்டத்தில், இவைகள் ஏதோ ஒன்றோடொன்று தொடர்பில்லாத குற்றச் செயல்கள் அல்ல, மாறாக இந்திய நிலப்பரப்பு மற்றும் அதன் பாதுகாப்பிற்கு நேரடியாக அச்சுறுத்தல் விளைவிக்கும் வகையில் பாகிஸ்தான் அரசின் ஆதரவுடன் அல்லது அரசால் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகும்.

இந்தச் சூழலில், வருங்காலத்தில் வன்முறைகளைத் தடுக்கவும், ஸ்திரமற்ற தன்மையை

ஏற்படுத்தத் தூண்டும் நெட்வொர்க்குகளை சிதைக்கவும் கடுமையான நடவடிக்கைகள் தேவைப்படலாம் என்று பெரும்பாலான இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் வாதிடுகின்றனர். தொடர்ச்சியான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளத் தவறினால், அது அத்துமீறுபவர்களுக்கு அதிக துணிச்சலைத் தரும் என்று வாதிடும் சில உலகளாவிய பாதுகாப்பு நோக்கர்களுடன் இந்தக் கருத்து ஒத்துப்போகிறது.ஆனால், பாகிஸ்தானிற்கு எதிரான இராணுவ நடவடிக்கை என்பது அதிக ஆபத்தை விளைவிக்கக் கூடியது. இரண்டு நாடுகளிடமும் அணு ஆயுதங்கள் உள்ளன. மோதல் தீவிரமடைந்தால் பேரழிவு தரும் மோதலாக மாறக்கூடும்.மேலும், அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட உலக நாடுகள் தெற்காசியாவில் தங்களுக்கு சாதகமாக அரசியல் லாபங்களை பெற அதில் தலையிட வாய்ப்புள்ளது. இது இந்தியாவின் நேரடி இராணுவ நடவடிக்கையைச் சிக்கலாக்கும்.

பாகிஸ்தானைப் போலல்லாமல், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை இந்தியா மேல் வங்கதேசம் நடத்தியதாக வரலாறு இல்லை. இரு அண்டை நாடுகளுக்கிடையே கலாச்சார, பொருளாதார மற்றும் வரலாற்று உறவுகளைக் கொண்டுள்ளன. மேலும் 1971-ல் வங்காளதேசத்தின் சுதந்திரத்தில் இந்தியா முக்கியப் பங்கு வகித்தது.இருப்பினும்,தற்சமயம் வங்கதேசத்தில் சிறுபான்மையினர் உரிமைகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, மேலும், சீனா, பாகிஸ்தானுடான உறவுகளை மேம்படுத்திக்கொள்ள வங்கதேச அரசு எடுக்கும் முயற்சிகள் போன்றவை இந்திய வங்கதேச உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக, வங்கதேசத்தில் உள்ள இந்துக்கள் மற்றும் இதர சிறுபான்மை சமூகத்தினர் மீதான தாக்குதல்கள் இந்திய மக்களிடையே வங்கதேசத்தின் மேல் இருந்த அதிருப்தியை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. இன்னும் சொல்ல போனால், வங்க தேச இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முஹம்மது யூனுஸ் சீனப் பயணத்தின் போது, மேற்கு வங்காளத்தில் உள்ள சிலிகுரி காரிடரைத் (Siliguri Corridor) துண்டிப்பது குறித்துக் கூறிய கருத்துக்கள் இந்தியர்களை மேலும் அதிகளவில் கோபப்படுத்தியுள்ளன.இராணுவ ரீதியாகப் பலவீனமான பகுதி என்பதால் Chicken Neck என்று அழைக்கப்படுகிறது. சிலிகுரி நடைபாதை என்பது மேற்கு வங்களத்தின் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு நிலப்பகுதியாகும், இது இந்தியாவின் மற்ற நிலப்பகுதியுடன் எட்டு வடகிழக்கு மாநிலங்களை இணைக்கிறது. இந்த பாதை மிகவும் குறுகிய அதாவது 22கிமீ அகலம் மட்டுமே கொண்டது.


சில இந்திய மூலோபாய வட்டாரங்கள் இந்த முன்னேற்றங்களை இந்திய எதிர்ப்பு நிலைப்பாடாக அல்லது வெளிநாடுகளின் தலையீடாக பார்க்கின்றனர், குறிப்பாக பாகிஸ்தான் அல்லது சீனாவின் மூலோபாய நலன்களும், வங்கதேசத்தின் கொள்கை முடிவுகளுடன் ஒத்து போவதில் இருந்து இது மேலும் உறுதியாகிறது.வெனிசுலா மீதான நடவடிக்கை இறையாண்மை மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்கு இடையிலான மோதலை வெளிப்படுத்தியுள்ளது. வெனிசுலாவில் அமெரிக்கா செய்த இந்த தலையீடு பல நாடுகளால் சட்டவிரோத அத்துமீறிய செயல்களாகக் கண்டிக்கப்பட்டன, இருப்பினும் டிரம்ப் நிர்வாகம் அவற்றைச் சட்டப்பூர்வ பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்று சித்தரித்து நியாயம் கற்பித்தது.

இது போல், பாகிஸ்தான் அல்லது வங்கதேசத்திற்கு எதிராக இந்தியா தன் பலத்தைப் பயன்படுத்த நினைத்தால், உலகளாவிய எதிர்வினை இந்தியாவின் சட்ட மற்றும் தார்மீகக் கோரிக்கைகளின் வலிமையைப் பொறுத்தே அமையும். ஐநா பாதுகாப்புச் சபையின் தெளிவான ஆதரவு அல்லது உடனடித் தற்காப்புக்கான நியாயமான காரணம் இல்லாமல் எடுக்கப்படும் தாக்குதல் நடவடிக்கைகள் பரவலான சர்வதேச விமர்சனங்களை எதிர்கொள்ள நேரிடும். அது இன்று அமெரிக்கா எதிர்கொள்ளும் சட்ட நியாய விமர்சனங்களை விட அதிகளவில் இருக்கும். அமெரிக்கப் படைகளால் நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்ட பின், நாட்டின் நடத்தை, இறையாண்மை, பயங்கரவாத எதிர்ப்பு போன்ற விஷயங்களில் சர்வதேச அளவில் சந்தேகத்திற்கு இடமின்றி ஒரு புதிய வடிவம் கொடுத்துள்ளது. ஆனால் தெற்காசியாவின் புவிசார் அரசியல் நிலப்பரப்பு மிகவும் சிக்கலானது.

இந்தியாவைப் பொறுத்தவரை, பயங்கரவாத அச்சுறுத்தல்கள் மற்றும் பகைமை நடவடிக்கைகளுக்கு எதிராக நாட்டை பாதுகாப்பது ஒரு முக்கியப் பாதுகாப்பு முன்னுரிமையாக உள்ளது. இருப்பினும், ஒரு நாட்டின் மீது குற்றம் சாட்டுவதிலிருந்து இராணுவ நடவடிக்கை எடுப்பது வரையிலான பாதை, அணுசக்தித் தடுப்பு, சர்வதேச சட்டம் மற்றும் உலகளாவிய இராஜதந்திர விளைவுகளால் பிணைக்கப்பட்டுள்ளது.பாகிஸ்தானுக்கு எதிரான இந்தியாவின் புகார்களும், வங்கதேசத்தின் பிராந்திய நிலைப்பாடுகள் குறித்த கவலைகளும் உண்மையான மூலோபாய விவாதங்களில் வேரூன்றியிருந்தாலும், இந்தியாவிற்கான சிறந்த வழிகள் இராஜதந்திரம், மூலோபாயக் கூட்டணிகள், உளவுத்துறை ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட விதிமுறைகள், பாதுகாப்பை பேணுதல் நடவடிக்கைகளிலேயே உள்ளன. இது ஏற்கனவே கொந்தளிப்பான ஒரு பிராந்தியத்தைச் ஸ்திரதன்மையை சீர்குலைக்காமல் பாதுகாப்பைப் பேண உதவும்.

# படம் சொல்லும் பாடம்

- தொகுப்பு : சி.பாண்டிக்குமார்






# பொருளாதாரம்

கோ. ரமேஷ், பொருளாதார நிபுணர்.

**உயர்தடுப்பு நிலை**

தொடர்ந்து விலை ஏறிக் கொண்டே செல்லும் ஒரு பங்கின் விலை ஒரு நிலையில் நின்று, மறுபடியும் கீழே இறங்க ஆரம்பிக்கும். அந்த மட்டம் 'உயர்தடுப்பு' (ரெஸிஸ்டன்ஸ்) நிலை எனப்படுகிறது.


இந்த ஆதரவு நிலையில் வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும். அதாவது, பங்குகளின் அளிப்பு அதிகரித்து, தேவை குறைந்து காணப்படும்.

ஒவ்வொரு விலை ஏற்றத்துக்கும் ஒரு 'உயர்தடுப்பு நிலை' உள்ளது. இவற்றை தொழில்நுட்ப ஆய்வு மூலம் கண்டு பிடிக்க முடியும். இந்த நிலையை தெரிந்து கொண்டால், பங்கின் விலை எந்த அளவு வரைக்கும் அதிகரிக்கும் என்பது தெரியும். அதை வைத்து விற்று ஆதாயம் பார்க்க வேண்டிய நிலையை முடிவு செய்துக் கொள்ளலாம்.

**ஆதரவு நிலை, உயர்தடுப்பு நிலையாக மாறுவது எப்படி?**

ஏதாவது ஒரு மோசமான விசயம் அல்லது பாதிப்பால் ஒரு குறிப்பிட்ட பங்கில் வாங்குபவர்களை (தேவை) விட விற்பவர்களின் (அளிப்பு) எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அப்போது, அந்தப் பங்கின் விலை குறைந்து அது ஆதரவு நிலையை உடைத்துக் கொண்டு, கீழே இறங்கி விடும். இந்த நிலையில், ஆதரவு நிலை என்பது உயர்தடுப்பு நிலையாக மாறி இருக்கும்.

ஆரம்பத்தில் தொழில்நுட்ப பகுப்பாய்வார்கள், பங்கின் பல்வேறு விலையை எடுத்துக் கொண்டு கிராப் ஷீட்டில் கையால் சார்ட் வரைந்து பங்கின் போக்கை கண்டறிந்தனர். இன்றைக்கு தொழில்நுட்பம் வெகுவாக வளர்ந்துள்ள நிலையில் பங்கின் விலை தெரிந்தால், நொடியில் கணினி உதவியுடன் கிராப்கள் மற்றும் சார்ட்களை வரைத்துக் கொள்ள முடியும்.மேலும், மும்பை பங்குச் சந்தை மற்றும் தேசிய பங்குச் சந்தைகள், பங்குச் சந்தை தொடர்பான இணையதளங்கள் (மணிகன்ட்ரோல், ஈக்விட்டி மாஸ்டர்,கூகுள்), இது போன்ற கிராப்கள் மற்றும் சார்ட்களை போட்டே வைத்திருக்கின்றன. அவற்றை பார்த்து முடிவு எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்.




**ஆதரவு மற்றும் உயர்தடுப்பு நிலைகளின் வலிமை**

சந்தையில் ஒரு பங்கின் விலை வேகமாக இறங்கிவருகிறது என்று வைத்துக் கொள்வோம். ஒரு விலை குறிப்பிட்ட விலையில் அதாவது நிலையில் பலர் போட்டிப் போட்டுக் கொண்டு அந்தப் பங்கை வாங்குவார்கள். அப்போது பங்கின் விலை இறக்கத்திலிருந்து தடுத்து நிறுத்தி ஆதரவு (சப்போர்ட்) கொடுக்கிறார்கள். வேகமாக ஏறிச் செல்லும்போது ஒரு குறிப்பிட்ட விலையில் அதாவது நிலையில் பங்குகளை விற்று விலையை மேற்கொண்டு ஏறவிடாமல் தடுக்கிறார்கள் (ரெசிஸ்டென்ஸ்).

**பொதுவாக ஆதரவு மற்றும் உயர்தடுப்பு நிலைகளின் வலிமை இரு முறைகளில் நிர்ணயிக்கப்படுகிறது.**

முதல் முறை, ஒரு குறிப்பிட்ட விலை நிலைக்கு, எத்தனை முறை வந்து திரும்பிச் சென்றது என்பதை பொறுத்ததாக இருக்கிறது. அதாவது, ஒரு குறிப்பிட்ட ஆதரவு நிலை அல்லது உயர்தடுப்பு நிலைக்கு எத்தனை முறை அந்தப் பங்கின் விலை வந்து சென்றது என்பதைப் பொறுத்து அந்த ஆதரவு/ உயர்தடுப்பு நிலையின் வலிமை இருக்கிறது.

இரண்டாவது முறை, ஒரு ஆதரவு அல்லது உயர்தடுப்பு நிலையிலேயே எவ்வளவு நாளைக்கு பங்கின் விலை ஏற்ற இறக்கத்திலே இருக்கிறது. ஒரு தினத்தில் பல முறையா? அல்லது ஒரு வாரத்தில் பல முறையா? அல்லது ஒரு மாதத்தில் பல முறையா? அல்லது ஓராண்டில் பல முறையா? என்பதை பொறுத்து அதன் வலிமை இருக்கிறது. ஒரு தினத்தில் பல முறை முட்டி மோதி, அடுத்த நாள் அந்த நிலையைத் தாண்டி விட்டது என்றால் அந்த ஆதரவு அல்லது உயர்தடுப்பு நிலை சிறிது வலிமை கொண்டது எனலாம். இதுவே ஒரு வாரத்தில் பல முறை அல்லது ஒரு மாதத்தில் அதை விட அதிக முறை அல்லது ஒரு வருடத்தில் அதை விட அதிக முறை என்றால் அதிக வலிமையானது என்று சொல்லாம்.

பங்கின் விலை முட்டி மோதி தோல்வி அடைந்த எண்ணிக்கைகளை கொண்டும், எவ்வளவு நாட்களுக்கு அதே நிலையில் முட்டி மோதி தோல்வியுற்றது என்பதை வைத்தும் ஆதரவு நிலை மற்றும் உயர்தடுப்பு நிலையின் வலிமையை கணக்கிட முடியும்.

ஒரு ஆதரவு நிலை மிகவும் வலிமையாக

இருக்கிறது என்பதை அந்த ஆதரவு நிலையில் எத்தனை நாள் அல்லது வாரம் அல்லது மாதம் அல்லது ஆண்டு அந்தப் பங்கு தாக்குப் பிடித்து நின்றது என்பதை கொண்டு மற்றும் எத்தனை முறை அந்த விலையில் வந்து முட்டி மோதி நின்றது அல்லது திரும்பியது என்பதை வைத்து தெரிந்துகொள்ளலாம்.

ஒரு பங்கின் விலை, இறங்கு முகத்தில் இருக்கும்போது நீண்ட காலம் ஒரு குறிப்பிட்ட விலையில் நின்றுகொண்டு இறங்காமல் இருப்பதும், பலமுறை அந்தக் குறிப்பிட்ட விலையில் வந்து முட்டி திரும்பிச் செல்வதும் அந்த விலையில் அல்லது நிலையில் மிகவும் வலிமையான ஆதரவு (சப்போர்ட்) இருக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ளலாம்.


**இதை ஒரு சான்று மூலம் பார்த்தால் எளிதில் புரியும்.**

ஒரு குறிப்பிட்ட பங்கின் விலை 50 ரூபாய் முதல் 60 ரூபாய் வரையில் குறிப்பிட்ட எல்லைக்குள்ளே வர்த்தகமாகிக் கொண்டிருக்கிறது. வாரம், 15 நாள், ஒரு மாதம், 3 மாதம் வரையில் இந்த 50 ரூபாய் முதல் 60 ரூபாயில்தான் ஏறுவதும் இறங்குவதுமாக இருக்கிறது. இதற்கு என்ன பொருள்? 50 ரூபாய்க்கு இறங்கினால் பலர் வேகமாக வாங்குவதும் 60 ரூபாய்க்கு போனால் பலர் அந்தப் பங்கை விற்பதுமாக இருக்கிறார்கள் என்பதாக பொருள்.

இந்த நிலை மாற நிறுவனம் பற்றிய நல்ல அல்லது கெட்டச் செய்தி ஏதாவது வந்தால்தான் உண்டு. அல்லது வாங்குபவர்கள், விற்பவர்கள் நிலையில் மாற்றம் வர வேண்டும்.

**முடிவு எடுப்பது எப்படி?**

அடுத்து பங்கின் விலை அல்லது குறியீட்டு புள்ளியின் இறக்கமானது, ஒரு ஆதரவு நிலையை உடைத்துக் கொண்டு அதிக எண்ணிகையில்




(வால்யூம்) வர்த்தகம் நடக்கும் போது நிச்சயமாக அந்த பங்கின் விலை இன்னும் அதிகமாக இறங்கும் என்று தெரிந்துக் கொள்ளலாம்.

அதேபோல் ஒரு உயர்தடுப்பு நிலையை உடைத்துக் கொண்டு ஒரு பங்கின் விலை அல்லது குறியீட்டின் புள்ளி மேலே செல்லும்போது அந்த பங்கில்/குறியீட்டில் அதிக எண்ணிக்கையில் வர்த்தகம் நடந்தால் விலை அதிகமாக மேலேற அதிக வாய்ப்பு இருக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ளலாம்.

**பிரேக் அவுட்**

பங்கு அல்லது குறியீட்டில் வழக்கமாக வர்த்தகம் நடக்கும் எண்ணிகையை விட குறைந்த எண்ணிக்கையில் ஆதரவு நிலை அல்லது உயர்தடுப்பு நிலை உடைக்கப்பட்டால் அது பொய்யான ஒரு விலையில் எல்லை தாண்டும் சம்பவம் என்பதை முதலீட்டாளர்களும் வர்த்தகர்களும் உணர்ந்து எச்சரிக்கையாகி விடுவது அவசியம்.

இப்படி ஆதரவு நிலை மற்றும் உயர்தடுப்பு நிலையை தாண்டியும் செல்வதை ‘பிரேக் அவுட்’ (Break out) என்கிறோம். இந்த பிரேக் அவுட் உண்மையா? அல்லது மாயத் தோற்றமா? என்பதை வர்த்தக அளவு மற்றும் வர்த்தக எண்ணிக்கையை வைத்துதான் முடிவு எடுக்க முடியும்.

# ஜப்பானை முந்திய இந்தியா

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சுமார் $4.18 டிரில்லியன் அளவை எட்டியுள்ளது. இதனால், 2025 இறுதி / 2026 தொடக்கத்தில் மதிப்பிடப்பட்ட ஜப்பானின் $4.186 டிரில்லியன் GDP-யை இந்தியா முந்தியுள்ளது. தற்போதைய GDP தரவரிசையில் அமெரிக்கா, சீனா மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகள் இந்தியாவிற்கு முன் உள்ளது. வலுவான உள்நாட்டு தேவை, அதிகரிக்கும் தனியார் நுகர்வு, UPI போன்ற டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் வளர்ச்சி மற்றும் வெற்றிகரமான சீர்திருத்தங்கள் ஆகியவை வேகமான பொருளாதார




வளர்ச்சிக்கு காரணமாக உள்ளன. சர்வதேச நிதி நிறுவனம் (IMF) போன்ற அமைப்புகள், 2026 ஆம் ஆண்டில் இந்தியாவின் GDP சுமார் $4.51 டிரில்லியன் ஆகும் என கணிக்கின்றன. மேலும், 2028 ஆம் ஆண்டைச் சுற்றி மூன்றாவது இடத்திற்காக ஜெர்மனியை இந்தியா முந்தக்கூடும் எனவும் கணித்துள்ளனர். 2014 ஆம் ஆண்டில், உலக பொருளாதாரத்தில் 10வது இடத்திலிருந்த இந்தியா, இன்று 4வது இடத்தைப் பிடித்திருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

# வெற்றியும் தோல்வியும்

- **வெங்கட் பிரசாத்,** D.

அரசியல் மற்றும் விளையாட்டு ஆய்வாளர்

**பிஃபா 2026:**

பிஃபா கால்பந்து உலகக்கோப்பை, ஒலிம்பிக் போட்டிகளுக்கு அடுத்து உலகமே எதிர்நோக்கும் ஒரு மிகப்பெரிய அளவிலான பார்வையாளர்களைக் கொண்ட போட்டியாகும். இம்முறை அமெரிக்கா, கனடா, மெக்ஸிகோ ஆகிய வட அமெரிக்க நாடுகளில் ஜூன்11 முதல் ஜூலை 19, 2026 வரை நடக்கவிருக்கிறது. போட்டியை நடத்தும் 3 நாடுகளுமே இதுவரை உலகக் கோப்பை வென்றதில்லை என்பதால் இம்முறை பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

**ரொனால்டோவின் இறுதி ஃபிஃபா:**

கால்பந்து போட்டியின் ஜாம்பவான் ரொனால்டோவின் கடைசி ஃபிஃபா கோப்பை இதுவே என்பது எதிர்பார்ப்பை மேலும் கூட்டி



உள்ளது. உலகிலேயே அதிக சர்வதேச கோல்கள் அடித்த ஆண்களின் வரிசையில், 143 கோல்களுடன் முதல் இடத்தில் நிலைக்கும் ரொனால்டோ, இதுவரை உலகக் கோப்பையை வென்றிடாத போர்ச்சுகலுக்கு இந்த முறை கோப்பையை பெற்றுத் தருவாரா என்பதே விசிறிகள் எதிர்நோக்கியுள்ளனர். கடைசியாக 2006ல் அரை இறுதி வரை சென்ற போர்ச்சுகல், பிரான்சிடமும் ஜெர்மனியிடமும்(3வது இடத்துக்கான ஆட்டத்தில்) தோற்று நான்காவது இடத்தைப் பிடித்தது குறிப்பிடத்தக்கது.

**இந்திய கால்பந்து அணி:**

ரொனால்டோ மெஸ்ஸியை தொடர்ந்து அதிக சர்வதேச கோல்கள் பட்டியலில் மூன்றாவது இடத்தில் 95 கோல்களுடன் இந்தியாவின் முன்னாள் கேப்டன் சுனில் சேத்ரி இருக்கிறார் என்பது நம் அனைவருக்கும் பெருமை. ஆனால் இது நம் பலருக்கும் தெரியாது என்பது மிகுந்த வேதனைக்குரியது. Jan 11, 2026 அன்று பார்வைக்காக 2026 பிஃபா கோப்பை இந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டது., ஆனால் இந்த முறையும் இந்தியா, பிஃபா கோப்பைக்குத் தகுதி பெறவில்லை. எனவே கோப்பையை விளையாட்டு துறை இணை அமைச்சர் மன்சுக் மாண்டவியா காட்சிப்படுத்திய போது ஒரு சிறு வருத்தத்துடன் இருந்தது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் U19 அணி மிக நன்றாக விளையாடி வருவதால் விரைவில் இந்தியா பிஃபா விளையாடும் என்பதே எதிர்பார்ப்பு. 2034 அல்லது 2038 க்கான பிஃபா உலகக் கோப்பையை நடத்தும் வாய்ப்பினைப் பெற இந்திய விளையாட்டு துறை பெரும் முயற்சி எடுத்து வருகிறது.

**டி20 உலக கோப்பை 2026:**

பிப்ரவரி 2026ல் இந்தியா இலங்கையில் நடக்கவிருக்கும் டி20 உலகக்கோப்பை பற்றி இதற்கு முந்திய இதழ்களில் தெளிவாகக் கண்டோம். முதல்முறையாக ஒரு டி20 உலக கோப்பையை மறுமுறை தக்க வைத்துக் கொள்ளும் சாதனையை இந்தியா நிகழ்த்தும் என்பதே நமது கணிப்பு.

**சுழற் வீச்சின் சக்தி:**

இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 15 பேர் கொண்ட இந்திய விளையாட்டு குழுவில் தமிழகத்தின் வருண் சக்கரவர்த்தி, வாஷிங்டன் சுந்தர் ஆகியோருடன் நான்கு சுழற் பந்துவீச்சாளர்கள் இடம்பெற்று இருப்பது அணிக்கு பெரும்பலத்தை சேர்த்துள்ளது. வருணின் கணிக்க முடியாத சுழல் பந்து யுக்திகளும் குல்தீபின் தொடர் விக்கெட் வீழ்த்தும் திறனும் நமது பந்துவீச்சை எதிரணிக்கு அபாயகரமாக மாற்றி உள்ளது. இலங்கையில் இந்தியா விளையாடும் ஆட்டங்களில் கூடுதலாக ஆல்ரவுண்டர் வாஷிங்டன் சுந்தரையும் சேர்க்கும் பட்சத்தில் அக்சர் பட்டேலுடன் நான்கு சுழற் பந்துவீச்சாளர்கள் ஒரே போட்டியில் ஆட முடியும். மேலும் விவரங்களை அடுத்த இதழில் காண்போம்.

**இந்தியா நியூசிலாந்து ஒருநாள் போட்டி:**

இந்தியா நியூசிலாந்து இடையேயான முதல் ஒருநாள் போட்டியை இந்தியா வென்ற விதத்தில் நமது பேட்டிங் திறன் ஒருநாள் விளையாட்டில் மிகவும் வலுவாக இருப்பதைக் காண முடிந்தது. இந்த ஒரு நாள் தொடரையும் இந்தியா 3-0 என்று கைப்பற்றும் என்பதே நமது கணிப்பு.

# சங்கத் தமிழில் சனாதனம்

— பத்மன்



## அத்தியாயம் 3 : பத்துப்பாட்டு நூல்கள்

சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படுவை மொத்தம் 36 நூல்கள். இவை மேல்கணக்கு நூல்கள் 18, கீழ்க்கணக்கு நூல்கள் 18 என இருவகைப்படும். இந்த மேல்கணக்கு, கீழ்க்கணக்கு என்பவை, உயர்ந்தவை, தாழ்ந்தவை என்ற பொருளில் பகுக்கப்படவில்லை. காலத்தால் முற்பட்டவை மேல்கணக்கு நூல்கள் என்றும், காலத்தால் சற்று பிந்தையவை கீழ்க்கணக்கு நூல்கள் என்றும் தொகுக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் மேல்கணக்கு நூல்கள் - பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்று இரு வகைப்படும். பெயருக்கேற்ப பத்துப்பாட்டில் 10 நூல்களும், எட்டுத்தொகையில் எட்டு நூல்களும் இடம்பெற்றுள்ளன. அதற்கேற்ப இப்பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன என்று கூறுவதே பொருந்தும். நூற்றுக்கும் மேற்பட்ட அடிகளைக் கொண்ட நீண்ட பாடலாக அமைந்துள்ள நூல்களே, பத்துப்பாட்டு நூல்களாகும். இந்நூல்களை எளிதில் நினைவில் வைப்பதற்கான பழைய வெண்பா ஒன்றுண்டு :

**முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
**பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
**கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
**பாலை கடாத்தொடும் பத்து.**

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்ற கூத்தராற்றுப்படை ஆகியவையே அந்த பத்துப்பாட்டு நூல்கள். இவை அகவல் எனப்படும் ஆசிரியப் பாக்களால் ஆனவை. இந்தப் பத்துபாட்டில் சரிபாதி ஆற்றுப்படை நூல்களாக உள்ளன. ஆற்றுப்படை என்றால் ஆற்றுப்படுத்துதல் அதாவது ஒன்றை நோக்கி வழிநடத்துதல் என்று பொருள்.

பத்துப்பாட்டின் முதல் நூலே, திருமுருகாற்றுப்படை என இறைவனை நோக்கி நம்மை ஆற்றுப்படுத்தும் சனாதன நூலாகவே உள்ளது. இதனை இயற்றியவர் மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரர். இலக்கை இயம்புவதே அதாவது எடுத்துரைப்பதே இலக்கியம். அந்த வகையில் வாழ்வின் இலக்காகிய இறையருளை நோக்கி, வீடுபேற்றை நோக்கி அனைவரையும் ஆற்றுப்படுத்துவதே திருமுருகாற்றுப்படை. அதே நேரத்தில் ஒரு புலவர் மற்ற புலவர்களை ஆற்றுப்படுத்துவது போலும் அமைந்திருப்பதால், புலவராற்றுப்படை என்ற சிறப்புப்பெயரும் இதற்கு உண்டு. இது 317 அடிகளைக் கொண்டது.

பத்துப்பாட்டில் 782 அடிகளைக் கொண்டு மிகப் பெரிய பாடலாக அமைந்திருக்கும் மதுரைக் காஞ்சியும் ஒருவகையில் சனாதனே நூலே. இந்த உலகம், இதில் கிடைக்கும் செல்வம், வாழ்வு ஆகியவை நிலையற்றவை என்பதை உரைக்கும் திணையே காஞ்சித் திணை. போர்களிலும், இன்ப நுகர்வுகளிலும் அதிகம் ஈடுபட்டிருந்த பாண்டிய மன்னன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு இந்த நிலையாமையை எடுத்துரைத்து, அறத்தின்பால் திருப்பும்பொருட்டு புலவர் மாங்குடி மருதனார் இதனைப் பாடினார்.

திருமுருகாற்றுப்படை பாடிய புலவர் நக்கீரர் இயற்றிய மற்றொரு நூல், நெடுநல்வாடை. (சிலர், இவர் வேறு நக்கீரர் என்றும் கூறுவர்.) இந்த நூலும் சனதானப் பண்பாட்டைப் பறைசாற்றுகிறது. போருக்காகச் சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் பிரிவால் வாடும் தலைவி, அவன் விரைவில் வெற்றியுடன் திரும்ப வேண்டும் என்ற நோக்குடன், கொற்றவையை அதாவது துர்க்கையை வழிபட்டதைக் கூறும் இந்நூல் 188 அடிகளைக் கொண்டது.

தமிழின் சிறப்பை குறிப்பாக, களவு ஒழுக்கம் எனப்படும் காதல் வாழ்வை எடுத்துரைக்கும் விதத்தில், 261 அடிகளில், கபிலர் இயற்றிய நூல், குறிஞ்சிப் பாட்டு. எதையும் பகுத்தறியாமல், ஆரியம் - திராவிடம் என்று உருட்டும் பொய்யர்களின் முகத்திரையை குறிஞ்சிப்பாட்டின் முகவுரையான பதிகம் கிழித்தெறிகிறது. “ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்பொருட்டு அந்தணப் புலவன் கபிலர் பாடியது” என்ற அந்த வரிகள், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அந்தணர்களை ஆரிய வந்தேறிகள் என்று கூறும் அறிவிலிகளின் செவிட்டில் அறைகிறது.

காஞ்சியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த தொண்டைமான் இளந்திரையனின் கொடைச் சிறப்பு குறித்து, ஒரு பாணன் மற்றொரு பாணனுக்கு வழிகாட்டுவதைப் போல் அமைந்த நூல் பெரும்பாணாற்றுப்படை. 500 அடிகள் கொண்ட இந்நூலைப் புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றியுள்ளார். இதே புலவர், சோழப் பேரரசன்

கரிகாலன் சோழனின் சிறப்புகள் குறித்து 301 அடிகளில் இயற்றிய மற்றொரு நூல் பட்டினப்பாலை. இவ்விரண்டு நூல்களிலுமே சனாதனப் பண்பாடு பற்றிய குறிப்புகள் நிறைய உண்டு.

இதே கரிகால் சோழனைப் புகழ்ந்து, ஒரு பொருநன் மற்றொரு பொருநனை ஆற்றுப்படுத்துவதுபோல் புலவர் முடத்தாமக் கண்ணியார் பாடியிருக்கும் பாடல், பொருநராற்றுப்படை. இந்த நூல், 248 அடிகளைக் கொண்டது. ஒய்மான் என்ற நாட்டை ஆட்சி செய்துவந்த நல்லியக்கோடன் என்ற சிற்றரசனின்கொடைச்சிறப்புகளைக்கூறி, ஒருபாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துவதுபோல் புலவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடியிருப்பது சிறுபாணாற்றுப்படை. இது 269 அடிகளில் அமைந்தது.

நவிரமலைப் பகுதியை ஆண்ட நன்னன் சேய் நன்னன் என்ற குறுநில மன்னனின் வள்ளல் தன்மையைப் புகழ்ந்து, ஒரு கூத்தன் மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுத்துவதுபோல புலவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் இயற்றிய நூல் மலைபடுகடாம். இது 583 அடிகளைக் கொண்டது. பாணன், பொருநன், கூத்தன் ஆகியோர் அரசர்களையும், வள்ளல்களையும் பாடியும், ஆடிப்பாடியும் புகழ்ந்து பரிசுகளைப் பெறுகின்ற கலைஞர்கள் ஆவர். பத்துப்பாட்டில் மிகச் சிறியதான 103 அடிகளைக் கொண்ட முல்லைப் பாட்டு என்ற நூலை, காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வாணிகனார் மகனார் நப்பூதனார் என்ற புலவர் இயற்றியுள்ளார்.

அடுத்ததாக, எட்டுத்தொகை நூல்கள் எவை என்பதைக் காண்போம்....

# விநாயகர் துதி

*சீனிவாசன்*

ஐந்து கரத்தானை ஆனை முகத்தானை
ஔவைக்கு அருள் செய்தானை

ஆறுமுகன் வள்ளி மணம் முடித்தானை
அகிலாண்டநாயகி சினம் தீர்த்தானை

காவிரியைக் கொடையாய் ஈந்தானை
அரங்கனை அகிலத்திற்கு தந்தானை

ஞானப் பழத்தைப் பெற்றனை
அன்னையும் பிதாவும் உலகம் என்னானை

அரசமரத்தில் குடி கொண்டானை
மண்ணில் பிடித்தாலும்
மஞ்சளில் பிடித்தாலும்
அதில் அன்புடன் உறைந்தானை

பாலகனின் தோழனாய்
புத்தியில் சிலனாய்
பார்ப்பதற்கு எளியனாய்
தொழுவதற்கு இனியனாய் உள்ளானை

நம்மை வாழ வைத்தானை
நம் மனதில் வீற்றானை
அவன் துணை கொண்டு
ஆற்றுவோம் அரும்பணி



# நமக்கான USER MANUAL

இரா. முகுந்த கிருஷ்ணன்,
Wellness Centre for Yoga & Holistic Yogic Healing.

## நாசிகளும் பேச்சும்

சென்ற தொடரில் நமது ஞானேந்திரியங்கள் கர்மேந்திரியங்கள் என்ற வகையில் “கண்கள்-கைகள்”, சூகாதுகள்-கால்கள்சூ ஆகிய ஜோடிகளைப் பற்றிப் பார்த்தோம். அடுத்ததாக வருபவை நாசிகளும் பேச்சும். அனைத்துவிதமான வாசனைகளையும் நுகர்வதற்கு நாசிகள் உதவுகின்றன. கண்கள் வெட்டவெளியின் தன்மாத்திரையான (குணம்) ஒளியை பார்க்க உதவுவதுபோல், காதுகள் ஆகாய தத்துவத்தின் தன்மாத்திரையான ஓசையை கேட்க உதவுவதுபோல், பூமியின் தன்மாத்திரையான வாசனையை உணர நாசிகள் உதவுகின்றன. ஐம்பெரும்பூதங்களின் ஒவ்வொன்றின் இயல்பான செயலுக்கு தன்மாத்திரை என்று பெயர். வெட்டவெளியும் ஆகாயமும் ஒன்றல்ல என்பதை கடந்த தொடரிலேயே அறிந்துகொண்டோம். வெட்டவெளி ஐம்பெரும்பூதங்களுக்கு மேலானதும் அப்பாற்பட்டதுமாகும்.



ஒளி மற்றும் ஓசையைப் போலவே, வாசனையையும் தொட்டு உணர முடியாது. எனவே இது ஒரு உயர்ந்த அறிவு சார்ந்த செயலைச் செய்யக்கூடிய ஞானேந்திரியம் எனப்படுகிறது. இரண்டு கண்கள், இரண்டு காதுகள் இருப்பதுபோல் நாசிகளும் இரண்டுதான். மூக்கு என்று வழக்குச்சொல்லில் இருப்பதுபோல் இது ஒற்றை அங்கமல்ல. இடது நாசி, வலது நாசி என இரண்டும் சேர்ந்துதான் மூக்கு என்று குறிப்பிடப்படுகிறது. இந்த இரண்டு நாசிகள்தான் நம்மை இந்த இயற்கையோடும் உலகத்தோடும் இணைக்கின்றன. இடது பக்க நாசி சந்திரனிலிருந்து குளிர்ச்சியையும், வலதுபக்க நாசி சூரியனிலிருந்து சூடான உயிர்சக்தியையும் நடுநாசி அதாவது நாசிமுனை பூமியிலிருந்து நெருப்பின் உஷ்ண சக்தியையும் கிரகித்து நமது உடலுக்குள் செலுத்துகின்றன. நாம் வாழும் பூமியின் மையக்கருப் பகுதி நெருப்புக்கோளம் என்பது நாம் அறிந்ததே. நாசிகள் பூமியின் தன்மாத்திரையான வாசனையை மட்டும் கிரகிப்பதோடு நிற்காமல், பூமியிலிருந்து உஷ்ணத்தையும் நம்முள் இழுத்துச் சேர்க்கின்ற வேலையைச் செய்கின்றன.

அதையும்விட மிக முக்கியமாக, நாம் உயிர்வாழ வேண்டுமானால் சுவாசித்தாக வேண்டும். சுவாசத்திற்கான கருவி நாசிகள். நம்மைச் சுற்றியுள்ள ஆகாயத்திலிருந்தும் ஆகாயத்தின் ஊடாக நிறைந்திருக்கும் வெட்டவெளியிலிருந்தும் வெட்டவெளிக்கும் அப்பால் உள்ள சூரியனிலிருந்தும் உயிர்சக்தியை, சுவாசித்தல் என்ற செயல் மூலமாக நமக்குள் கொண்டுவந்து சேர்ப்பதே நாசிகள்தான். இந்த சுவாசம் என்ற செயல் நின்றுபோனால் மரணம்தான். ஒருவேளை நாசிகளில் கோளாறு ஏற்பட்டாலோ, ஜலதோஷம் பிடித்துக்கொண்டலோ, தற்காலிகமாக வாய்வழியாக நாம் அவ்வப்போது சிறிது காற்றை இழுத்துக்கொள்வோம். ஆனால் காலம் பூராவும் வாயினால் சுவாசிக்கமுடியாது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

இந்த நாசிகளுக்கான கர்மேந்திரியம் அல்லது செயற்கருவி பேச்சாற்றல். மனிதர்களைத் தவிர வேறு எந்த உயிரினத்திற்கும் பேச்சாற்றல் படைக்கப்படவில்லை என்பதை உணரவேண்டும். நாசிகள் இல்லையென்றால் பேசமுடியாது. வாய் திறந்தவுடன் பேசுகிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். உண்மை அதுவல்ல. பேச்சு குரல்வளையிலிருந்து நேராக வாயை வந்தடைவதில்லை. பேசுவதற்கான சக்தி நமது முதுகுத்தண்டில் அடிப்பாகத்தில் உள்ள மூலாதாரம் என்ற சக்கரத்திலிருந்து உற்பத்தியாகி, மேல்நோக்கி நகர்ந்து குரல்வளையைக் கடந்து, கடைசியாக உச்சந்தலையில் மோதி, நெற்றிப்பக்கமாக வந்து நாசிகளில் இறங்கி பின்னர் நாக்குடனும் வாயுடனும் கலந்து பேச்சாக ஒலிக்கிறது. நாம் பேசுகிறோம். பேசும்போது நமது உச்சந்தலையில் கைவைத்துப் பார்த்தோமானால் அதிர்வு ஏற்படுவதை உணர்வோம். எனவே நாசிகள் என்ற ஞானேந்திரியத்தின் செயல்கருவி, பேச்சு என்பதை அறிந்துகொள்வோம். நமது உடல் எவ்வளவு ஆச்சரியமான படைப்பு என்பதை உணர்ந்து, புகைப்பிடித்தல், மது அருந்துதல் போன்ற கேடான போதைப்பழக்கங்களிலிருந்து விடுபட்டு உடலையும் உயிரையும் போற்றி காத்துக்கொள்ள வேண்டும். கேள்விகளுக்கு (holisticyogichealing@gmail.com)

(தொடரும்)

# கூடி வாழ்தல்

**வ ரங்கநாதன்,**
*ஆளுமைத் திறன் பயிற்றுநர்*

"சார் நாங்க கூட்டுக் குடும்பமா வாழறோம்"
"வெரி குட் ! யார் யார் இருக்கீங்க?"
"நான், என் மனைவி, மகன் என் அப்பா அம்மா"

இப்படி ஆகிவிட்டது இன்றைய கூடி வாழ்தல் என்ற முறை.

கூட்டுக் குடும்பம் என்பதே காணாமல் போய் விட்டது.

இந்தியா பாகிஸ்தான் பகையைக் கூட தீர்த்து விடலாம், ஆனால் ஒரே குடியிருப்பில் இருக்கும் அடுக்குமாடி குடும்பங்களை ஒன்றாக இணைப்பது கடினம்

**ஒரே கூரையில் ஒன்றாக இருப்பதாலேயே சேர்ந்து வாழ்வது என்று ஆகாது.**

ரயிலிலும் பேருந்திலும் கூட்டமாக சென்றாலும் சேர்ந்து செல்வதாகுமா? பிரதோஷத்துக்கும் பௌர்ணமிக்கும் சபரிமலைக்கும் லட்சக்கணக்கில் பக்தர்கள் கோயிலுக்கு செல்கிறார்கள். ஆனால் கூடி ஒன்றாகவா செல்கிறார்கள்? தக்காளி மூட்டைபோல ஒன்றாக இருந்து அவிழ்த்து விட்டால் தெறிக்கத் தனித்தனியே ஓட்டம்.

**சுய நலத்தை மறந்து சமுதாயத்தோடு இணைந்து தன்னை நிறுத்திக் கொண்ட மக்கள் பாரதியர்கள்**

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என அறவுரை ஊட்டிய நாட்டில் அட்டைப் பெட்டி வீட்டுக்குள் தனித் தனியே அடங்கி விட்டோம்

பிரிட்டீஷார் சதியால் பல நூற்றாண்டுகளாகவே இந்த நோய் நம்மை பீடித்த காரணத்தால்தான் பாரதீய சமுதாயம் தாழ்வுற்று தலை குனிந்து அடிமையானது என்பதை உணர்ந்த டாக்டர் கேசவ பலிராம் ஹெட்கேவார் ஹிந்துக்கள் கூடி வாழும் பழக்கத்தை வாழ்க்கை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று தினசரி கூடுதல் என்ற பழக்கத்தை ஏற்படுத்தினார் அதன் விளைவாக நூறாண்டுகள் கடந்து, இன்றளவும் சங்கம் ஒரே இயக்கமாக இருக்கிறது

**குழுவாக செயல்பட தடையாக இருப்பன:**

1.குழு உறுப்பினருக்கு தன்னம்பிக்கை குறைவாக இருந்தால் பிறர் நம்மை வஞ்சித்து விடுவார்களோ என்ற அச்சத்தில் பட்டும் படாமல் இருப்பார்.

2.குழு உறுப்பினர்களை நம்பாமை - தன்னையே நம்பாதவன் பிறரை நம்பமாட்டான்.

3.அகம்பாவம், கெட்ட சிந்தனை குழு மனப்பான்மையை சிதைத்து விடும்

4.பொறுப்பற்ற தலைவனாலும் குழு மனப்பான்மை சிதையும்

5.குழு உறுப்பினருக்கான பொறுப்புகளை முறைப்படுத்தாததால் வரும் குழப்பம் இணைந்து வேலை செய்வதற்கு தடையாகும்

**சேர்ந்து வேலை செய்வதை சிறப்பாக்க என்ன வழி?**

1.குழுவின் மீது நிபந்தனையற்ற விசுவாசம் வைத்தல். குழு உறுப்பினர்களை நேசித்தல், பொறுமையை நம்பகத்தன்மையை உருவாக்குதல்


2.தன் கடமைகளை வழுவாது செய்தல் - குழுவின் இலக்கை அடைய தனக்கு இடப்பட்ட கட்டளைகளை தவறாமல் காலம் தாழ்த்தாமல் கருத்தோடு செய்தல்

3.பிற உறுப்பினரிடம் குறை கண்டால் பக்குவமாக அவரிடம் தனிமையில் சுட்டிக் காட்ட வேண்டும். குழுவின் மற்றவர்களிடம் இவரைப் குறைபட்டுக் கொள்ளக் கூடாது.

4.கூடுதலாக பணி செய்ய மனதை தயார் படுத்துதல் - சில சமயம் குழு உறுப்பினர் யாரேனும் சுகமில்லை எனின் அவரது பணியையும் தாற்காலிகமாக எடுத்து செய்வது நல்லது

5.பிரச்சனைகள் வந்தால் பேசித் தீர்த்துக் கொள்வது நலம்,

சுய நலமாக இல்லாமல் கூட்டுயர்வே நாட்டுயர்வு என்று சமூக பொறுப்புணர்வோடு பாரதத்தை விரைவில் விஸ்வகுரு ஆக்க பாடுபடுவோம்!



# ஆர்.எஸ்.எஸ். 100
# இந்த நாடு ஹிந்து நாடு (பகுதி 7)

இராம . வெங்கடாத்ரி

**ஒற்றுமையில் வேற்றுமை திரிபுகளின் சோதனை**

நூற்றாண்டு விழா காணும் ஆர்.எஸ்.எஸ்.- ன் அடிப்படை சித்தாந்தம் இந்த நாடு ஒரு ஹிந்து ராஷ்ட்ரம் என்பதே. இமயம் முதல் குமரி வரை இந்த நாடு ஒரே நாடு, ஒரே பண்பாடாக மனித குலம் தோன்றிய நாள் முதல் இருந்து வருகிறது என்பதைப் பல்வேறு கோணங்களில் பார்த்தோம். ஆனால், துரதிருஷ்டவசமாக இந்த நாட்டை ஒருமைப்படுத்தும் கலாச்சார அடிப்படைகளையே பிரிவினைக்கான அஜெண்டாவாக சித்தரித்து இன்றளவும் அதை நடைமுறைப்படுத்தி வருவது கிறிஸ்தவ மார்க்ஸிய கூட்டுத் திரிபுகள். அவற்றில் முருகனைப் பற்றிய புரட்டல்களை இந்தத் தொடரில் காண்போம்.

**முருகன் தமிழ்க் கடவுள்**

பொங்கல் தமிழர் விழா என்பது போலவே, முருகன் தமிழ்க் கடவுள் என்ற கருத்தியல் அடுத்து இன்னொரு பிரிவினைக்கான விதை. முருகன் தமிழர் ஆனால் அவரது அண்ணனான பிள்ளையார் வட இந்தியக் கடவுள் என்று, சிவ குடும்பத்திலேயே குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். முப்பாட்டன் முருகன் என்று முண்டாசு கட்டிய முருகனைக் காட்டி அரசியல் வித்தை காட்டவும் சிலர் இங்கே உண்டு. ஆனால் பாரத நாட்டை இணைக்கும் கடவுளாக முருகப் பெருமான் இருக்கிறார்.

**ஷேர் சிங்கின் குமாரி கொடி**

மயில்வாகனனை பெண் வடிவமாக குமாரி என்று பஞ்சாபில் வழிபடுகின்றனர். (குமார் ஆண்பால், குமாரி பெண்பால்). சீக்கியப் பேரரசின் 4வது மன்னரும், மகாராஜா ரஞ்சித் சிங்கின் அண்ணனுமான ஷேர் சிங் (கிபி1807) தனது படைகளுக்கு குமாரியும், வாராஹியும் பொறித்த போர்க்கொடிகளைப் பயன்படுத்தினார். ஷேர் சிங்கின் இந்த போர் ஓவியங்கள் இன்றும் மியூசியத்தில் உள்ளன.

**கிரவுஞ்ச மலை**

கிரவுஞ்ச மலையாக ஒளிந்த அரக்கனை முருகன் வேல் கொண்டு அழிக்கிறார். இந்த கதை கந்த புராணத்திலும் (அசுர காண்டம்), மகாபாரதத்திலும் குறிப்பிடப்பட்டு உள்ளது. கிரவுஞ்ச மலையை வேலை எறிந்து பொடிபடுத்திய விவரத்தை குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும் என்ற திருமுருகாற்றுப்படை (வெண்பா 2) பாடலில் நக்கீரர் குறிப்பிடுகிறார். கிரவுஞ்ச மலையையும்



தொளைத்துக்கொண்டு ஊடுருவிச் செல்லும்படியாக விடுவித்த வேலாயுதத்தையுடைய கந்தப்பெருமானே என்று இதே கருத்தை கந்தர் அனுபூதி பாடல் 4 - வளைபட்ட கை பாடலில், கிளைபட் டெழுகு உரமுங் கிரியுந் தொளைபட் டுருவத் தொடுவே லவனே! என்று பாடுகிறார் அருணகிரிநாதர். மேலும் அருணகிரிநாதர் பக்கரை விசித்ரமணி என்று தொடங்கும் திருப்புகழில், அக்குவடு பட்டு ஒழிய பட்டு உருவ விட்ட அருள் கை வடிவேலும் (அக்குவடு = அந்தக் குவடு) என்ற இடத்தில் கிரவுஞ்ச மலை (குவடு) மீது வேலை எறிந்த முருகப் பெருமான் என்று குறிப்பிடுகிறார்.

**கிரவுஞ்ச கிரி குமாரஸ்வாமி கோவில்**

கர்னாடக மாநிலம் பெல்லாரி அருகே கிரவுஞ்ச கிரி என்ற மலையில் உள்ள குமாரஸ்வாமி கோவில் 8ஆம் நூற்றாண்டில் சாளுக்கிய மன்னர்களால் கட்டப்பட்ட மிகப் பழமையான கோவில். கிரவுஞ்ச மலையை வேல் கொண்டு தகர்த்தது இங்குதான் என்று அந்தக் கோவிலின் தல வரலாறு கூறுகிறது. காளிதாசனின் குமார சம்பவத்திலும் இந்த மலையைப் பற்றிய குறிப்பு வருகிறது. தமிழ்ச் சங்க இலக்கியம் கூறும் கிரவுஞ்ச மலையும், பெல்லாரி க்ரவுஞ்ச கிரியும், மகாபாரதம் மற்றும் கந்த புராணம் காட்டும் கிரவுஞ்ச மலையும் ஒண்ணுதானே?

**ஞானப் பழம் பெற்றது எங்கே?**

உத்தராஞ்சல் மாநிலத்தில் தேவபிரயாகை அருகே, கேதார்நாத் செல்லும் வழியில் கனக்சௌரி என்ற மலையில் பழமையான கார்த்திக் ஸ்வாமி கோவில் உள்ளது. அம்மை அப்பனைச் சுற்றி ஞானப்பழத்தை விநாயகர் பெற்ற நிகழ்வு இங்குதான் நடந்ததாகவும், ஞானப்பழம் கிடைக்காததால்

முருகன் அங்கிருந்து கோபித்துக் கொண்டு தெற்கே கிளம்பிச் சென்றதாகவும் அந்தக் கோவிலின் தல வரலாறு கூறுகிறது. உத்தராஞ்சல் அரசாங்கத்தின் சுற்றுலாத்துறை இணையதளத்திலும் <https://uttarakhandtourism.gov.in/destination/kartik&swami&temple> இந்த தகவல் கூறப்பட்டு உள்ளது.

**கேலங்க் வாஜிர் கார்த்திக் ஸ்வாமி கோவில்**

ஹிமாசல் பிரதேசத்தில் Bharmour என்ற இடத்தில், Kugti என்ற கிராமத்தில், 10,000 அடி உயரமான மலை உச்சியில் கேலங்க் வாஜிர் கார்த்திக் ஸ்வாமி என்ற பழமையான கோவில் உள்ளது. முருகன் தாரகாசுரனை வதம் செய்வதற்கு முன், இங்கிருந்து சென்றதாக அந்தக் கோவில் வரலாறு கூறுகிறது. https://www.ehimachal.org/kelang&wazir&temple/

**சுப்ரமண்யர்**

கர்னாடக மாநிலத்தில் தக்ஷிண கன்னட மாவட்டத்தில் உள்ள குக்கே சுப்ரமணிய கோவில், மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள குமார மலையில் அமைந்துள்ளது. இந்த குமார மலையைப் பாதுகாக்கும் விதமாக இதன் அருகே ஆறு தலைப் பாம்பு வடிவில் சேஷ மலை உள்ளது. கர்னாடக மாநிலம் மட்டுமன்றி நாடு முழுவதும் சர்ப்ப தோஷ நிவர்த்தி தலமாக குக்கே சுப்ரமணியர் கோவில் இருக்கிறது.

**வங்காள முருகன்**

தேவசேனாபதி கார்த்திகேயன் என்ற பெயரில் முருகன் போர்க்கடவுளாக வங்காளத்தில் வழிபடப்படுகிறார். 3 ஆண்டுகள் தொடர்ந்து கார்த்திகேயனை வழிபட்டால், வீரம் உள்ள ஆண் மகவு பிறக்கும் என்று வங்காளப் பெண்கள் நம்புகின்றனர். வெற்றி வடிவேலன் அவனுடை வீரத்தினைப் புகழ்வோம் என்ற பாரதியாரின் வரிகளை இங்கே பொருத்திப் பார்க்கலாம். தமிழகத்தைப் போலவே, குழந்தைப் பேறுக்காக கார்த்திகை நோன்பு இருக்கும் வழக்கம் வங்காளம் மற்றும் ஒரிசா மாநிலங்களில் உள்ளது. கார்த்திகை அன்று முருகனுக்கு தீபம் ஏற்றும் வழக்கம் வங்காளத்தில் பல இடங்களில் நடைமுறையில் உள்ளது. வங்காளத்தின் மிகப் பிரபலமான துர்கா பூஜையில் துர்கை சிலையின் இரு புறமும் வேல் ஏந்திய கார்த்திகேயன் மற்றும் விநாயகர் சிலைகளும் கூடவே இருக்கும்.

**பெஹோவா கார்த்திகேயா கோவில், ஹரியானா**

ஹரியானாவில், மகாபாரதப் போர் நடந்த குரு க்ஷேத்ரத்திற்கு மேற்கே 27 கிலோ மீட்டர் தொலைவில், அன்றைய கால கட்டத்தில் ஓடிக்கொண்டு இருந்த சரஸ்வதி நதிக் கரையோரமாக அமைந்த பெஹோவா என்ற இடத்தில் இந்த கார்த்திகேயன் கோவில் உள்ளது. மகாபாரதப் போரில் இறந்த 18 லட்சம் வீரர்களுக்காக, கிருஷ்ணர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தருமர் ஏற்றி வைத்த இரண்டு அணையா விளக்குகள் இன்றும் அங்கே தொடர்ந்து எரிந்து கொண்டு இருக்கின்றன.

**முருகன் தமிழ்க் கடவுள் என்ற கருத்தியல் தமிழகத்தில் பரவலாக உள்ளது. ஆனால் பாரத நாட்டை இணைக்கும் கடவுளாக முருகப் பெருமான் இருக்கிறார்.**

**ஆந்திரா முருகன்**

ஆந்திராவிலோ நூற்றுக்கணக்கான இடங்களில் பிரபலமான பல சுப்ரமணிய சுவாமி கோவில்கள் உள்ளன. விசாகன் என்றால் பட்சியின் மேல் சஞ்சரிப்பவன் என்று பொருள். வி-பட்சி, சாகன்- சஞ்சரிப்பவன். மயில் வாகனமாகக் கொண்டதாலும். ஆறு விண்மீன்களைக் கொண்ட விசாக நட்சத்திரத்தில் பிறந்ததாலும், விசாக நட்சத்திரத்தின் பிரதான தேவதையாக இருப்பதாலும் முருகப்பெருமானை விசாகன் என்றும் அழைப்பர். விசாகப்பட்டிணம் என்ற ஆந்திர துறைமுக நகரம் 2500 ஆண்டுக்கால வரலாற்றைக் கொண்டது. தற்போதைய விசாகப்பட்டினம் ஊரில் இருந்து 2 கிமீ தொலைவில் கடலில் மூழ்கிய (இன்றைக்கும் காண இயலும்) விசாகேஸ்வர் கோவில் என்ற முருகக் கடவுளின் பெயரால் இந்த ஊர் விசாகப்பட்டினம் என்று பெயர் பெற்றது.

**கீதையில் முருகன்**

சேனாதிபதிகளில் நான் கந்தன் ஆவேன் என்று பகவத் கீதை 10 வது அத்தியாயம் சுலோகம் 24 ல் ஸ்ரீகிருஷ்ணர் கூறுகிறார். ஒளிகளில் நான் சூரியன், நீர் நிலைகளில் நான் கடல்... இப்படி உயர்வான ஒப்புமைகளை சொல்லிக் கொண்டே வரும்போது பகவான் கண்ணன் சேனாதிபதிகளில் தான் கந்தன் என்று குறிப்பிடுகிறார்.

**மகாபாரதத்தில் முருகன்**

வனவாசம் சென்ற தர்மரிடம், மார்க்கண்டேய மகரிஷி முருகப்பெருமானின் வரலாற்றை எடுத்துரைத்தார். முருகனின் பெருமைகளைக் குறிப்பிடும் பத்து அத்தியாயங்கள் வனபர்வத்தில் உள்ளன. முருகனின் திருநாமங்கள், துதிப்பாடல்கள், சிவபார்வதி, கார்த்திகைப் பெண்கள் என்று முருகனைப் பற்றிய எல்லா விவரங்களும் வனபர்வத்தில் கூறப்பட்டுள்ளது.

**முருகன் யார்?**

முருகன் தமிழ்க் கடவுளா? உத்தராஞ்சல் கடவுளா, ஹிமாச்சல் பிரதேச கடவுளா, கர்னாடக கடவுளா, ஆந்திரக் கடவுளா, பஞ்சாப் கடவுளா, வங்காளிகளின் கடவுளா, ஒரிசா கடவுளா, ஹரியானா கடவுளா எது சரி என்ற முடிவை உங்களுக்கே விட்டு விடுகிறேன்.

(தொடரும்)

# இரண்டாம் பாரதியின் எழுச்சி கீதங்கள் - பகுதி 3




திருமலை

**இரண்டாவது பாரதி**

மகாகவி சுப்ரமணிய பாரதியாருக்குப் பிறகு, தமிழிலே அதிகமான தேசபக்திப் பாடல்களை எழுதிய தேசியக் கவி, இரண்டாவது பாரதி என்று அழைக்கப்படுபவர் இந்து முன்னணி - நிறுவன அமைப்பாளர் வீரத்துறவி இராம.கோபாலன்ஜி அவர்கள். நமது நாடு சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் அவர் எழுதிய பாடல் இரவு கழிந்தது இரவி எழுந்தான். அந்தப் பாடலின் முதல் இரு பத்திகள் குறித்த விளக்கங்களை சென்ற பகுதிகளில் பார்த்தோம்,

**இன்று சிந்திக்க இருக்கும் பாடல் வரிகள்**

**வேதமுழக்கம் ஞான விளக்கம்**
**நரவுருவில் நடமாடிடும் தெய்வம்**
**கதையல்ல மிகையல்ல கற்பனையல்ல**
**கண்ணாரக் காண்பாய் நீ சற்றே பொறுப்பாய்.**

என்ற பத்தியில் வரும், வேதமுழக்கம் ஞான விளக்கம் என்பதைப் பற்றி இந்தக் கட்டுரையில் ஆய்வோம்.

**வான்முகில் வழாது பெய்க**

சைவ நிகழ்ச்சிகளையும் பூஜைகளையும் நிறைவு செய்யும்போது, கச்சியப்ப சிவாச்சாரியார் எழுதிய பின்வரும் கந்த புராணப் பாடலைப் பாடி நிறைவு செய்வது வழக்கம்.

**வான் முகில் வழாது பெய்க மலி வளம் சுரக்க மன்னன்**
**கோன் முறை அரசு செய்க குறைவு இலாது உயிர்கள் வாழ்க**
**நான் மறை அறங்கள் ஓங்க நல் தவம் வேள்வி மல்க**

என்று எல்லா மங்களங்களையும் வேண்டும் இந்தப் பிரார்த்தனையில், மழை எப்போதும் குறைவில்லாமல் மழை பெய்ய வேண்டும்; எல்லா வளங்களும் சுரக்க வேண்டும்; மன்னன் முறையாக அரசு செலுத்த வேண்டும்; உயிர்கள் எல்லாம் குறை இன்றி வாழ வேண்டும் என்றெல்லாம் வேண்டிப் பின் இறுதியாக, வேதங்களில் சொல்லப் பட்ட அறங்கள் ஓங்க வேண்டும் தவ வேள்விகள் நிகழ வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறோம். வேத நெறிகள் தழைத்தோங்க வேண்டும் என்பது நல்ல நிறைவான மங்களகரமான வாழ்க்கைக்கு அடிப்படை.

திருஞான சம்பந்தர் ஞானப்பால் பெற்ற நிகழ்வில் சீர்காழியை வர்ணிக்கும் சேக்கிழார், வேத நெறி தழைத்தோங்க என்று அந்த ஊரை பெருமைப்படுத்தும் விதமாக சொல்வதில் இருந்து வேதங்கள் எந்த அளவு சிறப்புக்குரியவை என்பதை அறிய முடிகிறது.

**வேதம் நிறைந்த தமிழ்நாடு**

பிரிட்டிஷ் ஆட்சியில் மெட்ராஸ் பிரசிடென்ஸி என்று அழைக்கப்பட்ட காலத்திலேயே தமிழ்நாடு என்ற தீர்க்கதரிசனமாகப் பெயரிட்டு பாட்டும் பாடியவர் மகாகவி சுப்ரமணிய பாரதியார். செந்தமிழ் நாடென்னும் போதினிலே என்று தொடங்கி தமிழ்நாட்டின் ஒவ்வொரு சிறப்பாகப் பாடும் பாரதியார், தமிழகத்தின் சிறப்புகளில் ஒன்றாக வேதம் நிறைந்த தமிழ்நாடு என்று பாடுகிறார். தமிழகத்தின் பழம்பெருமை வாய்ந்த கலாச்சாரம் வேதத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் என்று பாரதி நிறுவுகிறார். பாண்டிய மன்னர் "பல் யாகசாலை முது குடுமிப் பெருவழுதி" என்ற பட்டத்தைத் தன் பெயரோடு பெருமையோடு சூட்டிக் கொண்டிக்கொண்டு வேதங்களைச் சிறப்பிக்கிறார். அந்தணர்கள் வேதம் ஓதும் ஒலியைக் கேட்டு விழித்து எழும் மதுரை என்று மதுரையின் பெருமை பற்றி கூறப்பட்டுள்ளது.

**எதற்காக சுதந்திரம்?**

பாரதியார் எதற்காக பாரத நாடு சுதந்திரம் அடைய வேண்டும் என்பதைத் தெளிவாக உணர்த்துகிறார்.

**"சுதந்திர தேவியின் ஒளி பெறாவிடில் அங்கு**
**அறிவுண்டோ, ஆக்கமுண்டோ?**
**காவிய நூல்கள், ஞானக் கலைகள்,**
**வேதங்களுண்டோ?"**

என்று கேட்கிறார். மேலும் மற்றோரிடத்தில்,

**"வேத நூல் பழிக்கும் வெளித் திசை மிலேச்சர்**
**பாதமும் பொறுப்பாளோ பாரத தேவி?"**

என வினவுகிறார். ஏனெனில் அம்மிலேச்சர்,

**"மாதர் கற்பழித்தலும் மறையவர் வேள்விக்கு**
**ஏதமே சூழ்வதும் இயற்றி நிற்கின்றார்"**

எனவே பாரதி இந்தியாவிற்குச் சுதந்திரம் வேண்டியது வேத நெறி தழைக்கவும், உலகெங்கிலும் அறம் ஓங்கி வளரவும் தான்.

**பாரதியார் போற்றும் வேதம்**

"வேதம்" என்ற சொல் "வித்" என்ற சொல்லை வேராகக் கொண்டது. "வித்" என்றால் அறிதல். வேதங்கள் என்பதற்கு "உயார்வான அறிவு" என்று பொருள். அதனால்தான் பாரதியார்,

**"வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்"**

என்று பாடுகிறார். உலகின் இனிமையை நுகர வேண்டுமெனில், வேதங்கள் வகுக்கும் வாழ்க்கை முறை கடைபிடிக்க வேண்டும் என்பதை இங்கே பாரதி வெளிப்படுத்துகிறார் .

கண்ணன் ஓர் அரசன் என்ற தலைப்பில் பாரதியார் எழுதிய பாடலில்

**'வித்தை நன்கு கல்லாதவன் என்னுள்ளே வேத**
**நுட்பம் விளங்கிடச் செய்திட்டான்'**

என்று கூறுவதன் மூலம் சுடர்மிகு அறிவினைப் பெறுவதே வேத நுட்பம் என்பதை உணர்த்துகிறார்.

**வேடம் பல் கோடியோ ருண்மைக்குள வென்று**
**வேதம் புகன்றிடுமே**

என்று பாடி உண்மையை உரைப்பதே வேதம் என்று பாரதியார் எடுத்துரைக்கிறார். மேலும் அதே பாடலில்

**நாமம் பல்கோடி ஓர் உண்மைக்கு உள என்று**
**நான்மறை கூறிடுமே- ஆங்கோர்**
**நாமத்தை நீருண்மை என்று கொள்வீரென்று அந்**
**நான்மறை கண்டிலதே.**

என்று இதே கருத்தை மீண்டும் வலியுறுத்துகிறார்.

**விநாயகர் நான்மணிமாலையில்**

**தேவதேவா சிவனே கண்ணா**
**வேலா சாத்தா விநாயகா மாடா**
**இருளா சூரியா இந்துவே சக்தியே**
**வாணீ காளீ மாமகளேயோ**
**ஆணாய்ப் பெண்ணாய் அலியாய் உள்ள**
**யாதுமாய் விளங்கும் இயற்கைத் தெய்வமே**
**வேதச்சுடரே மெய்யாங் கடவுளே**

என்று பாடி, மெய்யான அறிவான இறைத்தன்மையையே வேதச்சுடர் என்று உணர்த்துகிறார் பாரதியார்.

**தமிழருக்கு என்ற உரைநடைக் கட்டுரையில்,**

**"தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே, உனக்கு நல்ல காலம் வருகின்றது..... வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு பின் நம்பு".**

என்று கூறும் பாரதி "வேதம் புதுமை செய்" என்று கூறுவதன் மூலம் வேதம் கூறும் கருத்துக்களுக்குப் புதிய துலக்கங்கள் தருதல் வேண்டும் என்கிறார்.

**ஞான விளக்கம்**

வேதம் ஹிந்துக்களின் புனித நூல் மட்டுமல்ல, அது ஒட்டுமொத்த மனித குலத்துக்கான

**விஞ்ஞானம் மெய் ஞானம் இரண்டிலும் மனித குலம் ஞான விளக்கம் பெற வேத விளக்கம் தேவை**

அறிவுப்பெட்டகம். நாத்திகவாதியாக இருந்த CARL SAGAN என்ற அமெரிக்க விஞ்ஞானி பிரபஞ்ச அறிவியலை முதலில் உலகுக்குச் சொன்னதே வேதங்கள்தான் என்று நிறுவியுள்ளார். பிரபஞ்ச அறிவியலில் வரும் Cosmic Calendar ன் எளிமைப்படுத்தப்பட்ட வடிவம்தான் "மமோபாத்த" என்று தொடங்கும் சங்கல்ப மந்திரம் என்பதை அவர் சொன்ன பிறகே நம்மால் உணர முடிந்தது. இயற்பியலில் QUANTUM PHYSICS என்ற ஆராய்ச்சிப் படிப்பின் பிதாமகன்களில் ஒருவரான NEILS BOHR, குவாண்டம் ஆராய்ச்சியின் விடை தெரியா வினாக்களுக்கான பதிலை நான் உபநிஷதங்களில் தேடுவேன் என்று கூறியிருக்கிறார். வ்யாஸோச்சிஷ்டம் ஜகத் சர்வம் - அதாவது வேதங்களைத் தொகுத்த வியாசரின் நாவினுக்குள் உலகில் உள்ள அத்தனை அறிவும் அடங்கிவிடுகிறது என்பதற்கு மேற்கூறியவை உதாரணங்கள். விஞ்ஞானம் மெய் ஞானம் இரண்டிலும் மனித குலம் ஞான விளக்கம் பெற வேத விளக்கம் தேவை.

பாரதியாரும், கச்சியப்ப முனிவரும், சேக்கிழார் பெருமானும் கூறிய வேத நெறி தழைத்தோங்க, நான் மறை அறங்கள் ஓங்கச் செய்யவேண்டும், அதன் மூலம் மனித குலமே ஞான விளக்கம் பெற வேண்டும் என்ற அவாவினை இந்தப் பாடலில் உள்ள வேதமுழக்கம் ஞான விளக்கம் என்ற வரிகள் மூலம் சொல்ல முனைந்திருக்கிறார் இரண்டாம் பாரதி ஆகிய வீரத்துறவி.

# இசை வடிவம்

**பாடலின் இசை வடிவத்திற்கு கீழே உள்ள QRCODE ஐ SCAN செய்யவும்.**

# வெளிச்சம் படாத வேர்கள்

## மருது சகோதரர்களின் வீரமும் ஜேம்ஸ் வெல்ஷின் சாட்சியமும்

யா.சு. கண்ணன்

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில், 1857 முதலாம் சுதந்திரப் போருக்குப் பல தசாப்தங்களுக்கு முன்பே, தமிழக மண்ணில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒரு மாபெரும் மக்கள் கிளர்ச்சி வெடித்தது. 1800 மற்றும் 1801-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தப் போர் “தென்னிந்தியப் புரட்சி” அல்லது “இரண்டாம் பாளையக்காரர் போர்” என்று அழைக்கப்படுகிறது.



சிவகங்கையின் மருது சகோதரர்கள் இந்த எழுச்சிக்குத் தலைமை தாங்கினர். இப்போரில் பங்கேற்ற ஆங்கிலேய அதிகாரியான கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ், தனது ‘Military Reminiscences’ (இராணுவ நினைவலைகள்) என்ற நூலில் இந்த வீரஞ்செறிந்த வரலாற்றைத் தன் கண்ணோட்டத்தில் பதிவு செய்துள்ளார்.

**புரட்சியின் பின்னணி மற்றும் கூட்டமைப்பு**

1799-இல் பாஞ்சாலங்குறிச்சியில் வீரம் விளைவித்த கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். ஆனால், அந்த நெருப்பு அணையவில்லை. மருது சகோதரர்கள் (பெரிய மருது மற்றும் சின்ன மருது) ஆங்கிலேயர்களின் வர்த்தகச் சுரண்டலையும், வரி வசூலிப்பையும் எதிர்த்துத் தமிழகத்தின் பல பாளையக்காரர்களை ஒன்றிணைத்தனர்.

திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரளாவர்மா, மைசூரின் கிருஷ்ணப்ப நாயக்கர் மற்றும் விருப்பாச்சியின் மாவீரர்கள் என ஒரு “தென்னிந்தியக் கூட்டமைப்பை” அவர்கள் உருவாக்கினர். இந்த ஒருங்கிணைப்பு ஆங்கிலேயர்களுக்குப் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

**ஜம்புத் தீவு பிரகடனம்: இந்தியாவின் முதல் சுதந்திரப் பிரகடனம்**

1801 ஜூன் 12 அன்று சின்ன மருது வெளியிட்ட ‘ஜம்புத் தீவு பிரகடனம்’ இந்திய வரலாற்றுச் சிறப்புமிக்கது. திருவரங்கம் ரங்கநாதர் கோயில் சுவரிலும், ஆற்காடு நவாப்பின் திருச்சி அரண்மனை வாசலிலும் ஒட்டப்பட்ட இந்த அறிக்கை, ஜாதி, மத வேறுபாடுகளைக் கடந்து “அந்நியர்களிடமிருந்து தாய்நாட்டை விடுவிக்க” அனைத்து இந்தியர்களையும் ஒன்றிணைய அழைப்பு விடுத்தது. இதுவே இந்திய மண்ணில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக முழங்கப்பட்ட முதல் அதிகாரப்பூர்வ விடுதலைப் பிரகடனம் ஆகும்.

**களத்தில் மருது சகோதரர்கள்: ஜேம்ஸ் வெல்ஷின் வியப்பு**

கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ், சின்ன மருதுவின் நெருங்கிய நண்பராக இருந்தார். வெல்ஷுக்கு வளரி வீசவும், ஈட்டி எறியவும் கற்றுக் கொடுத்தவர் சின்ன மருதுதான். தனது நூலில் சின்ன மருதுவை ஒரு “சிறந்த பண்பாளர்” என்றும், “மக்களின் அன்பைப் பெற்ற தன்னலமற்றத் தலைவர்” என்றும் வெல்ஷ் வர்ணிக்கிறார். ஆனால், போர்க்களம் வந்தபோது கடமையின் நிமித்தம் தனது நண்பனைப் பகைவனாக எதிர்கொள்ள வேண்டிய சூழல் வெல்ஷுக்கு ஏற்பட்டது.

கட்டபொம்மனின் தம்பிகளான ஊமைத்துரை மற்றும் செவத்தையாவுக்கு மருது சகோதரர்கள் அடைக்கலம் கொடுத்தது போரைத் தீவிரப்படுத்தியது. காளையார்கோவில் காடுகளில் நடைபெற்ற கொரில்லா முறையிலான போர்முறையை எதிர்கொள்ள முடியாமல் ஆங்கிலேயப் படைகள் திணறின. குறிப்பாக, தமிழர்களின் பாரம்பரிய ஆயுதமான ‘வளரி’ (Valari) ஆங்கிலேய வீரர்களை நிலைகுலையச் செய்தது.

**சதித்திட்டமும், காளையார்கோவில் வீழ்ச்சியும்**

ஆங்கிலேயர்கள் தங்கள் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கையாண்டனர். அவர்கள் புதுக்கோட்டை மற்றும் தொண்டைமான் அரசர்களின் உதவியைப் பெற்றனர். செப்டம்பர் 1801-இல் காளையார்கோவில் காடுகளில் ஒரு பெரும் போர் நடைபெற்றது. துரோகிகளின் வழிகாட்டுதலால், அடர்ந்த காடுகளுக்குள் புகுந்த கர்னல் அக்னியூவின் படைகள் கிளர்ச்சியாளர்களைச் சூழ்ந்தன. கடும் போருக்குப் பிறகு, மருது சகோதரர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் சிறைபிடிக்கப்பட்டனர்.காளையார் கோயிலை தகர்த்து விடப்போவதாக ஆங்கிலேயர்கள் மிரட்டியதைத் தொடர்ந்து மருது சகோதரர்கள் சரணடைந்ததாகச் சொல்வதுண்டு.

**திருப்பத்தூர் தூக்குமேடையும் துயர முடிவும்**

அக்டோபர் 24, 1801 அன்று ராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூர் கோட்டையில் ஒரு பெரும் கொடுமை நிகழ்ந்தது. மருது சகோதரர்கள் மட்டுமல்லாது, அவர்களது பிள்ளைகள், பேரன்கள் என ஒட்டுமொத்தக் குடும்பமும்,

அவர்களின் நெருங்கிய தளபதிகளும் ஒரே நாளில் தூக்கிலிடப்பட்டனர். இவர்களில் சின்ன மருதுவின் இளைய மகன் துரைசாமி மட்டும் மிகச் சிறிய வயது என்பதால் விடுவிக்கப்பட்டு, பின்னர் பெனாங்கு தீவிற்கு (மலேசியா) நாடு கடத்தப்பட்டார். நவம்பர் 16-இல் ஊமைத்துரையும், செவத்தையாவும் பாஞ்சாலங்குறிச்சியில் தூக்கிலிடப்பட்டனர்.

**வரலாற்றுத் தாக்கம்**

இந்தத் தோல்விக்குப் பிறகு, 1801 ஜூலை 31-இல் 'கர்நாடக உடன்படிக்கை' மூலம் ஆங்கிலேயர்கள் தமிழகத்தின் மீது நேரடி ஆட்சியைச் செலுத்தத் தொடங்கினர். பாளையக்காரர் முறை ஒழிக்கப்பட்டது. ஆனால், மருது சகோதரர்கள் விதைத்த அந்தச் சுதந்திரப் போராட்ட உணர்வு மறையவில்லை.

கர்னல் வெல்ஷ் தனது இறுதிக் குறிப்பில், தான் நேசித்த நண்பர்களான மருது சகோதரர்களைப் போர்க்களத்தில் "காட்டு விலங்குகளைப் போல வேட்டையாட வேண்டியிருந்தது" குறித்துத் தனது ஆழ்ந்த மனவேதனையைப் பதிவு செய்துள்ளார். ஒரு ஆங்கிலேய அதிகாரியின் குறிப்பிலேயே இவ்வளவு பெருமையுடன் எழுதப்பட்ட மருது சகோதரர்களின் வரலாறு, தென்னிந்தியாவின் வீரத்திற்கு என்றும் அழியாத சாட்சியாகத் திகழ்கிறது. அவர்களின் தியாகம் இன்றும் தமிழர்களின் வீர வரலாற்றில் ஒரு வீரகாவியமாகப் போற்றப்படுகிறது.

கர்னல் ஜேம்ஸ் வெல்ஷ் தனது Military Reminiscences நூலில், சின்ன மருதுவின் மகன் துரைசாமியின் நாடு கடத்தப்பட்ட துயரமான வரலாற்றைப் பதிவு செய்துள்ளார். அதன் முக்கிய விவரங்கள் இதோ:

**நாடு கடத்தப்படுதல் (1802)**

தண்டனை: 1801-ல் மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்ட பிறகு, 1802-ஆம் ஆண்டு பிப்ரவரி 11-ஆம் நாள், சின்ன மருதுவின் மகன் துரைசாமியோடு மொத்தம் 72 அல்லது 73 விடுதலைப் போராட்ட வீரர்கள் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியால் பினாங்கு தீவிற்கு (அன்றைய பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் தீவு) நாடு கடத்தப்பட்டனர். இந்ததேசப்பற்றாளர்கள் "ஆயுட்கால நாடுகடத்தல்" தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

**நாடு கடத்தப்பட்ட குறிப்பிடத்தக்க முக்கியத் தலைவர்கள்:**

- ***வேங்கன் பெரிய உடையணத் தேவர்:*** சிவகங்கையின் மன்னர். பிரிட்டிஷாரால் நாடு கடத்தப்பட்ட முதல் இந்திய அரசர் இவராவார்.
- ***பொம்மு நாயக்கர் (சின்ன லக்கையா):*** வாராப்பூர் பாளையக்காரர்.
- ***தளவாய் குமாரசாமி நாயக்கர்:*** பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்ந்தவர்.
- ***ஜெகநாத ஐயர்:*** இராமநாதபுரம் கிளர்ச்சியாளர்.
- ***குமாரத் தேவர்:*** மேலூர் பகுதியைச் சேர்ந்தவர்.
- ***ஈரலப்பத் தேவர்:*** நாங்குநேரி பகுதியைச் சேர்ந்தவர்.
- ***முத்துவீரா:*** அரங்குளம் பகுதியைச் சேர்ந்தவர்
- ***கானாடுகாத்தான் சேர்வை:*** சிவகங்கைச் சீமையின் கிளர்ச்சியாளர்களில் முக்கியமானவர்.

இவர்கள் அனைவரும் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து 'அட்மிரல் நெல்சன்' (Admiral Nelson) என்ற கப்பல் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் துரைசாமி 15 வயதே நிரம்பிய சிறுவனாக இருந்தபோது நாடு கடத்தப்பட்டார்.

துரைசாமியை நாடுகடத்துவதற்காகப் படகில் ஏற்றியபோது, அவனது முகத்தில் தெரிந்த "அன்பும் விரக்தியும் கலந்த" உணர்ச்சியைக் கண்டு தான் மிகுந்த வேதனை அடைந்ததாக வெல்ஷ் குறிப்பிட்டுள்ளார்.

- ***பயணம்:*** இவர்கள் பெனாங்கு (அன்று 'பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ்' தீவு என்று அழைக்கப்பட்டது) தீவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். 76 நாட்கள் நீடித்த இந்தப் பயணத்தில் கைதிகள் ஜோடி ஜோடியாக விலங்கிடப்பட்டு, மிக மோசமான நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.கடல் பயணத்தின் போது 5 பேரும், பினாங்கு தீவில் நிலவிய மோசமான சூழ்நிலைக் காரணமாக, 5 மாதங்களுக்கு உள்ளாகவே 32 பேரும் மரணமடைந்தனர்.
- ***துயரம்:*** பெனாங்கு சென்றடைந்ததும், துரைசாமி கடும் உழைப்பிலும், அங்கு நிலவிய மோசமான சூழ்நிலையாலும் வாடினார். ஒரு இளவரசராக வளர வேண்டியவர், அங்கு ஒரு சாதாரணக் கைதியாக நடத்தப்பட்டார்.
- **வெல்ஷின் சந்திப்பு (1818 ):** சுமார் 16 ஆண்டுகளுக்குப் பிறகு, வெல்ஷ் பெனாங்கிற்குச் சென்றபோது துரைசாமியைச் சந்தித்தார். அப்போது அவர் கண்டது ஒரு இளவரசனை அல்ல, மாறாக "நோய்வாய்ப்பட்டு, உருக்குலைந்த ஒரு முதியவரை".
- ***அடையாளம்:*** அந்த மனிதர் தட்டுத்தடுமாறித் தன் பெயரை "துரைசாமி" என்று சொன்னபோது, அது தன் இதயத்தில் ஒரு "கத்தி பாய்வதைப் போல" இருந்ததாக வெல்ஷ் உருக்கமாக எழுதியுள்ளார்.

**தாயகம் திரும்புதலும் மறைவும்**

- விடுதலை: 1820-ஆம் ஆண்டு வாக்கில், நீண்ட போராட்டத்திற்குப் பிறகு துரைசாமி உட்பட எஞ்சியிருந்த 11 கைதிகள் இந்தியா திரும்ப அனுமதிக்கப்பட்டனர்.
- மறைவு: இந்தியா திரும்பிய சில காலத்திலேயே, அதாவது 1820-ஆம் ஆண்டு மே 22-ஆம் தேதி (வைகாசி 11), துரைசாமி சிவகங்கையில் காலமானார். அவரது உடல் காளையார்கோவிலில் அடக்கம் செய்யப்பட்டது.



அவருக்குத் தீர்க்க முடியாத வியாதிகள் உண்டாயின. அவர் "த்ருச பாஸ்கரம்" என்ற நூலில் தனது அனுபவத்தை விவரிக்கையில், "மூன்று வருடங்களாகப் பலவிதமான ரஸாயனங்களையும், சிறந்த மருந்துகளையும் உட்கொண்டேன். ஆனால், நோயின் கடுமை ஒரு ரோமம் அளவுக் கூட குறையவில்லை" (ந ச லோமாப்யமீயத) என்று குறிப்பிடுகிறார்.

மருத்துவர்களே கைவிட்ட அந்த நிலையில், அவர் 'லோக பாஸ்கரனான' ஸூர்ய பகவானைச் சரணடைந்தார். அப்போது ஸூர்யனின் அருளால் ரிக் வேதத்தில் உள்ள மூன்று மந்த்ரங்களைக் கொண்டு த்ருச விதானமாக ஸூர்யனை வழிபடத் தொடங்கினார்.

என்ன ஆச்சரியம்! மரணத் தறுவாயில் இருந்த அவர் (முமூர்ஷு தசாபன்னோ), இந்த வழிபாட்டைத் தொடங்கிய இரண்டாவது நாளிலேயே உடலில் தெம்பைக் கண்டார். பத்தாவது நாளில் (தசமே திவஸே) அனைத்து நோய்களும் அவரை விட்டு முற்றிலுமாக விலகின! இதைக் கண்ட வைத்தியர்கள், "இது மநுஷ்ய சக்திக்கு அப்பாற்பட்டது" என்று வியந்தனர். அந்த நன்றிக்கடனாக அவர் இயற்றியதே 'த்ருச பாஸ்கரம்' என்னும் புத்தகம். அதில் இந்த விஷயத்தை அவரே பதிவிட்டுள்ளார்.

# தீராத வியாதிகளையும் தீர்க்கும் 'ஸ்ரீ ஸூர்ய ஆர்யா த்வாதச ஸ்துதி'

- நிதீஸ்வரன்

**முன்னுரை:**

விஞ்ஞான ரீதியாக உத்தராயண புண்ணிய காலம் முன்பே தொடங்கிவிட்டாலும், ஸூர்ய பகவான் தனுசு ராசியிலிருந்து மகர ராசிக்கு பிரவேசிக்கும் புனித நன்னாளே மகர ஸங்க்ராந்தி. இந்த நாளில் ஸூர்யனை வழிபடுவது விசேஷமானது. ஆனால், ஸூர்ய வழிபாடு என்பது ஒரு நாள் திருவிழாவோடு முடிந்துவிடக் கூடியதல்ல. "ஆரோக்யம் பாஸ்கராத் இச்சேத்" என்ற வாக்கின்படி, நமக்கு நோயற்ற வாழ்வை அருளும் ஸூர்ய பகவானை தினமும், குறிப்பாக ஞாயிற்றுக்கிழமைகளில் வழிபடுவது மிக அவசியமாகும்.

நம் வாழ்வில் ஏற்படும் கொடிய நோய்களையும், தடைகளையும் போக்க, ஸ்ரீ க்ருஷ்ணரின் மைந்தனான ஸாம்பன் அருளிய "ஸ்ரீ ஸூர்ய ஆர்யா த்வாதச ஸ்துதி" (12 ஸ்லோகங்கள்) ஒரு வரப்பிரசாதமாகும்.

ஸூர்ய வழிபாடு என்பது புராண காலத்தில் மட்டுமல்ல, சமீப காலத்திலும் மஹான்களுக்கு எப்படி உதவியது என்பதற்கு ஒரு சிலிர்க்க வைக்கும் சான்று உள்ளது.

**மஹான் பாஸ்கரராயரின் அனுபவம் :**

தேவி உபாஸகர்களில் தலைசிறந்தவரும், 'லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம்' அருளியவருமான ஸ்ரீ பாஸ்கரராயர், தேச ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்த காலத்தில் அவருக்குக் கடுமையான உடல் உபாதைகள் ஏற்பட்டன.

பல தேசங்களுக்குச் சென்று வந்த களைப்பினாலும், தட்பவெப்ப மாற்றங்களாலும் அவருக்குத் தீர்க்க முடியாத வியாதிகள் உண்டாயின.

**ஸாம்பனின் வரலாறு:**

இதேபோல், புராண காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் ஜாம்பவதிக்கும் பிறந்தவர் ஸாம்பன். இவருக்கு முற்பிறவி வினைகளாலும், சாபத்தாலும் உடலில் தீராத குஷ்ட நோய் ஏற்பட்டது. பலவிதமான மணி, மந்திர, ஔஷதங்களாலும், தீர்த்த யாத்திரைகளாலும் நோய் குணமாகவில்லை.

இறுதியில் ஸாம்பன் தன் தந்தையான ஸ்ரீ கிருஷ்ணரையே சரணடைந்தான். கிருஷ்ண பரமாத்மா அவனிடம், "ஸூர்ய உபாசனையைத் தவிர இந்நோய் நீங்க வேறு வழியில்லை" என்று கூறி, ஒரு வரலாற்றையும் கூறினார். முன்னொரு காலத்தில் குஷ்ட நோயால் அவதிப்பட்ட ஒரு பெண், அசரீரி வாக்குப்படி ஸூர்யனை உபாசித்து நோய் நீங்கப் பெற்றாள் என்பதை விளக்கி, ஸாம்பனுக்கு ஸூர்ய மந்திரங்களை உபதேசித்தார்.

தந்தையின் சொல் கேட்டு ஸாம்பன் சந்திரபாகா நதிக்கரையில் கடுந்தவம் இருந்தான். சிலநாட்களுக்குப்

பின், வானத்திலிருந்து ஒரு தங்கத் தகடு ஸாம்பன் முன் விழுந்தது. அதில் ஸூர்யனைப் போற்றும் 12 'ஆர்யா' வகை ஸ்லோகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. வாயு பகவானே இதைத் தந்ததாகக் கூறப்படுகிறது. இந்த 12 ஸ்லோகங்களையும் ஸாம்பன் பக்தி சிரத்தையுடன் ஜபித்து வந்தான். ஆச்சரியப்படத்தக்க வகையில், பன்னிரண்டே நாட்களில் அவனது கொடிய நோய் முற்றிலுமாக நீங்கியது.

**ஸ்லோகங்களின் ஸாரம்:**

வானிலிருந்து கிடைத்த அந்த 12 ஸ்லோகங்களில் உள்ள முக்கிய பிரார்த்தனைகள் இதோ:

1.இதய நோய் நீங்க: ஸூர்யன் உதிக்கும்போது ஏற்படும் செந்நிறம், நம் இதய நோய்களையும் (Heart Disease), உடலில் ஏற்படும் வெளுப்பு/மஞ்சள் காமாலை போன்ற நோய்களையும் அழிக்க வல்லது.

2.அறிவியல் அற்புதம்: "நிமிஷார்த்தேன..." என்று தொடங்கும் ஸ்லோகத்தில், அரை நிமிஷ நேரத்தில் 2200 யோஜனை தூரம் செல்லும் ஸூர்யனே என்று போற்றப்படுகிறது. இது ஒளியின் வேகத்தை துல்லியமாகச் சொல்வது வியக்கத்தக்கது.

3.மும்மூர்த்தி வடிவம்: சிவ ரூபமாக ஞானத்தையும், விஷ்ணு ரூபமாக மோக்ஷத்தையும், அக்னி ரூபமாக ஆரோக்கியத்தையும் அருள வேண்டுகிறோம்.

4.ஸர்வமும் ஸூர்யனே: வாதம், பித்தம், தோல் வியாதிகள், கண் நோய்கள், சர்க்கரை நோய் போன்றவற்றை ஸூர்யன் தன் கதிர்களால் அழிக்கிறார். தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும் அவரே விளங்குகிறார்.

**முடிவுரை:**

பாஸ்கரராயர் மற்றும் ஸாம்பன் போன்றவர்களின் வரலாறுகள் நமக்கு உணர்த்துவது ஒன்றே ஒன்றுதான். "பேர் இடி விழுந்தாற் போல் வந்த பெருநோயையே ஸூர்ய வழிபாடு தீர்த்தது என்றால், மற்ற சாதாரண வியாதிகளைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?"

எனவே, வாசகர்கள் இந்த மகர ஸங்க்ராந்தி நன்னாள் முதல், தினமும் காலையில் ஸூர்ய நமஸ்காரம் செய்து, இயன்றவரை இந்த ஸ்லோகங்களைப் பாராயணம் செய்ய வேண்டும்.

**ஸாம்பன் பாராயணம் செய்து பயனடைந்த ஸ்ரீ ஸூர்ய ஆர்யா த்வாதஸ ஸ்துதி:**

உத்யந்நத்ய விவஸ்வாநாரோஹந்நுத்தராம் திவம்
தேவ: |
ஹ்ருத்ரோகம் மம ஸூர்யோ ஹரிமாணம் சாஸூ
நாஸயது || 1 ||

நிமிஷார்தேநைகேந த்வே ச ஸதே த்வே ததா
ஸஹஸ்ரே ச |
க்ரமமாண யோஜநாநாம் நமோ(அ)ஸ்து தே
நலிநநாதாய || 2 ||

ஸிவரூபாத் ஜ்ஞாநமஹம் த்வத்தோ முக்திம்
ஜநார்தநாகாராத் |
ஸிகிரூபாச்சைஸ்வர்யம் த்வத்தஸ்சாரோக்யமிச்சாமி
|| 3 ||

கர்மஜ்ஞாந க தஸகம் மநஸ்ச ஜீவ இதி
விஸ்வஸர்காய |
த்வாதஸதா யோ விசரதி ஸ த்வாதஸமூர்திரஸ்து
முதே || 4 ||

த்வம் யஜுர் ருக் ஸாம த்வமாகமஸ்த்வம் வஷட்கார:|
த்வம் விஸ்வஸ்த்வம் ஹம்ஸ: த்வம்
பாநு:பரமஹம்ஸஸ்ச || 5 ||

த்வசி தோஷா த்ருஸிதோஷா: ஹ்ருதி தோஷா
யே(அ)கிலேந்த்ரியகதோஷா: |
தான் பூஷா ஹததோஷான் ஈஷத் ரோஷாக்நிநா தஹது
|| 6 ||

திமிரமிவ நேத்ரதிமிரம்
படலமிவாஸேஷரோகபடலம் ச |
காசமிவாதீநிகோசம் காலபிதா மம நிராகுர்யாத் || 7 ||

தர்மார்தகாமமோக்ஷப்ரதிரோதிந உக்ரவேகதாபகரான்|
மந்தீக்ருதேந்த்ரியகணான் கதான் விநாஸயது
சண்டாம்ஸூ: || 8 ||

யேந விநாந்தம் திமிரம் ஜகதேதத் யத்ர ஸதி
த்ருதபோதம் |
தம் நலிநீபர்தாரம் ஹர்தாரம் ச ஆபதாமீடே || 9 ||

யஸ்ய ஸஹஸ்ராபீஸேரபீஸூ லேஸோ
ஹிமாம்ஸூபிம்பகத: |
பாஸயதி நக்தமகிலம் கிலயது ஸவிபத்கணாநகிலான்
|| 10 ||

வாதாஸ்மரீதுர்நாம
த்வக்தோஷமஹோதரப்ரமேஹாம்ஸ்ச |
க்ரஹணீபகந்தர முகான் மஹாருஜோபி த்வம் இந
ஹரஸி || 11 ||

த்வம் ஸரணம் த்வம் மாதா த்வம் பிதா த்வம் தநம்
த்வமாசார்ய: |
த்வம் த்ராதா த்வம் ஹர்தா விபதாமர்க ப்ரஸீத மம ||
12 ||

இத்யார்யாத்வாதஸகம் ஸாம்பஸ்ய புரோ
நப:ஸ்தலாத் பதிதம் |
படதாம் பாக்யஸம்ருத்தி: ஸமஸ்தரோகக்ஷயஸ்ச
ஸ்யாத் || 13 ||

# விழாக்களும் விரதங்களும்

-செல்வம்



வசந்த பஞ்சமி, “பசந்த் பஞ்சமி”, “ஸ்ரீ பஞ்சமி” என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. மனிதன் பெறக்கூடிய மிக உயரிய செல்வம் ஞானமே. அந்த ஞானத்தை அருளும் சரஸ்வதி தேவி அவதரித்த நாளாகவே வசந்த பஞ்சமி போற்றப்படுகிறது.

புராணக் கதைகளின்படி, பிரம்மதேவர் அனைத்து உலகங்களையும் உயிரினங்களையும் படைத்தபின்பும், எதோ ஒரு குறை இருப்பதை உணர்ந்தார். அவரது படைப்புகள் அனைத்தும் அமைதியாகவும், மௌனமாகவும் இருந்தன. அதனால் சிந்தனையில் ஆழ்ந்த பிரம்மதேவர் தம் கமண்டலத்தை எடுத்தபோது, அதிலிருந்து சில துளிகள் கீழே விழுந்தன. அவை ஒன்றிணைந்து பேரொளியுடன் ஒரு மகாசக்தியாக உருவெடுத்தன. நான்கு திருக்கரங்களுடன், சுவடிகள், ஸ்படிக மாலை, வீணை ஆகியவற்றைத் தாங்கிய அழகிய தேவியாக அவர் முன் தோன்றினாள்.

அந்த தேவியே சரஸ்வதி. அவள் தன் வீணையை மீட்டி தேவகானம் இசைக்கத் தொடங்கியவுடன், உலகம் முழுவதும் ஒலி பிறந்தது. ஆறுகள் சலசலக்கும் ஒலியுடன் ஓடத் தொடங்கின. கடல் பேரிரைச்சலுடன் அலைகளை எழுப்பியது. காற்று முணுமுணுக்கும் சத்தத்துடன் வீசியது. மனிதர்கள் மொழியறிவைப் பெற்றனர். உலகம் உயிர்ப்புடன் திகழ்ந்தது.

இதைக் கண்ட பிரம்மதேவர் மகிழ்ச்சியடைந்து, வாக்வாதினி, வாகீசுவரி, பகவதி என்று சரஸ்வதியைப் போற்றித் துதித்தார். இவ்வாறு சரஸ்வதி தேவி அவதரித்த நாளே வசந்த பஞ்சமி எனக் கொண்டாடப்படுகிறது.

இந்த புனித நாளில் சரஸ்வதி தேவியை மனமார வழிபடுவதன் மூலம், ஞானம், கல்வி, கலைகள் மற்றும் அறிவு சார்ந்த துறைகளில் முன்னேற்றம் பெறலாம்; வாழ்க்கையில் உயர்ந்த நிலைகளை அடையலாம் என்பது பக்தர்களின் ஆழ்ந்த நம்பிக்கையாகும்.

தமிழகத்தில் வழக்கமாகக் கொண்டாடப்படும் சாரதா நவராத்திரியின் ஒன்பதாம் நாளையே நாம் சரஸ்வதி பூஜையாகக் கொண்டாடி வருகிறோம். அந்த நாளில் கல்வியின் தெய்வமான சரஸ்வதியைப் போற்றி, புத்தகங்கள், பேனாக்கள், கல்வி தொடர்பான அனைத்துப் பொருட்களையும் பூஜையில் வைத்து வழிபடுவது மரபாக இருந்து வருகிறது. ஆனால் வட இந்தியாவில், சியாமளா நவராத்திரி காலத்தில் வரும் வசந்த பஞ்சமி தினமே சரஸ்வதி பூஜையாகக் கருதி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

வசந்த பஞ்சமி நாளில் சரஸ்வதி தேவியின் திருவுருவம் அல்லது விக்ரகத்தை மலர்கள், சந்தனம், குங்குமம் போன்றவற்றால் அலங்கரித்து பூஜை செய்வது வழக்கம். கல்விக்குரிய பொருட்களும் அம்மனின் முன் வைக்கப்படுகின்றன. குறிப்பாக, கல்வியாண்டின் முக்கியமான தேர்வுக்காலங்கள் இந்த நாளுக்குப் பிறகே தொடங்குவதால், மாணவர்கள் மிகுந்த பக்தியுடனும் நம்பிக்கையுடனும் இந்த பூஜையில் பங்கேற்கின்றனர். மேலும், அம்மன் முன் பல்வேறு கருவிகளை வைத்து, சிறு குழந்தைகள் அவற்றில் எதைத் தேர்ந்தெடுக்கிறார்களோ, அந்தத் துறையிலேயே அவர்கள் எதிர்காலத்தில் சிறந்து விளங்குவார்கள் என்பது மக்களிடையே நிலவும் ஆழமான நம்பிக்கையாகும்.

இந்த பூஜையை மாணவர்கள் மட்டுமல்லாது, கல்வி, கலை, அறிவு சார்ந்த வளர்ச்சியை விரும்பும் அனைவருமே மேற்கொள்ளலாம். சரஸ்வதி தேவியை வெண்ணிற மலர்களால் அலங்கரித்து வழிபடுவது விசேஷமாகக் கருதப்படுகிறது. அஷ்டோத்திரங்களைச் சொல்லி அர்ச்சனை செய்து, பால் பாயசம், தேங்காய், பழங்கள் போன்றவற்றை நைவேதனமாகச் சமர்ப்பிக்கலாம்.

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

**ஜனவரி 25 – ரத சப்தமி**

சப்தமி திதி சூரிய பகவானுக்குரியதாகும். மக மாதத்தில் வரும் சுக்ல பக்ஷ சப்தமி “ரத சப்தமி” அல்லது “மக சப்தமி” என்று அழைக்கப்படுகிறது. இந்நாளில் சூரியன் தனது ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தை வடக்கு நோக்கித் திருப்புவதாகவும், இது சூரிய ஜெயந்தி என்றும் வழங்கப்படுகிறது.



இந்த நாளில் தான் சூரிய பகவான் உலகமெங்கும் ஒளியையும் அறிவையும் வழங்கத் தொடங்கினார் என்றும் நம்பப்படுகிறது. ஆகையால் இந்த நாள் சூரிய பகவானின் பிறந்த நாளாகக் கருதப்படுவதுடன், "சூரிய ஜெயந்தி" என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த நாள் மிகவும் புனிதமான நாளாகக் கருதப்படுகிறது. இந்த நாளில் சூரிய பகவானை வழிபட்டு விரதம் கடைப்பிடிப்பதன் மூலம் அனைத்து வகையான பாவங்களிலிருந்தும் விடுபடலாம் என்று நம்பப்படுகிறது. அறிந்தோ அறியாமலோ, சொற்களால், உடலால், மனத்தால், இப்பிறவியிலும் முன்பிறவிகளிலும் செய்த ஏழு வகையான பாவங்கள் இந்த நாளில் சூரிய பகவானை வழிபட்டால் நீங்கும் என்பது ஐதீகம்.

ரத சப்தமி நாளில் அருணோதய காலத்தில் நீராட வேண்டும். அப்படி அருணோதய காலத்தில் நீராடும் போது, ஏழு எருக்க இலைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த இலைகளை தலையில் ஒன்று, கண்களில் இரண்டு, தோள்பட்டைகளில் இரண்டு, கால்களில் இரண்டை என வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும். சூரிய உதயத்திற்கு முன் அருணோதய காலத்தில் நீராடுவதால் உடல் ஆரோக்கியம் பெற்று அனைத்து விதமான நோய்களிலிருந்தும் விடுபடலாம் என்று நம்பப்படுகிறது. இந்த நம்பிக்கையினால் ரத சப்தமி "ஆரோக்கிய சப்தமி" என்றும் அழைக்கப்படுகிறது. வீட்டில் நீராடுவதற்குப் பதிலாக நதி, கால்வாய் போன்ற நீர்நிலைகளில் நீராடுவது சிறந்ததாகக் கருதப்படுகிறது.

நீராடிய பின் சூரிய உதயத்தின் போது சூரிய பகவானை வழிபட்டு அவருக்கு அர்க்யதானம் (அர்க்யம்) செலுத்த வேண்டும். அர்க்யதானம் என்பது நமஸ்கார முத்திரையில் கைகளை மடித்து, சூரியனை நோக்கி நின்று, சிறிய கலசத்தில் உள்ள நீரை மெதுவாக சூரிய பகவானுக்கு அர்ப்பணிப்பதாகும். அதன் பின்னர் தூய நெய் தீபம் ஏற்றி, கற்பூரம், தூபம் மற்றும் சிவப்பு மலர்களால் சூரிய பகவானை வழிபட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலமாக நீண்ட ஆயுள், நல்ல ஆரோக்கியம் மற்றும் செல்வச் செழிப்பு கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. இந்த நாள் "அசல சப்தமி" என்றும் அழைக்கப்படுகிறது.


◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇


**ஜனவரி 26 – பீஷ்மாஷ்டமி**

மகா சுக்ல அஷ்டமி என்பது மகாபாரதம் எனும் மகத்தான இந்திய இதிகாசத்தின் மிக முக்கியமான பாத்திரங்களில் ஒருவரான பீஷ்ம பிதாமகரின் நினைவு தினமாகும். இந்த நாள் பீஷ்ம அஷ்டமி என்று அழைக்கப்படுகிறது. பீஷ்மர் வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சரிய விரதத்தை ஏற்றுக் கொண்டு அதனை கடைபிடித்தார். தந்தையின்மீது கொண்ட அதீத பக்தி மற்றும் விசுவாசத்தின் காரணமாக, தன் மரண நேரத்தைத் தானே தேர்வு செய்யும் வரம் அவருக்கு அருளப்பட்டது.

மகாபாரதப் போரில் அவர் கடுமையாக காயமடைந்த போதிலும், அந்த வரத்தின் காரணமாக உடலை உடனே துறக்கவில்லை. உடலைத் துறப்பதற்கான சுப நேரத்திற்காக அவர் காத்திருந்தார். சூரியன் தெற்கு திசையில் பயணம் செய்யும் காலமான தட்சிணாயனம் அசுப காலமாகக் கருதப்படுகிறது; அக்காலத்தில் அனைத்து சுப காரியங்களும் ஒத்திவைக்கப்படுகின்றன. சூரியன் மீண்டும் வடக்கு திசை நோக்கி பயணம் தொடங்கும் காலமே உத்தராயணம் ஆகும். அதனால், பீஷ்ம பிதாமகர் உத்தராயண காலத்திற்காக காத்திருந்து தன் உயிரை ரத சப்தமிக்கு அடுத்த நாளான அஷ்டமி நாளில் உடலைத் துறந்தார்.

பீஷ்மர் நித்ய ப்ரம்மசாரி. அவருக்கு ஸந்ததியில்லை. ஆகவே பீஷ்மாஷ்டமியன்று தகப்பனார் உள்ளவர்கள், இல்லாதவர்கள் எல்லோரும் அவருக்கு மந்திரம் சொல்லி அர்க்யம் விட வேண்டும். இதனால் கடந்த ஒரு வருட பாபங்கள் நீங்கும். இதை அனுஷ்டிக்காவிட்டால் ஒரு வருடத்து புண்ணியங்கள் நீங்கிவிடும் என்று புராணங்கள் கூறுகின்றன.





# கொன்றை வேந்தன் கதைகள்

## எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.

கலாவதி

**புரிந்து படிக்கணும்**

பள்ளிக்கூடத்தை விட்டு வீட்டுக்கு வந்ததும் ரேங்க் கார்டை நீட்டினான் சோமு. வாங்கி பார்த்ததும், "என்ன எல்லா பாடத்துலயும் அதிக மதிப்பெண் இருக்கு? ஆனா, தமிழிலும் ஆங்கிலத்திலும் மட்டும் ஏன் குறைச்சலா இருக்கு?" என்று அப்பா கேட்டார்.

"எனக்கு மத்ததெல்லாம் நல்லா வருதுப்பா. ஏனோ இலக்கணம் மட்டும் புரிய மாட்டேங்குது" என்று சோமு தலையை சொறிந்தான். "பள்ளிக்கூடத்துலயும் வீட்டுலயும் பேசற தாய்மொழி தமிழ் தானே டா, அதுல ஏன்டா உனக்கு பிரச்சினை" என்று அப்பா அதட்டியதற்கு, "அதுதான் நாம பேசறோமே. அதுக்கு மேல மொழிய ஆழமாக படிக்கறதுல ஏதாவது பிரயோஜனம் இருக்கா?" என்று அலட்சியமாக பதில் சொன்னான்.

பக்கத்தில் இருந்த அம்மா, "போன தடவை கணக்குலயும் குறைச்சலா தான் மதிப்பெண் வாங்கின? இந்த தடவை நல்லா வாங்கியிருக்கியே" என்று பாராட்ட, "கத்து தந்த பார்முலாவை மனப்பாடம் பண்ணிட்டேன். நல்ல வேளை புத்தகத்துல இருக்கற கணக்கும் அப்படியே வந்துச்சு" என்றான் சோமு.

"அப்போ கணக்கையும் புரிஞ்சு படிக்கல" என்று அம்மா முறைக்க, "அதுல தான் இப்போ மதிப்பெண் வந்துடுச்சேம்மா. அப்புறம் ஏன் திட்டறே?" என்றான். "திட்டல டா. பண்றதை புரிஞ்சு பண்ணா எப்போதும் நல்லதுன்னு சொல்றேன்" என்றாள்.

"சரி, நான் இப்போ மளிகை கடைக்கு போறேன். நிறைய பொருட்கள் வாங்க வேண்டியிருக்கு. நீயும் என் கூட வா" என்று அப்பா அழைக்க சோமுவும் உடன் புறப்பட்டான்.

அந்தப் பகுதியில் நிறைய சூப்பர் மார்கெட் இருந்தாலும், கொஞ்சம் தள்ளியிருக்கற மளிகை கடையிலதான் வாங்குவார். கேட்டால் அப்பாவுக்கு தெரிந்த இடமாம். அங்கிருக்கும் கடைக்காரரும் இவர்களிடம் அன்புடன் பேசுவார்.

அவர்கள் போகும் நேரத்தில் கூட்டம் அதிகமாக இருந்தது. மளிகைக்கடை அண்ணாவாலும் மூச்சு விட முடியவில்லை. ஒவ்வொருவரும் சொன்னதை அப்படியே ஞாபகம் வைத்து, எடுத்துக் கொடுத்தார். எவ்வளவு பொருள் வாங்கியிருந்தாலும், கடகடவென கணக்கு போட்டார். அவர் பக்கத்தில் கால்குலேட்டர் சும்மா இருந்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சோமுவுக்கு ஆச்சரியம்!

கூட்டம் குறைய அப்பா காத்திருந்தார். கடைக்காரரும் சாவகாசமாக இவர்களிடம் வந்து பட்டியல் கேட்டார். சோமுவிடமும் "என்ன படிக்கற தம்பி" என்று விசாரிக்க "8வது ண்ணா" என்றான். அவர் வழக்கம் போல கடகடெவென கணக்கு சொல்ல அப்பாவும் எடுத்துக் கொடுத்தார்.

"அண்ணா...ஒரு கேள்வி கேட்கலாமா" என்று சோமு ஆரம்பித்தான். "கேளுப்பா" என்று இவனை பார்க்க "இவ்வளவு நேரம் பக்கத்துல இருக்கற கால்குலேட்டரை கூட பார்க்காம எப்படி கணக்கு போட்டீங்க? ஆச்சரியமா இருக்குண்ணா" என்றான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்ல. நானும் 8வது வரைக்கும்தான் படிச்சிருக்கேன். ஆனா, நல்ல ஆசிரியர்கள் கிடைச்சதால புரிஞ்சு படிச்சதால இப்பவும் மனசுல நிக்குது" என்றார் கடைக்காரர்.

பொருட்களுடன் அப்பாவின் பைக்கில் பின்னாடி உட்கார்ந்ததுமே, "கணக்கையும் மொழியையும் ஏன் புரிஞ்சு படிக்க சொல்றீங்கன்னு இப்ப புரியுதுப்பா" என்றான் சோமு.



# நல்ல தொண்டில் நல்ல உள்ளம்



**திருநாவுக்கரசர்**

சமணர்களின் ஆதிக்கத்தால் பல சிவன் கோயில்கள் பாழடைந்தபோது அவற்றைப் புதுப்பிக்க வேண்டி அப்பர் பெருமான் கோயில்களில் முளைத்திருந்த புல்பூண்டுகளை உழவாரம் என்னும் கருவியால் களைந்து கோயிலைத் தூய்மையாக்கும் திருப்பணியைத் தொடங்கிவைத்தார். உழவாரம் என்னும் இக்கருவி, அரியலூர் மாவட்டம், திருக்களப்பூரில் கால்நடைகளுக்கு புல்லை செதுக்க இப்போதும் பயன்பாட்டில் உள்ளதாக அறிய முடிகிறது. அப்பர் என்கின்ற திருநாவுக்கரசரால் உழவாரத்தினால் தொடங்கப்பட்ட இந்தப்பணி அன்று முதல் உழவாரப்பணி என்று அழைக்கப்படுகிறது. அப்பர் பெருமான் எப்போதும் தோளில் இக்கருவியைச் சுமந்திருப்பார். காணும் சிவத்தலங்களை எல்லாம் உழவாரத்தினால் சீர் செய்யும் தொண்டில் எப்போதும் ஈடுபட்டிருப்பார். சிவாலயங்களில் உழவாரப் பணி செய்து முன்னோடியாக இருந்தமையால், "உழவாரத் தொண்டர்" என்றும் அப்பர் அழைக்கப்படுகிறார்.

**இன்றைய உழவாரத் தொண்டர்கள்**

அப்பர் அடி பற்றி இன்றும் பல சிவனடியார்கள் உழவாரப் பணிபுரிந்து சிவத் தொண்டு ஆற்றி வருகின்றனர். அந்த வகையில், நமசிவாய உழவாரப் பணி சாரிடபள் டிரஸ்ட் (131, பஜனை கோவில் தெரு, சூளை மேடு) என்ற பதிவு பெற்ற தொண்டு நிறுவனம், சென்னையில் நூற்றுக்கணக்கான உழவாரத் தொண்டர்களை உருவாக்கி வருகிறது. 2002 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் 10 சிவனடியார்களைக் கொண்டு திரு.வேணுகோபால் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திருப்பணி, கடந்த 24 ஆண்டுகளாக மெல்ல மெல்ல வளர்ந்து இன்று நூற்றுக்கணக்கான உழவாரத்தொண்டர்களுடன் இடைவிடாது பணியாற்றும் பேரியக்கமாக உள்ளது.

**ஒரு நாளில் ஒரு கோவில்**

உழவாரப் பணி செய்ய வேண்டிய கோவிலையும், எந்த நாளில் அந்த கோவிலுக்குச் செல்வது என்பதையும் முன் கூட்டியே திட்டமிடுகின்றனர். அந்தக் கோவில் சம்பந்தப்பட்ட பொறுப்பாளர்களிடம் அனுமதி பெறுதல், அங்கு செய்ய வேண்டிய பணிகள் என்னென்ன, உழவாரப் பணிக்கு வருபவர்கள் எண்ணிக்கை, வருபவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற வாகன ஏற்பாடு, பயண நேரத்திற்கு ஏற்றாற் போல் கிளம்ப வேண்டிய நேரம், உழவாரத் தொண்டர்களின் உணவு தயாரிப்பதற்கான மளிகைப் பொருட்கள், குடிநீர், பாத்திரங்கள், முதலுதவி... என சகலமும் முன் கூட்டியே தெளிவாகத் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. அந்த ஒரு நாளில் செய்ய வேண்டிய வேலைகள் அனைத்தும் துறை வாரியாகப் பிரிக்கப்பட்டு, துறைத் தலைவர்கள் மூலம் தனித்தனிக் குழுக்களாகச் செயல்படுத்தப்படுகிறது.

காலை 6 மணி முதல் மாலை 4 மணி வரை உழவாரப் பணியும், மாலை 4 மணி முதல் 6 மணி வரை அபிஷேக ஆராதனைகள், திருமுறைகள் ஓதுதல், கைலாய வாத்திய இசையுடன், கூட்டு வழிபாடும் நடைபெறும். சுற்றுப் பிரகாரம் செடி கொடிகளை சுத்தம் செய்தல், வெள்ளை அடித்தல், உள் பிரகாரங்களைச் சுத்தம் செய்தல், வாகனங்கள் சுத்தம் செய்தல், பூஜைப் பொருட்கள் துலக்குதல், குளம் மற்றும் நீர் நிலைகளைச் சுத்தம் செய்தல் ஆகிய திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்**

இது வரை 281 முறை உழவாரப் பணிகளை ஆற்றியுள்ள இத்திருக்கூட்டத்தின் தொண்டுப்பணிகள் சில:

- 2017 ல் 200 அடியார்களுடன் வாரணாசியில்
- 2017 ல் 800 அடியார்களுடன் ராமேஸ்வரத்தில்
- 2022 ல் 400 அடியார்களுடன் மீண்டும் வாரணாசியில் ஒரு வாரம் தங்கி சிறப்பு உழவாரப் பணி
- 2022 நவம்பரில் 1200 அடியார்களுடன் ராமேஸ்வரம் ராமநாத ஸ்வாமி ஆலயம், நந்தவனம் மற்றும் தீர்த்தங்களில் உழவாரப்பணி
- 2023ல் 248வது உழவாரப் பணி சிதம்பரம் நடராஜர் ஆலயம்
- 28-08-2016 அன்று 175 வது உழவாரப் பணி மிண்ட் தக்ஷிணாமூர்த்தி ஆலயம்
- 28-02-2021 225வது உழவாரப்பணி ஆவடி வீராபுரம் தண்டாயுதபாணி ஆலயம்
- 28-05-2023 250வது உழவாரப்பணி புழல் திருமூலநாதேஸ்வரர் ஆலயம்

# சினிமா சாரல்

- சேஷு

**"Only after absolute chaos comes absolute silence,"**

இந்த வசனம் தான் 6 எபிசோட் கொண்ட London Files வெப்சீரிஸ்க்கு முதுகெலும்பு. இங்கிலாந்து காவல்துறையின் கிரிமினல் கொலை டிடெக்டிவ் அதிகாரியாக ஓம் சிங் ( அர்ஜூன் ராம்பால் ) பணியாற்றுகிறார். அவரது வீட்டில் 14 வயது மகனுக்கான பிறந்த நாள் ஏற்பாடு செய்யப்படுகிறது. பள்ளியை விட்டு வரும் மகனுக்கு சர்ப்ரைஸாக இருக்கும் என அவரும், பிறந்த நாள் பார்ட்டிக்கு அவரது நண்பர்களும் நினைக்கும் போது, ஒவ்வொருவருக்கும் போன் வருகிறது. எல்லோரும் அலறி அடித்து பள்ளிக்கு செல்கிறார்கள். அங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டில் மாணவ, மாணவிகள் இறந்து போகிறார்கள். இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியதே ஓம் சிங்கின் மகன் என்ற காட்சியுடன் விரிகிறது வெப்சீரிஸ்.




மகன் சிறைக்குச் சென்ற நிலையில் மனரீதியாக பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வரும் ஓம் சிங்கிற்கு மிக எளிதான வழக்கு என நினைத்து கொடுக்கப்படுகிறது. இங்கிலாந்தில் சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிரான சட்ட ஆதரவாளரும், மிகப் பெரிய செய்தி நிறுவன முதலாளி அமர் ராயின் மகள் காணாமல் போன வழக்கு. இந்த வழக்கை விசாரிக்கத் தொடங்கும் ஓம் சிங்கிற்கு கிடைக்கும் தகவல்கள், சிசிடிவி காட்சிகள், மெடிக்கல் ரிப்போர்ட் என அடிப்படையில் தன் மகள் மாயாவை கொன்றதே அவர்தான் என நிரூபித்து தண்டனை பெற்றுத் தருகிறார்.

ஆனால் அந்த விசாரணையின் வளையத்தில் வேறு பல சிக்கலும், அது அவரது முந்தைய விசாரணை முடிவே தவறானது என கொண்டு செல்கிறது. கொலை செய்யப்பட்டதாக சொல்லப்பட்ட மாயா உயிரோடு இருப்பதை அவளது தோழியைத் தொடர்ந்து கண்காணிக்கும் ஓம் சிங்கிற்கு புலப்படுகிறது. இந்த உண்மையை தனது மேல் அதிகாரியிடம் சொல்லும் போது கொலை வழக்கு முடிந்து தண்டனை வாங்கி தந்த பின் இந்த வழக்கை தொடர்வது அர்த்தமற்றது என நினைக்கிறார் அந்த அதிகாரி.

ஆனால் தொடர் விசாரணையில் சட்டவிரோத குடியேறிகள் ஒரு தனியான Cult போன்ற அமைப்புடன் செயல்படுவதை கண்டுபிடிக்கிறார். புதிய குடிவரைவு சட்டத்தால் பாதிக்கப்பட்ட சட்டவிரோத குடியேறிகளைக் கொண்டு அந்த அமைப்பு இயங்குகிறது. கோபால் தத் என்பவன் தான் அதன் தலைவர். எப்படி அமெரிக்காவின் ஆண்டிஃபா அமைப்பு செயல்படுகிறதோ, கம்யூனிஸம் எப்படி சாமானியனை போராளிகளாக மாற்ற எப்படி மூளை சலவை செய்கிறதோ அதே வழிமுறையில் உரையாற்றி ஆட்சி, அதிகாரத்திற்கு எதிரான புரட்சிகர எண்ணத்தை விதைக்கிறான். மனக்குழப்பம் போராட்டமாய் உள்ளுக்குள் நடந்து, அதன் பின்னர் தெளிவு பிறக்கும் என்ற தன்னையறியும் சிந்தனையை அதிகாரத்தை வீழ்த்த "only after absolute chaos comes absolute silence," என்ற போர் முழக்கமாக தனது சித்தாந்தத்தை அவர்களின் உள்ளத்தில் ஏற்றுகிறான்.

அமர் ராயின் மகள் மாயா இறந்து போனவள் எப்படி அந்த Cult கேங்கில் போய் சேர்ந்தாள், அப்படியென்றால் மாயாவுக்கு பதில் வேறு யார் கொலை செய்யப்பட்டது. ஓம் சிங்குடன் பணியாற்றும் பெண் டிடெக்டிவ் தற்கொலை என பல ட்விஸ்ட்களுடன் கதை நிகழ்கிறது.

தற்போது உலகெங்கிலும் சட்டவிரோத குடியேறிகளால் பல பிரச்சினைகள் சந்தித்து வரும் வேளையில் 2022ல் வெளிவந்த இந்த வெப்சீரிஸ் மிக முக்கியமாக பார்க்கப்படுகிறது. சில அரசியல் காரணங்களுக்காக சட்டவிரோத குடியேறிகளுக்கு ஆதரவாக குரல்கொடுப்பதும், சில காலங்களுக்குப் பின்னால் அந்த குடியேறிகளால் உள்ளூர் மக்கள் சந்திக்கும் சிக்கலின் வீரியத்தை புரியாமல் செய்த வரலாற்றுப் பிழைகளை உணரவேண்டும்.

லண்டனின் குடியேறிகள் பிரச்சினை குறித்து பேசும் இந்த வெப்சீரிஸ், பாகிஸ்தான், ஆப்பிரிக்க முஸ்லீம் க்ரூமிங் கேங் குறித்தும் காட்டியிருந்தால் இன்னும் சற்று சுவராஸ்யமாகவும், உண்மைக்கு அருகிலும் கொண்டு போயிருக்கலாம். மெதுவாக சில காட்சிகள் நகர்ந்தாலும் ஸ்நேஹா கன்வால்கரின் இசை அதை இட்டு நிரப்புகிறது.

நேரம் கிடைக்கும் போது தவறாமல் பார்க்க வேண்டிய வெப்சீரிஸ்

Printed by Published by Padmapriya L on behalf of Padmapriya L, Published at 77/6, 10th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Printed at Chennai Offset Printers, No. 19/1 & 21/2, Kitabath Khan Bahadur Street, Ellis Road, Chennai - 600 002, Editor Padmapriya L.